
மீண்டும் கூடுக
பி. ஸி. ஜோஷி

ஜனசக்தி வெளியீடு நெ. 23

மீண்டும் கூடுக

ஆசிரியர் :

பி. ஸி. ஜோஷி

ஜனசக்தி பிரசுராலயம்,

1/6, டேவிட்ஸன் தெரு,

ஜி. டி., சென்னை.

அக்டோபர் 1944]

[விலை அணா 10.

சென்னை "ஜனசக்தி" பிரஸில் பி. ராமமூர்த்தியால் அச்சிடப்பட்டு ஜனசக்தி பிரசுராலயத்தாரால் (1/6, டேவிட்ஸன் வீதி) பிரசுரிக்கப்பட்டது.

முன்னுரை

இச்சிறு புத்தகத்தில் "பீப்பிள்ஸ்வார்" என்ற ஆங்கில வாரப் பத்திரிகையில் வெளியான சில கட்டுரைகள் மொழி பெயர்த்துத் தொடுக்கப்பட்டிருக்கின்றன. காந்தி-ஜின்னு சந்திப்புபற்றி, கம்யூனிஸ்டு கட்சியின் பொது காரியதரிசி பி. ஸி. ஜோஷி எழுதிய கட்டுரைகள் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. இவ்விரு தலைவர்களின் சந்திப்பினால் ஏற்பட்ட பலாபலன்களையும், சம்பாஷணையில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகளையும், பேச்சு முறிவடைந்த காரணங்களையும் கூறி, அடுத்தபடி முன்னேறுவதற்கு என்னசெய்வது என்பதை ஜோஷி "மீண்டும் கூடுக" என்ற கட்டுரையில் கூறுகிறார். தலைவர்கள் சந்திப்பதற்கு முன்பே, அவர்கள் எந்தப் பிரச்சினைகளைப்பற்றி விவாதித்து ஒருமுகப்பட்ட அபிப்பிராயத்துக்கு வந்தால் ஒப்பந்தம் ஏற்படும் என்பதை "தலைவர்கள் தவறக்கூடாது" என்ற கட்டுரையில் விளக்கியிருக்கிறார். இவ்விரண்டு கட்டுரைகளும் தேசத்தின் முன்னுள்ள மிக முக்கியமான பிரச்சினையில் தேசபக்தர்களும் சுதந்திரப்பிரியர்களும் ஒரு திருப்திகரமான முடிவையடைய முயற்சி செய்வதற்கு உதவும் என்று நம்புகின்றோம்.

காந்தி-ஜின்னு கடிதப் போக்குவரத்திலிருந்து முக்கியமான விஷயங்களைப்பற்றி இரு தலைவர்களுடைய அபிப்பிராயங்களையும் அவர்களுடைய வாக்கியங்களிலிருந்தே தொகுத்து நேயர்களுக்குத் தந்துள்ளோம். முஸ்லிம் லீகின் லாகூர் தீர்மானம் (பாக்கிஸ்தான் தீர்மானம்) பஞ்சாப், வங்காளம் போன்ற விடங்களில் முக்கிய ஜில்லாக்களின் ஜனத்தொகை விபரம் முதலியவற்றையும் பிரசுரித்துள்ளோம்.

இவற்றுடன் காயிதே ஆஜம் ஜின்னா, லண்டன் டேய்லி ஓர்க்கர் நிருபருக்கு அளித்த பேட்டியையும், அதில் அவர் கூறிய விஷயங்களைப்பற்றி, "பீப்பின்ஸ் வார்" தலையங்கத்தையும் இச்சிறுநூலில் தந்துள்ளோம். பாக்கிஸ்தானை ஓரளவுக்குத் தெளிவுபடுத்துவதுடன், பாக்கிஸ்தான் கோரிக்கையின் நியாயமான அடிப்படையையே வற்புறுத்தி, இந்தியர் அனைவருக்கும் பரஸ்பர சந்தேகமற்ற சுதந்திரம் வேண்டுமென்று கம்யூனிஸ்ட்டுகள் கூறுகின்றனர் என்பதை அறிந்துகொள்வதற்கும் பீ. வா. தலையங்கம் உதவுமென்று நம்புகின்றோம்.

'தலைவர்கள் தவறக்கூடாது' என்ற நூலுக்கு அபாரமான வரவேற்பு ஏற்பட்டது. பல நேயர்களுக்குப் பிரதிகள் வாங்கமுடியவில்லை. மேலும், இந்த முக்கியமான பிரச்னையைப் பற்றிய கட்டுரைகளை ஒரே நூலில் வெளியிடுவது நேயர்களுக்கு சாதகமா யிருக்குமென்பதை உத்தேசித்து இச்சிறு நூலும் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

ஜனசக்தி பிரசுராலயம்.

மீண்டும் கூடுக!

காந்திஜி-ஜின்னு பேச்சு முறிவைக்கேட்டு சுதந்திரம் விரும்பும் இந்தியரனைவரும் மனமுடைந்தனர். இந்திய விடுதலையின் விரோதிகளிடையே கொண்டாட்டம். நாட்டின் உணர்ச்சியை வெகு எளிதாகச் சொல்லவேண்டுமானுல் எல்லா ஜனங்களும் துக்கம் விசாரிக்கிருர்கள் என்று சொல்வதே பொருத்தமாயிருக்கலாம்.

அவர்கள் சந்திக்கப்போகிருர்கள் என்று கேட்டவுடன் எவ்வளவு நம்பிக்கை எழுந்ததோ அவ்வளவு தூரத்திற்கு முறிவைக்கேட்டவுடன் தூக்கிவாரிப்போட்டது.

கவலை பொதுவானதுதான்; முட்டுக்கட்டையை எதிர்த்து சுதந்திரத்திற்காகத் தேசீய ஐக்ய முன்னணி ஏற்படும் என்ற பொதுவான நம்பிக்கை புதைக்கப்பட்டதற்கு, துக்கம் விசாரிப்பவர்களில் ஒரு பகுதி மற்ற பகுதியின்மீது குற்றத்தைச் சாட்டுகிருர்கள்.

தப்பபிப்பிராயங்கள்

தங்களது நியாயமான பாக்கிஸ்தான் கோரிக்கையை மகாத்மா அவர்கள் அங்கீகரிக்கத் தயாராயில்லாததினுல் தான் பேச்சுவார்த்தை முறிந்தது என்பது லீகர்களிடையே

உள்ள பெரும்பாலான அபிப்ராயம்; அவர்கள் கண்ணோட்டத்தில் காந்திஜி இன்னும் தப்பபிப்ராயங்கள் நிறைந்த ஹிந்துவாகவே யிருக்கிறார்.

ஜனாப் ஜின்னா காங்கிரஸுடன் கூட்டு முன்னணிக்கு வருவதற்கு பயப்படுகிறார், தனது பிரிவினைக் கோரிக்கையை இந்திய சுதந்திரக் கோரிக்கையைக்காட்டிலும் பிரதானமாக முன்னால் வைக்கிறார், அவஃது பாக்கிஸ்தான் கோரிக்கையை ஜனங்களின் முடிவுக்கு விடுவதில்லை, அதனால் தான் பேச்சு முறிந்தது என்று பெரும்பாலான காங்கிரஸ்காரர்கள் எண்ணுகின்றனர்.

கம்யூனிஸ்டுகளாகிய எங்களுக்கு, லீகர்மீது காங்கிரஸ்காரர்களுக்கு உள்ள தப்பபிப்ராயமோ அல்லது காங்கிரஸ் காரரைப்பற்றி லீகர் கொண்டுள்ள தப்பபிப்ராயமோ இரண்டுமே கிடையாது. பேச்சு முறிவைப்பற்றி ஒருவருடைய நோக்கை மற்றவரிடம் சொன்னால் கிடைக்கும் பதில் என்ன? ஒருவர் மற்றவரின் கட்சி எத்தனை நியாயமற்றது என்று கோபாவேசம் கலந்த நீண்ட பிரசங்கம்.

நாட்டின் பிரதான அரசியல் ஸ்தாபனங்களாக விளங்கும் இரண்டு சகோதர கட்சிகளிலுள்ள, சுதந்திரத்திற்கு உடன் போராடும் தேசபக்தர்களுக்கு, ஒரே பிரச்னையைப் பற்றி முற்றிலும் வேறான மனோபாவம் பிறந்தால் ஒரு சாராருடைய அபிப்பிராயத்தை மற்றொரு சாரார் சரியாகப் புரிந்துகொள்ளவே இல்லையென்பதும் ஒருவரைப்பற்றி மற்றொருவருக்குப் பலவிதமான தப்பபிப்ராயங்களும் இருக்கின்றன என்பதும் தெளிவு.

வேறு வார்த்தைகளில் அதே கருத்தைச் சொன்னால் அவர்களுக்கு ஒருவருக்கொருவர் தங்கள் லட்சியத்தைப் பொது அனுபவரீதியில், பொதுலட்சியங்களின் அடிப்படையில் விளக்கிச் சொல்லமுடியவில்லை.

காங்கிரஸ்—லீக் ஒற்றுமைக்கு காரியமே கண்ணுக உழைத்து வந்துள்ள கட்சி எங்களது கட்சி மாத்திரம்தான். சென்ற இரண்டரை வருஷகாலமாக ஒருவருடைய அபிப்ராயத்தை மற்றவருக்கு எடுத்து விளக்குவதற்குப் பிரயாசைப்பட்டது நாங்கள் மட்டும்தான். முஸ்லிம்களுடைய கோரிக்கையான பாக்கிஸ்தானை காங்கிரஸ்காரர்களிடையே பரப்பியது நாங்கள்; காங்கிரஸ்காரர்களின் கோரிக்கையான தேசீய சர்க்காரையும், காங்கிரஸ் தலைவர்கள் விடுதலையின் அவசியத்தையும் லீகர்களிடையே பிரசாரம் செய்தது நாங்கள்.

அவதூறுக்கு அரண்டு விடவில்லை

காங்கிரஸ்காரர்களிடையே ஒற்றுமையை எதிர்ப்பவர்களும், ஹிந்து மனோபாவம்கொண்டவர்களும், நாங்கள் சொல்வதை யாரும் கேட்கக்கூடாது என்பதற்காக எங்கள் மீது அவதூறுகளைக் கிளப்பிவிட்டார்கள். எங்களை சர்க்காரின் கையாட்கள் என்று பொய்ப்பிரசாரம் செய்தார்கள். தனியாக விருக்கும்பொழுது மெச்சுதலாக (அவர்கள் அதை அப்படிக் கருதவில்லை) பாக்கிஸ்தான் நியாயமான கோரிக்கை என்று லீகர்களைக் காட்டிலும் மேலாக நாங்கள் ஸ்தாபிக்கிறோமென்பதாகச் சொல்லுவார்கள்.

நாங்கள் காங்கிரஸ் தலைவர்கள் விடுதலை, தேசீய சர்க்கார் கோரிக்கைகளை பிரசாரம் செய்வதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியைக் கண்டு லீகிலிருக்கும் பிற்போக்குப் பேர்வழிகள் சிலர் சீறி விழுந்தார்கள். இவர்களெல்லாம் காங்கிரஸின் ஐந்தாம்படை, உஷார் என்று லீகர்களை எச்சரித்தார்கள்.

மலைக்காமல், சோர்வறியாத உணர்ச்சியுடன், கஷ்டங்களுக்கிடையே ஒரே சீராக ஒற்றுமைக்கு மேலும் மேலும்

ஆதரவு பெற்றுவந்தோம். அதேசமயத்தில் அன்னிய சர்க்காரிடமிருந்து பெற்ற வருந்தத்தக்க அனுபவங்களும், தேசிய வாழ்வின் போக்கும் காங்கிரஸ் லீக் தலைவர்களை ஒருவரை ஒருவர் நெருங்கும்படியும் செய்தன. இக்காலம் முழுவதும் தொடர்ச்சியாக ஒற்றுமைக்கு உழைத்துவந்த நாங்களும் தேசிய ஒற்றுமை உருவாகும் சந்தர்ப்பத்தைக் கண்டு மற்றவர்களுடன் சேர்ந்து குதூகலித்தோம்.

எப்படியாவது தலைவர்கள் ஒரு சமரசத்திற்கு வந்துவிடுவார்கள், என்று ஆயிரக் கணக்கான லீக்—காங்கிரஸ் தேசபக்தர்கள், அதில் உள்ள சிக்கல்களை எண்ணுதவர்களாய், எளிதில் நம்பியதைப்போல் நாங்கள் நம்பவில்லை. நாமெல்லோரும் விரும்பும் உடன்படிக்கை ஏற்பட வேண்டுமானால் அதற்குத் தடையாக நிற்கும் எவ்வளவு சங்கடங்களை இரு தலைவர்களும் சமாளிக்க வேண்டுமென்று, 'தலைவர்கள் தவறக் கூடாது' என்ற எனது கட்டுரையில் (பீப்பிள்ஸ் வார் III. நெ. 8) எடுத்துக் கூறியிருந்தேன். நான் முன் கூட்டியே சொன்ன பிரச்னைகளிலேயே பேச்சு வார்த்தை முறிந்தது; கடிதப் போக்கு வரத்தில் இன்று அது வெளியாகிறது.

ஆதலால் இந்த வாதப்பிரதிவாதத்தில் நாங்கள் ஒரு தலைப் பட்சமாக இருக்கவில்லை என்று ஒப்புக்கொள்ள வேண்டும்; அந்த உரிமையைப் பெற்றிருக்கிறோம். அவர்களுக்கிடையில் ஒருவர் சொல்வதில் மற்றவர் செலுத்தும் கவனத்தைக்காட்டிலும் எங்களுக்கு அதிக கவனம் கொடுத்துக் கேட்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

உருப்படியான யோசனைகள் கூறுவதற்கும் நாங்கள் உரிமையை சம்பாதித்திருக்கிறோம். ஏனெனில் ஒற்றுமைக்காகப் போராடியது நாங்கள். இரு ஸ்தாபனங்களிடையே

யும் ஒவ்வொன்றினுடைய அபிப்ராயத்திற்காக மற்றைய ஸ்தாபனத்தில் இடைவிடாமல் பிரசாரம் செய்திருக்கிறோம்.

தலைவர்களின் தோல்வி, அனைவரின் தோல்வி

தலைவர்கள் சமரசத்திற்கு ஆனமட்டிலும் முயற்சித்துப் பார்த்தும் பேச்சுகள் முறிந்தன. இருதரப்பிலுள்ளவர்களும் தங்கள் தங்கள் தலைவர் எடுத்துக்கொண்ட கொள்கையில் எவ்விதத்திலும் தவறு இருப்பதாக நினைக்கவில்லை. மீண்டும் சந்திப்போம் என்ற நம்பிக்கையை இருதலைவர்களும் தெரிவித்திருக்கின்றனர். ஆனால் இரு முகாம்களிலும் இருக்கும் தேசபக்தர்கள் மீண்டும் ஆதியோடு அந்தமாக இந்தப் பிரச்சினையைப் புனராலோசனை செய்யாவிடில் இந்த நம்பிக்கை ஈடேருது.

விவாதிக்கப்பட்ட பிரச்னையில் இரு பெரும் தலைவர்களும் முடிவுக்கு வருவதற்குக் குறுக்கே நின்ற வித்யாசங்கள் இரு ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களிடையே நிலவி வரும் வித்தியாசங்களேயாகும்.

காந்திஜிக்கும், ஜின்னா சாகேப்பிற்கும் இடையேயுள்ள வேறுபாடு, காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கும், லீக் ஸ்தாபனத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு; சுதந்திரத்தைப்பற்றிய இரண்டு நோக்குகளின் வித்யாசம். இரு தலைவர்களும் ஒருவர் மற்றவரை மனம் மாற்றி சுதந்திரத்தைப்பற்றிய தன் கண்ணோட்டத்திற்கும், அதை அடைவதற்கு தான் காணும் வழிக்கு திருப்புவதற்கும் முயற்சித்தார்கள். இருவருக்கும் இது முடியாதுபோயிற்று.

இருவருடைய கொள்கையையும் தொகுத்து, திட்டவட்டமாகக் கூறுவது எது? விவாதத்திற்கு அடிப்படையாக மாறி மாறி எடுத்துக்கொள்ளப்பட்ட முக்யமான பத்திரங்களான

பேர்போன லாகூர் தீர்மானமும், அதைப்போலவே பிரசித்தி பெற்ற ராஜாஜி திட்டமும், பேச்சின் இறுதியில் ராஜாஜி திட்டத்தின் முக்கியாம்சங்களைக் கைவிடாமல் காந்திஜி கூறிய மாறுதல்களுமே யாகும்.

தலைவர்கள் வேறுபட்டு நின்றதற்குக் காரணம் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குறிப்பிட்ட லட்சியத்தை விடாப் பிடியாய் பிடித்துக்கொண்டதுதான். ஒவ்வொருவரும் தான் சொன்னதுதான் சரி, என்ற தன்னம்பிக்கையுடன் நின்றார்கள். ஏனெனில் ஒவ்வொருவரும் நாட்டின் இருபெரும் அரசியல் ஸ்தாபனத்தில் ஒன்றை வளர்த்துக் கட்டியிருக்கிறார்கள். தனது லட்சியத்தின் நியாயத்தில் தீவிரமான நம்பிக்கைகொண்டு நின்றார்கள்; ஏனெனில் தனது ஸ்தாபனத்தைக்கொண்டு பிரம்மாண்டமான பொதுஜன இயக்கத்தை வளர்த்திருக்கிறார்கள்; ஒருவர் சுதந்திர இயக்கத்தையும், மற்றவர் பாகிஸ்தான் இயக்கத்தையும் பேணி வளர்த்திருக்கிறார்கள்.

ஒருவருடைய லட்சியம் நியாயமானது மற்றவரது லட்சியம் நியாயமானதல்ல என்றிருந்தால் ஒரு ஸ்தாபனத்தைத் தவிர மற்ற ஸ்தாபனம் தலை சிறந்து விளங்குவதற்குக் காரணத்தைக் காணமுடியாது. சுதந்திரம், ஜனநாயகம், நியாயம் ஆகிய லட்சியங்கள் இவ்விரு ஸ்தாபனங்களில் ஒருவருடைய ஏகபாத்யதை, மற்றவர் பிற்போக்கான தப்பபிப்ராயங்கள் நிறைந்தவர், அறியாமையில் ஆழ்ந்தவர், வீண் தடபுடல் செய்யும் வாய்வீச்சு வீரர் என்றால், கோடிக் கணக்கான நம் மக்கள் சுயராஜ்ய இயக்கத்தையும் பாகிஸ்தான் இயக்கத்தையும் தங்களது சுதந்திர இயக்கங்களாகக் கருதும் நிதர்சன உண்மையையே மறுப்பதாகும்.

உண்மையான வேறுபாடுகள் இருக்கின்றன. நீண்ட காலமாக நமது உள்ளங்களில் ஊன்றிப்போன நமது சொந்த

அபிப்ராயங்களை வெகு அக்கரையுடன் மீண்டும் ஆராய்ச்சி செய்யவேண்டும். அடக்கத்துடன் மற்றவரது அபிப்ராயத்தை புரிந்துகொள்ள முயலவேண்டும். ஏனெனில் எந்த சுதந்திர லட்சியத்திற்காக நாம் நிற்கிறோமோ அதே லட்சியத்தை மற்றவரது அபிப்பிராயம் வேறு விதத்தில் எடுத்துச் சொல்லுகிறது.

பரஸ்பர நியாயத்தை உணர்தல்

காங்கிரஸ், லீக் இரண்டு கட்சிகளின் தனி லட்சியங்களை காந்திஜியும், ஜின்னா சாகேப்பும் வெகு திறமையாகக் கூறியிருக்கிறார்கள். இவற்றிலிருந்து பொதுவான அபிப்ராயத்தை உருவாக்க முடியாதா என்று பார்ப்பதுதான் முக்யமான வேலை.

பொதுப்படையான கொள்கையை காணமுடியவில்லையென்றால் சுதந்திரத்திற்கு பொது முன்னணி கட்டுவது முடியாத காரியம் என்பது தெளிவு. தலைவர்கள் தவறியதற்குக் காரணம் ஒருவரை ஒருவர் தங்கள் கொள்கைக்குத் திருப்பப் பார்த்தது. அவர்கள் என்ன செய்திருக்கவேண்டும்? ஒருவர் கொள்கையை மற்றவர் புரிந்துகொள்ள முயன்றிருக்க வேண்டும்.

ஒருவரை ஒருவர் எப்படி அர்த்தம் செய்துகொண்டார்கள், எந்தெந்த விஷயங்களை கவனித்தார்கள், எதை எதை கவனிக்கத் தவறினார்கள் என்பதைப் பார்ப்போம். அளிக்க வேண்டியது காந்திஜியாகவும் ஏற்றுக்கொள்வது ஜின்னா சாகேப்பாகவும் இருந்தது. காந்திஜி ராஜாஜி திட்டத்திற்கு மேல் போகத் தயாராயில்லை; ஜின்னா சாகேப் லாகூர் தீர்மானத்திலிருந்து இறங்கவில்லை. இரு தலைவர்களுக்கும் பேச்சு முறிவினால் ஏற்படும் படுமோசமான விளைவுகள் தெரியும்;

இருந்தபோதிலும் ஒவ்வொருவரும் தன்னுடைய கோரிக்கையை விடாமல்பிடித்துக் கொள்வதற்கும், மற்றவருடைய கோரிக்கையை நிராகரிப்பதற்கும் உறுதி எங்கிருந்துவந்தது?

ஒவ்வொருவருடைய கொள்கையிலும் வெகு நியாயமான அம்சங்கள் சில இருக்கின்றன, தவறான அம்சங்களும் இல்லாமல் இல்லை. இந்தக் கண்ணோட்டத்துடன் காந்தி—ஜின்னா கடிதப்போக்குவரத்தை வாசிக்கவில்லையென்றால் நேருவது என்ன? கட்சிப் பிரதிகட்சி வாதத்தில் வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போவோம். நமக்குள் இரண்டு போர்முகாம்களாகப் பிரிந்து நிற்போம். நாம் ஒன்றுபட்டாக வேண்டும். பழைய அபிப்ராயங்களை விட்டொழித்து மற்றவர் என்ன சொல்லுகிறார் என்பதை கவனமாகக் கேட்டு அந்தக் கொள்கையை புரிந்து கொள்வதற்கு அக்கரையுடன் சிந்திப்பதன் மூலமே ஒற்றுமையை வளர்க்க முடியும்

லாகூர் தீர்மானத்தின் சாராம்சமும், அடிப்படையும்

ஜின்னா சாகேப், விடாப்பிடியாய் பிடித்துக்கொண்டு அதை விட்டு இம்மியளவும் அசையமாட்டேன் என்று சொன்ன லாகூர் தீர்மானத்தின் அடிப்படையும், சாராம்சமும் என்ன ?

விருப்பு வெறுப்பின்றி நிஷ்பட்சமாக லாகூர் தீர்மானத்தை ஒருவர் வாசிப்பாரேயானால், 1929-ம் வருஷம் தேசீய காங்கிரஸ் லாகூரில் நிறைவேற்றிய தீர்மானம் எப்படி சுதந்திர தீர்மானமோ அதேபோல் இதுவும் சுதந்திர தீர்மானம் என்பதை அவரே உணர்ந்துகொள்ளுவார். இந்தியாவில் எந்த பாகத்தில் "சுதந்திர சர்க்கார்கள்" அமைப்பதானாலும் சரி அது பிரிட்டிஷ் ஆதிபத்தியத்தின் கீழ் முடியாது, அதை எதிர்த்து அடையவேண்டியதொன்று என்பது சொல்லாமலே விளங்கும்.

- அது முஸ்லீம் மக்களுக்கு சுயேச்சை கோரும் தீர்மானம். இந்திய விடுதலை எவ்வளவு நியாயமானது! அவ்வளவு நேர்மையானது அது.
- இன்று நம்மை அடிமைப்படுத்தியுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்ய வாதிகளை எதிர்த்து சுதந்திரம் கோரும்தீர்மானம்.
- வருங்காலத்தில் மெஜாரிட்டியாக விருக்கக்கூடிய ஹிந்துக்களின் ஆதிக்கத்தை எதிர்த்து சுதந்திரம் கேட்கும் தீர்மானம்.

அதனல்தான் முஸ்லீம்கள் பெருவாரியாகவிருக்கும் வடமேற்கு, வடகிழக்கு பிரதேசங்களில் சுயாட்சியும், பரிபூர்ண சுதந்திரமும் பெற்ற அரசாங்கங்களை அத்தீர்மானம் கோருகின்றது. அதனல்தான் ஜனப் ஜின்ன முஸ்லீம் தாயகங்கள் ஒரு அகில இந்திய மத்ய சர்க்காரின் கீழ் இருப்பதை விரும்பவில்லை. ஏனெனில் இந்தியா பூராவையும் எடுத்துப் பார்த்தால், அந்த மத்ய சர்க்கார் ஹிந்து மெஜாரிட்டி யைத் தழுவிநிற்க நேரிடலாம்.

லாகூர் தீர்மானத்தையே ஒப்புக்கொண்டு அதன் அடிப்படையில் காங்கிரஸ் லீக் சமரசம் ஏற்படவேண்டுமென்பது ஜனப் ஜின்னவின் விருப்பம். ஜனப் ஜின்னவின் ஒற்றுமைத் திட்டமென்ன? காந்திஜிக்கு அவர் எழுதிய கடிதங்களில் இதைப்பற்றி என்ன வெளியாகிறது.

(1) முஸ்லீம் இந்தியாவிற்கு பரிபூர்ண சுதந்திரத்தை அங்கீகரிக்கவேண்டும்; அதாவது சுயேச்சையான பரிபூர்ண சுதந்திரம் பெற்ற அரசாங்கம் அமைக்க உரிமை.

(2) கூட்டுமுயற்சியினல் பாக்கிஸ்தான், ஹிந்துஸ்தான் இரண்டும் சுதந்திரம் பெறுவதற்கு, காங்கிரஸிற்கும் லீகிற்கும் இடையே மேலே கூறியுள்ள உரிமையை அங்கீகரிப்பதின் அடிப்படையிலேயே ஐக்ய முன்னணி நிறுவுவது.

(3) பரஸ்பர உடன்படிக்கையின் மூலம் இரு அரசாங்கங்களின் எல்லையை முடிவு கட்டுவது.

(4) இரண்டு அரசாங்கங்களின் அரசியலமைப்பையும் வகுப்பதற்கு இரண்டு தனி அரசியல் நிர்ணய ஸ்தாபனங்கள்.

(5) இரு அரசாங்கங்களின் வருங்காலத் தொடர்பை பரிபூர்ண சுதந்திரம் பெற்ற அரசாங்கங்களென்ற அடிப்படையில் பரஸ்பர உடன்படிக்கையின் மூலம் நிர்ணயித்துக்கொள்ளுவது.

சற்று சிந்தனை செய்தால், ஜனப் ஜின்ன மூஸ்லீம்களுக்கு பரிபூர்ண சுதந்திரமென்றால் என்ன; அதற்குள்ள அடிப்படைகள் எவை எவை என்பதை விளக்கியிருப்பதைத் தவிர வேறென்றும் செய்யவில்லை, என்பது தெரியவரும் பிறப்புரிமையான சுதந்திரத்தின் அடிப்படையில், தெளிவாக வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் தனியான அரசியல் நிர்ணய சபையின் மூலம் சுயேச்சையும், பரிபூர்ண சுதந்திரமும் கொண்ட அரசாங்கம் அமைத்துக் கொள்ளவும், இந்தியாவின் இதர பாகங்களுடன்—இந்தியாவிற்குட்பட்ட மாகாணம் என்பது போய்—சரிசமமான சுயேச்சையான அரசாங்கமாக உடன்படிக்கைகளின் மூலம் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு உரிமையைக் கேட்கிறார்.

மூஸ்லீம் இந்தியாவிற்கு சுயேச்சை என்ற கோட்பாட்டை காந்திஜி ஒப்புக்கொள்ள முடியவில்லை. பல மணி நேரத்திற்கு தொடர்ந்தாற்போல் ஜின்ன சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார். ஜின்ன உணர்ச்சி ததும்ப, மூஸ்லீம்கள் ஒரு தேசிய இனம் என்று வாதாடினர். அது ஜின்னவினுடைய ஒரே முக்ய வாதம். ஜின்ன சாகேப் எடுத்து விளக்கிய முறை காந்திஜிக்கு அதை புரிந்துகொள்ளுமாறு

இருக்கவில்லை. அதற்குமாறாக காந்திஜிக்கு வருங்கால சுதந்திர இந்தியாவைக் குறித்து பீதியைத்தான் கிளப்பிவிட்டது.

ராஜாஜி-காந்திஜி திட்டம்

முஸ்லீம்கள் ஒரு தேசீய இனத்தவர் என்ற ஜின்னாவின் கோட்பாட்டிற்கு உடன்படாத காந்திஜியை, இயற்கையாகவே முஸ்லீம்கள் ஒரு தேசீய இனத்தவர் என்ற ரீதியில் சுதந்திரம் அவர்களுக்கு பிறப்புரிமை என்பதை ஏற்றுக் கொள்ளும்படி செய்யமுடியவில்லை. காந்திஜிக்கு நாம் இந்தியர் என்ற ரீதியில்தான் சுதந்திரம் பிறப்புரிமை; ஹிந்துக்கள் என்றும் முஸ்லீம்களென்றும் தனித்தனியே அல்ல.

காந்திஜியின் பார்வையில் பாகிஸ்தான் கோரிக்கை தான் ஆதரிக்கவேண்டிய சுதந்திர கோரிக்கையாகப்படவில்லை. அதை பிரிவுக் கோரிக்கையாகவே கண்டார். ஆகவே மீறிப்போனால் அந்த விஷயத்தில் விட்டுக் கொடுக்கலாம், அவ்வளவு தான்!

இருந்தபோதிலும் ஜின்னாவின் அந்தரங்க சுத்தியில் காந்திஜிக்கு நம்பிக்கை ஏற்பட்டது. பாகிஸ்தான் கோரிக்கையின்பேரில் லீக் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்வதைப் பார்த்திருக்கிறார். லீகின் கோரிக்கைக்கு திருப்தியளிக்கும் முறையில் ஒரு வழி தேட வேண்டுமென்று அவரது தயாளகுணம் தூண்டிற்று. தேசத்தின் தகப்பன் என்ற முறையில் அவரது சிறந்த அனுபவத்தினால் வெகு சிரமப்பட்டபோதிலும் இந்தியா ஒரு பெரிய குடும்பம் என்ற அபிப்ராயத்திற்கு வந்து சேர முடிந்தது. அக்குடும்பத்தில் ஒரு அங்கத்தினரான முஸ்லீம்கள் விரும்பினால் பிரிந்து போகலாம். சுதந்திர இந்தியாவில் பலவந்தமாக அவர்களை ஒரு குடும்பத்திற்குள் சேர்த்து வைக்க முடியாது.

பரிபூர்ண சுதந்திர சர்க்கார் அந்தஸ்தை முஸ்லீம்களின் உரிமையாகக் கொள்வது என்பது அவர் ஒப்புக்கொள்ளமுடியாது போனபோதிலும் பிரிந்து செல்வதற்கு உரிமையை வழங்கத் தயாராயிருந்தார். இவ்வழியில் லீக் கோரிக்கையின் சாராம்சத்தை கொடுத்திருக்கிறோம் என்று நினைக்கிறார். பிரிவுக் கருத்துகளுக்கு ராஜாஜியின் திட்டமும், அவருடைய திட்டமும் உருவம் கொடுத்திருக்கின்றது என்று கருதுகிறார். அவையாவன:—

(1) எல்லோரும் சுதந்திரம் பெற காங்கிரஸும் லீகும் சேர்ந்து ஐக்ய முன்னணி அமைப்பது.

(2) பரிபூர்ண சுதந்திரம் அடைந்த பின்னர் பரஸ்பர ஒப்பந்தத்தின்மேல் பிரதேசப்பிரிவினை.

(3) மேலே காணும் பிரிந்துபோகும் உரிமையை பிரயோகிப்பதற்கு முன்னர் பிரிந்துபோகின்ற பிரச்னையை முடிவுசெய்ய அப்பிரதேசங்களில் வாழும் குடி மக்களில் வயது வந்தவர் சகலருக்கும் ஓட் உரிமை கொடுத்து ஓட் எடுத்தல்.

(4) பிரிந்துபோகும் உடன்படிக்கையிலேயே, பொது விஷயங்களாகக் கருதும் அயல்நாட்டுக் கொள்கை, பாதுகாப்பு, உள்நாட்டுப் போக்குவரத்து, சுங்கம், வியாபாரம் முதலியவை திறம்பட நிர்வகிப்பதற்கு உத்தரவாதம்.

வித்யாசங்களுக்கு மூலகாரணம்

ஐக்ய முன்னணி ஸ்தாபிப்போம் என்ற உறுதியுடன் நாட்டின் மாபெரும் இருதலைவர்கள் சந்தித்தனர். 18 தினங்களுக்கு பேச்சு வார்த்தைகள் நடந்தன. ஆனால் அவர்களே கூறியிருப்பதுபோல் ஒரு விஷயத்தைச் சுற்றிச்சுற்றி, ஒருவரது கொள்கை மற்றவருடைய கொள்கையைத் தொடாம

லே பேசிக்கொண்டுபோனார்கள். இருவரும் ஒவ்வொருவர் கருத்தில் தோன்றும் சுதந்திரத்தை விடாமல் பிடித்துக் கொண்டு பேசினார்கள். அதனால் லட்சியமாகக்கொண்ட சுதந்திரத்தை அடைவதற்கு சேர்ந்து போராட முடியாமல் போயிற்று. இருவருள்ளத்திலும் சுதந்திர ஆர்வம் கொழுந்துவிட்டு எரிந்தது. இருந்தபோதிலும் சுதந்திரப் போராட்டத்திற்கு சகல ஜனங்களையும் ஒன்று திரட்டும் பொதுத் திட்டத்தை உருவாக்கத் தவறினார்கள். அவர்களுடைய வேறுபாட்டிற்கு மூல காரணம் ஒருவருடைய அடிப்படை சுதந்திரம் என்பதை மற்றவர் பார்க்கவில்லை; பச்சையாகச் சொன்னால் உண்மை அது! இது துரதிருஷ்ட வசமானது தான்!

காந்திஜியை எடுத்துக்கொண்டால் அவருக்கு பாக்கிஸ்தான் என்பது முஸ்லீம்களுக்குச் சுதந்திரமல்ல; பாக்கிஸ்தான் நாட்டை பிளவு படுத்துவது, நாட்டிற்கே சீர்கேடு விளைவிப்பது.

ஜின்னா சாகிப்பிற்கோ, காங்கிரஸ் இயக்கம் சகலரும் சுதந்திரம் பெறுவதற்கு பதிலாக, பிரிட்டிஷ் ஆதிக்கம் போனபின், ஹிந்து ஆதிக்கம் ஏற்படுவதில் போய் முடியும் என்று தோன்றுகிறது.

ஹிந்துக்கள் ஆதிக்கம் செய்வார்கள் என்று முஸ்லீம்கள் அஞ்சுவது ஆதாரமற்றது, மிகைப்படுத்திக் கூறுவது; சுயேச்சையும் பரிபூர்ண சுதந்திரம் கொண்ட சர்க்கார் அமைத்துக்கொள்வதற்கு கோருவதும் நியாயமற்றது என்று காந்திஜி அபிப்பிராயப்படுகிறார், மேலும் அதில் முஸ்லீம் அல்லாதவர்கள் பெருவாரியாக வாழும் பிரதேசங்களையும் அபகரிப்பதற்கு ஆசை தொனிக்கிறது என்று சந்தேகமும் படுகிறார். பாகிஸ்தான் என்றால் பெரிய துரதிருஷ்டமென்றே காந்திஜி நினைக்கிறார். ஆனால் சுய நிர்

ணய உரிமை தீமையாயிருந்தாலும், சுதந்திரப் போராட்டத்திற்கு, முஸ்லீம்களை சேர்த்துக்கொண்டு ஐக்ய முன்னணி அமைப்பதற்கு அதற்கு இசைந்து தான் ஆகவேண்டுமென்று சுயநிர்ணயத்திற்கு மட்டும் ஒப்புக்கொள்கிறார்.

புது யோசனைகள்

பாக்கிஸ்தான் நியாயமான கோரிக்கையாக பாவிப்பது என்பது காந்திஜிக்கு முடியவில்லை; பாகிஸ்தானிலுள்ள தீமைகளை அகற்றும் முறையிலும் அதே சமயத்தில் தான் எவ்வளவு தூரத்திற்கு அந்தக் கோரிக்கைக்கு இணங்க முடிகிறதோ அவ்வளவு தூரத்திற்கு தன்னை பின் பற்றும் காங்கிரஸ் தேசபக்தர்களையும் சம்மதிக்கச் செய்யும் நோக்கத்துடனும் சில பாதுகாப்புகளுடன் சொந்தமாகத் திட்டமொன்று உருவாக்கி கடைசியாக ஜின்னாவிற்கு சமர்ப்பித்தார். அதாவது:—

(1) இந்து, முஸ்லீம் சுதந்திரத்திற்கு கூட்டு முன்னணி; உடனே சுதந்திரத்திற்கு ஒற்றுமை, அதற்குக் கைமாருக எதிர்கால பிரிவினை உரிமைக்கு சம்மதம்.

(2) ஓட் எடுப்பதன் மூலம் பிரிந்துபோகும் உரிமைக்கு மக்கள் ஆதரவு இருக்கிறதாவென்று பார்ப்பது. உண்மையாக பெருவாரியில் முஸ்லீம்கள் பிரிந்துவிட வேண்டுமென்று விரும்புகிறார்களாவென்று ஆயிரக்கணக்கான காங்கிரஸ் தேசபக்தர்களுக்குச் சந்தேகம்.

(3) சகல மக்களுக்கும் ஓட் உரிமை வழங்கி ஓட் எடுப்பதால் அதிலிருந்து நியாயமான எல்லைகள் நிர்ணயமாகும் என்பது நிச்சயம். அவ்வழியில் பெரும்பாலான முஸ்லீம்கள் இஷ்டம்போல் முடிவு செய்தால் அதைப் போலவே சிறு பான்மையோரும் தங்கள் இஷ்டம்போல் முடிவு செய்ய சந்தர்ப்பம்.

(4) பொது விஷயங்கள் பரஸ்பர ஒப்பந்தத்தின்பேரில் நிர்வகிக்கப்படும் என்று முன் கூட்டியே சமரசம். அதாவது சகோதரன் நான் பிரிந்து தான் போவேன் என்று அடம் பிடித்தால், முன் கூட்டியே கட்டுக்கடங்காமல் திரியமாட்டான் என்று வாக்குறுதி வாங்கிக்கொள்வது.

விளக்கம் போதாது

லீக் கோரிக்கையின் முக்கிய சாராம்சத்தை தான் கொடுத்துவிட்டதாக காந்திஜி உண்மையில் நம்புகிருர். அவர் அளித்த திட்டத்தின் மூலம் லீக் கோரிக்கையின் சாராம் சத்தை அனுபவ சாத்யமாக்குவதற்கு உருவமும், அமைப் பும் கொடுத்திருப்பதாகவும் மனப்பூர்வமாக நம்புகிருர். ஜனுப் ஜின்ஞ முஸ்லீம் கோரிக்கையின் அடிப்படையை உண்மையில் காந்திஜி ஒப்புக்கொள்ளவில்லை என்று வாதாடும்பொழுது, காந்திஜி, "இல்லை அக்கோரிக்கையை அபி விருத்தி செய்திருக்கிறேன், லீகர்கள் அல்லாதவர்களும் அதை ஒப்புக்கொள்ளும் அரசியல் ரீதியில் அமைத்திருக் கிறேன்" என்று திருப்பி வாதாடுகிருர்.

ஜனுப் ஜின்ஞ காந்திஜியின் திட்டத்தை பெரிதும் சந்தே கிக்கிருர். காந்திஜிக்கு தனது திட்டத்தை ஜின்ஞவின் முன் வைக்கும்பொழுது லீக் கோரிக்கையின் சாராம்சம் இதில் அடங்கியிருக்கிறது என்பதில் எப்படி எள்ளளவும் சந்தேக மில்லையோ, அதைப்போலவே ஜின்ஞவிற்கு காந்திஜியின் திட்டம் பூராவையும் எடுத்துக்கொண்டால் அது தனது அடிப்படைக் கோரிக்கையை நிராகரிப் பதேயாகும் என்பதில் எத்துணையும் சந்தேகமே கிடையாது. காந்திஜி அளிக்கும் ஒவ்வொரு திட்டத்தைப் பற்றியும் அவர் என்ன நினைக்கிருரோ அதற்கு நேர்மாருன அபிப்ராயமே அவ்வொன்றைப்பற்றியும் ஜின்ஞவின்

உள்ளத்தில் எழுகின்றது. பாக்கிஸ்தான் ஏற்படாமல் வைப்பதற்கு ஒரு சூழ்ச்சியே ஓட் எடுப்பது என்று ஜனாப் ஜின்னா கருதுகிறார். முன்கூட்டி பொதுவான விஷயங்களை பரிபாலிப்பதற்கு உடன்படிக்கைகள் வேண்டும் என்று கேட்பது ஒரு கையில் கொடுப்பதுபோல் கொடுத்து, மற்ற கையில் திருப்பியெடுத்துக்கொள்வது, உடன்படிக்கை என்று சொல்லி திரும்பவும் ஹிந்து ஆதிக்கம்கொண்ட அகில இந்திய மத்ய சர்க்கார் ஸ்தாபிப்பதற்குசெய்யும் முயற்சி, என்று எண்ணுகிறார்.

ஜின்னாவின் கொள்கை இவ்வளவு வேறுபட்டதாகத் தோன்றினாலும் சமரசம் ஏற்படும் என்ற நம்பிக்கையை அளிக்கும் ஒரு அம்சம் அதிலிருக்கிறது. அதாவது ஐக்ய முன்னணியை சிருஷ்டிப்பதின் அவசியத்தை அவரும் உணருகிறார். நேசபாவத்துடனும் சமாதானத்துடனும் இரு சாராரும் வாழ்வதற்கு எதிர்கால உடன்படிக்கைகள் செய்துகொள்வது அவருக்கும் சம்மதம். ஆனால் முஸ்லிம் இந்தியாவின் பரிபூர்ண சுதந்திர அந்தஸ்தை இன்றே சந்தேகத்திற்கு இடம் வைக்காமல் தெட்டத்தெளிவாக அங்கீகரித்தால்தான் மேற்கூறியவற்றிற்கு சம்மதம் கொடுப்பார்.

பாக்கிஸ்தான் அரசாங்கம் சுயேச்சையாயிருக்கவேண்டும், பரிபூர்ண சுதந்திர அரசாங்கத்தின் அந்தஸ்து பெற வேண்டும். தனது தேவைகளை மற்றவர் உதவியின்றி தானே பூர்த்திசெய்துகொள்ளவேண்டும், வலிமை பொருந்தியதாயிருக்கவேண்டும் என்று ஜனாப் ஜின்னா விரும்புகிறார். ஆனால் அவை ஜனங்களின் உறுதியைப் பொறுத்தது என்பதை கவனிக்காமல் பேச்சுவார்த்தைகளின் மூலமே, பேரம் பேசுவதின் மூலமே அவற்றையெல்லாம் அடைந்துவிடலாம் என்று ஜனாப் ஜின்னா எண்ணுகிறார். அதனால்தான் காந்திஜியை திருப்ப முடியவில்லை. காந்திஜியின் மனதில் பாக்கிஸ்

தானேப்பற்றி குடிகொண்டிருக்கும் தவருன எண்ணங்களை ஓட்டமுடியவில்லை.

பாக்கிஸ்தான் முஸ்லிம்களின் பிறப்புரிமை என்பதை காந்திஜி ஒப்புக்கொள்ளாததைக் கண்டு ஜனுப் ஜின்னு நியாயமாகவே பொறுமை யிழக்கிருர்.

ஆனல் இந்த பிறப்புரிமையை சகோதர ஜனங்கள் ஒப்புக்கொள்வதென்ருல், முஸ்லிம் மக்களின் மகத்தான தலைவர் வக்கில்போல் வாதம் செய்வதை நிறுத்திவிட்டு, ஜனங்களின் திட்டத்தை எடுத்துப் பேசும் தலைவராக, பாக்கிஸ்தான் அரசாங்கம் எப்படி அமைக்கப்படும், எவ்வாறு நடத்தப்படும் என்பதைப்பற்றி யெல்லாம் விளக்கினலல்லவோ முடியும்.

பாக்கிஸ்தான் அரசாங்கம் ஒரு ஜனநாயக சர்க்கார், இதர இந்திய மக்கள் தங்கள் அரசாங்கத்திற்கு என்னென்ன விதிகளை அனுசரிக்கிருர்களோ அதே விதிகளுக்கு அனுசரணையாக நடக்கும் மற்ற சர்க்காரிடத்தில் தேசபக்தர்கள் எதிர்பார்க்கும் நியதிப்படியே, நியாயமான ஒரு சர்க்காராக பரிபாலனம் செய்யப்படும் என்பவற்றை சொல்லாதவரை சகோதரமக்கள் பாக்கிஸ்தானை ஒப்புக்கொள்வதெப்படி?

கண்ணில் படாதது

காந்திஜியின் பார்வையில் படாமலே நிற்பது கீழ்க் கண்டவை :—

(1) பாக்கிஸ்தான் கோரிக்கை முஸ்லிம் மக்களின் சுதந்திர தாகத்தை பிரதிபலிக்கிறது.

(2) லீக் தலைமைதாங்கி நடத்தும் பொதுஜன இயக்கம் முஸ்லிம் குடியிருப்புப் பிரதேசங்களில் குறைவுபடாத பரிபூர்ண சுதந்திரத்திற்காக நடக்கும் முஸ்லிம் மக்களின் தேசீய இயக்கம்.

(3) ஜின்னு என்ன சொல்கிருர், என்ன சொல்லவில்லை

என்பதல்ல பிரச்னை. நாட்டு சுதந்திரப் போராட்டத்திற்கு நமது மக்களில் நான்கில் ஒரு பாகத்தை நம்முடன் சேர்த்துக்கொள்வது என்பதுதான் உண்மையான பிரச்னை.

சுருங்கச் சொன்னால், பாக்கிஸ்தான் இயக்கம் ஏகாதிபத்ய எதிர்ப்பு சுதந்திரப் போராட்டம் என்பதை காந்திஜியால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. பிரசுரிக்கப்பட்ட கடிதங்களைப் பார்த்தால் ஜனாப் ஜின்னா இந்த விஷயத்தை எடுத்து விளக்குவதற்கு சிரமமெடுத்துக்கொள்ளவேயில்லை. காந்திஜிக்கு முதல் கவனம், முக்ய கவலை இந்தியாவின் விடுதலை. ஆதலால் அவரும், மற்ற காங்கிரஸ்காரர்களும் பாக்கிஸ்தான் கோரிக்கையை நிஷ்பட்சமாக பரிசீலனை செய்வதற்கு, அவர்களிடம் பாக்கிஸ்தான் இயக்கம் முஸ்லீம் மக்களின் சுதந்திர இயக்கம், எந்த க்ஷணம் பாக்கிஸ்தான் கோரிக்கையை ஒப்புக்கொள்கிறார்களோ அதே க்ஷணம் பொதுவான ஏகாதிபத்ய எதிர்ப்பில் ஒரு பாகமாக வந்து சேரும் என்பதைத் தெளிவாக்கவேண்டும்.

ஜனாப் ஜின்னாவின் பார்வையில் இல்லாதது கீழ்க்கண்டவை:—

(1) பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் பாக்கிஸ்தானை இணங்கிக் கொடுக்காது. இந்தியாவின் முழுமைக்கும் சுதந்திரம் பெற நடத்தும் கூட்டுப் போராட்டத்தின் மூலமாகத்தான் பாக்கிஸ்தானை அடையமுடியும்.

(2) காங்கிரஸ் இயக்கம் ஹிந்து ஆதிக்கத்தை நிறுவுவதற்கு நடக்கும் இயக்கமல்ல; இந்தியாவின் சுதந்திரத்திற்காக நடைபெறும் இயக்கம்!

(3) பாக்கிஸ்தானின் இயல்பான கூட்டாளிகள் அவர்களுடைய ஹிந்து சகோதரர்கள். ஹிந்துக்களையும் அவர்களுடைய ஸ்தாபனத்தையும் அதன் தலைவரையும் தன்

பக்கம் சேர்த்துக்கொள்ளாமல் பாக்கிஸ்தானுக்கு வழியே கிடையாது;

ஜனுப் ஜின்ன தனது கடிதப்போக்குவரத்தில் இந்தியாவின் விடுதலை ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையில்லாமல் முடியாது என்கிருர். இது அதன் முழுக்கருத்தையும் புரிந்துகொண்டு சொன்னதல்ல. பாக்கிஸ்தான் கோரிக்கையின் பேரில் ஜனுப் ஜின்ன ஒரு பொதுஜன தேசீய இயக்கத்தை கட்டியிருக்கிருர். இருந்தாலும் பாக்கிஸ்தான் கோரிக்கைக்கு நாட்டின் பிரதான அரசியல் ஸ்தாபனம், அதன் தலைவர், அதில் வேலை செய்யும் ஆயிரக்கணக்கான ஊழியர்களின் ஆதரவைப் பெறுவதற்குத் தவறிவிட்டார். பாக்கிஸ்தான் என்ருல் சகோதர மக்கள் ஆர்வத்துடனும் உணர்ச்சியுடனும் ஆதரிப்பதில்லை, பாக்கிஸ்தானைப்பற்றி விளக்கிச் சொல்வதில் ஏதோ அடிப்படையாக குன்றியிருக்கிறது என்பது அவருக்கு உதிக்கவில்லை.

தீராத இந்த பிரச்னையில் பொதுவான அபிப்பிராயத்திற்கு வருவதற்கு முன், அதிகம் விவாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் ஒரு தேசீய இனமா? அல்லது இந்தியர் ஒரு தேசீய இனமா? என்ற கேள்விகளில் கொஞ்சம் கவனம் செலுத்தலாம்.

இந்த விஷயத்தில் இரு தலைவர்களுக்கும் பலமான வேற்றுமை எழுந்தது; பேச்சுவார்த்தைகள் ஒரு முட்டுக்கட்டையை அடைந்தன. கோட்பாடுபற்றிய விவாதத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, நடைமுறையில் ஒரு வழி காண முயற்சித்தார்கள். அதனல் இயற்கையாகவே வழி காணமற் போனர்கள்.

பொதுக் கோட்பாடுகளின் அடிப்படையில் பொதுவான அபிப்பிராயங்கள் ஏற்படாமல் பொது முன்னணி அமைப்பது என்பது ஆகாதகாரியம்.

முஸ்லிம்கள் ஒரு தேசீய இனம் என்ற கருத்து காந்திஜிக்கு எட்டிக்காய்; முஸ்லிம்கள், மதம்மாறிய ஒரு கூட்டம் என்று அவர் கூறியது முஸ்லிம் பத்திரிகைகளில் ஒரு பெரிய எதிர்ப்பைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

முஸ்லிம்கள் என்ற அடிப்படையில்தான் ஜனாப் ஜின்னாவிற்கு பாக்கிஸ்தான் கோரிக்கையை எடுத்துச் சொல்ல முடியும். வக்கீலைப்போல் அவர் செய்கின்ற வாதம் கீழ்க் காணுமாறு:—முஸ்லிம்கள் ஒரு தேசீய இனம்; ஒரு தேசீய இனத்திற்கு சுதந்திரம் பிறப்புரிமை; முஸ்லிம் தேசீய இனத்தின் சுதந்திர கோரிக்கை பாக்கிஸ்தான்; பாக்கிஸ்தானை ஒப்புக் கொள்ளுங்கள்; இந்திய சுதந்திரத்திற்கு ஐக்ய முன்னணி அமைக்கலாம்.

தேசீய இனத்தை நிர்ணயிப்பதற்கு மதத்தை அடிப்படையாகக் கொண்டுவருவதில் காந்திஜிக்கு பெரிய ஆட்சேபனை இருக்கிறது. மதம் மட்டிலும் ஒரு தேசீய இனத்தை ஆக்குவதில்லை என்பதில் காந்திஜி சரிதான். ஒரு தேசீய இனத்தின் லட்சணங்களான தேசீயக் கலையை உருவாக்குவதிலும், மக்களின் மனோபாவத்தை மாற்றுவதிலும் மதம் எவ்வளவு தூரத்திற்குக் காரணமாயிருக்கிறது என்பதை இங்கு விவாதித்தால் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு புறம்பாகப் போவதாகும். பொதுவான மதத்தின் பேரால் மட்டும் 'இந்திய முஸ்லீம்களை ஒரு தேசீய இனமாகக் கருதமுடியாது என்று சொல்வதோடு இந்த இடத்தில் நிறுத்திக்கொள்கிறேன். இதைமட்டும் சொன்னால் அதுவும் பூரா உண்மையை சொன்னதாகாது.

முஸ்லிம் தேசீய இனங்கள்

முஸ்லிம்கள் ஒரு தேசீய இனமா அல்லது இல்லையா என்ற கேள்விகளைப்போட்டு லேசாகத்தட்டிக் கழித்துவிடக் கூடிய பிரச்னையல்ல.

நமது மத்தியில் சிந்தியர், பலூஜியர், பட்டானியர், மேற்கு பஞ்சாபியர், கிழக்கு வங்காளத்தியர் போன்ற முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர்; தேசிய இனத்திற்கு வேண்டிய லக்ஷணங்கள் எல்லாம் இவர்களிடம் காணப்படுகின்றன.

1. சொந்த குடியிருப்புப் பிரதேசத்தில் சுதந்திரமாக சுயேச்சையாக வாழவேண்டுமென்பது அவர்களுடைய பொதுவான விருப்பமாகவிருக்கிறது; தங்களுக்கு பொது அரசாங்கம் அமைத்துக்கொண்டு கூடிவாழவும் விரும்புகின்றனர்.

2. சொந்தமான நாட்டுக்கலை அவர்களை ஒன்றுக இணைக்கிறது; அந்த பந்தத்தை புராதன முஸ்லிம் கலை பலப்படுத்துகிறது.

3. இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலும் வடகிழக்குப் பகுதியிலும் அவர்களுக்கு சேர்ந்தாற்போல் குடியிருப்புப் பிரதேசமிருக்கிறது; கிழக்கு வங்காளத்தியர் மட்டும் ஹிந்து சகோதரர்களுடன் சேர்ந்து பொதுவான தாயகத்தில் வாழவேண்டியிருக்கிறது.

லீக்-கொடியின் கீழ் திரண்டு பாக்கிஸ்தான் கோரிக்கைக்காக நடக்கும் போராட்டம் இந்த தேசீய இனங்களின் தேசீயப் போராட்டம். அப்படியிருக்க அந்த இயக்கத்தின் ஏகாதிபத்ய எதிர்ப்புத் தன்மையை காந்திஜியும் காங்கிரஸ்காரர்களும் உணர்ந்துகொள்வதற்கு ஏன் கஷ்டப்படவேண்டும்? சுதந்திரத்திற்கு உடன் போராடும் கூட்டாளிகள் என்று ஏன் அவர்களை வரவேற்கத் தயங்கவேண்டும்?

1920ம் வருஷம் காந்திஜி இந்திய முஸ்லிம்களின் 'கிலாபத்' இயக்கத்தையும் காங்கிரஸின் தேசீய இயக்கத்தையும் ஒன்றுபடுத்த முடிந்தது. 1920ம் வருஷத்தில் இந்திய முஸ்லிம்களின் சகோதரர்களான துருக்கியர்களுக்கு நியாயம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கைக்கு அநுதாபம் காட்

டிய காந்திஜி, எந்த மனதுடன் 1944ம் வருஷம் சொந்த முஸ்லிம் சகோதரர்கள் தங்கள் தாயகத்திலேயே சுதந்திரமாகவும், பரிபூர்ண அதிகார அந்தஸ்துடனும் வாழ்வதற்கு உரிமையை மறுக்கமுடியும்?

பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் நசுக்க முற்பட்ட துருக்கியின் தேசீய இயக்கத்திற்கு இந்திய முஸ்லிம்கள் அளித்த ஆதரவை தானும் பகிர்ந்துகொண்டு 1920ம் வருஷம் முஸ்லிம் மக்களை பொதுவான சுதந்திர இயக்கத்திற்குள் கொண்டுவந்தார்.

ஆனால் 1930ம் வருஷம் எல்லைப்புற மாகாண பட்டாணியர்கள் புதிதாகவந்து காங்கிரஸை ஆதரித்தும்கூட 1920ம் வருஷத்திலிருந்தே முஸ்லிம்கள் காங்கிரஸை விட்டு தள்ளிப் போய்க்கொண்டே வந்திருக்கிறார்கள். இந்தப் போக்கு இந்தியா பூராவும் காணப்படுகிறது. முஸ்லிம்கள் எல்லோருமே அங்ஙனம் காங்கிரஸைவிட்டு எட்டிப்போகின்றனர்.

இந்த துரதிருஷ்டமான விளைவிற்குக் காரணம் காங்கிரஸ் பூராவையுமே எடுத்துக்கொண்டாலும், முஸ்லிம்களின் குறைகளை தீர்ப்பதில் வெகு அசிரத்தையாக விருந்தது; முஸ்லிம்களின் கோரிக்கைகளில் அக்கறை செலுத்தவில்லை.

முஸ்லிம்கள் கொஞ்சகாலத்திற்கு திகைத்து குழம்பி, மறுபடியும் தங்கள் சக்திகளை ஒன்றுசேர்க்க ஆரம்பித்தார்கள். 1935ம் வருஷத்திலிருந்து லீக் ஸ்தாபனத்தில் முஸ்லிம் மக்களின் சுதந்திரத்திற்குத் திரண்டு தேசீய இயக்கத்தை வளர்த்து வருகிறார்கள். லீக் தலைவர்களை எடுத்துக் கொண்டு பார்த்தால் சுமார் பாதிப்பேர் கிலாபாத் இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களும் மாஜி காங்கிரஸ்காரர்களுமாக விருக்கிறார்கள்.

பாக்கிஸ்தான் கோரிக்கையை நியாயமானதென்று ஜனப் ஜின்னு நிரூபிக்கவில்லை என்று சொல்லி திருப்தி கொள்வது அல்ப சமாதானம்: சுதந்திர ஆர்வம் எங்கு எழுந்தாலும் எந்த ரூபத்தில் அது தோன்றிப் பெருகினுலும், குறிப்பாக நமது சொந்த சகோதரமக்களிடத்தில் காணும் போது அதை உணராமலிருப்பது நமது தேசபக்திக்கு சரியல்ல.

இந்தியா - ஒரு தேசீய இனமா?

இந்தியா ஒரு தேசீய இனமென்பதும், சுதந்திரப் போராட்டமென்னும் அக்னிப் பிரவேசத்தின் மூலம் இன்னும் பல உயர்ந்த தேசீய லட்சணங்களைப் பெற்ற தேசீய இனமாக உருவெடுக்கிறதென்பதும் காந்திஜிக்கு சொல்லாமலே தெரிய வேண்டிய விஷயமாகத் தோன்றுகிறது.

ஆனுல் 1920ம் வருஷத்திலிருந்து காங்கிரஸிலிருந்து விலகி நிற்பதால் ஜனப் ஜின்னுவிற்கு காந்திஜியைப்போல இந்திய தேசம் என்றவுடன் சுதந்திரப் போராட்டத்தில் கண்ட சரித்திரப் பிரசித்திபெற்ற வீரச் செயல்கள், கணக்கற்ற தியாகச் செயல்களின் படம் மனக்கண் முன் எழுவதில்லை. அதற்கு மாருக ஜனப் ஜின்னுவின் உள்ளத்தில் ஒரு தேசீய இனம், ஒரு அரசாங்கம்—இதைப்பற்றி 19-வது நூற்றுண்டில் நிலவிய கொள்கைகள் எழுந்து, சுதந்திர இந்தியாவில் ஹிந்து மெஜாரிட்டி முஸ்லிம் சிறுபான்மையோரை அடக்கி ஆளுவார்கள் என்ற சந்தேகத்தை பலமாகக் கிளப்பிவிடுகிறது.

இந்தியா ஒரு குடும்பம் என்ற காந்திஜியின் கருத்திலிருந்து ஆராய்ச்சி செய்வதின் மூலம்தான் இந்தப் பிரச்னையைத் தீர்க்க மார்க்கமுண்டு. ஜனப் ஜின்னுவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி தேசீய ஒற்றுமையை ஸ்தாபிக்க

வேண்டும் என்ற விசேஷப் பொறுப்பை எடுத்துக்கொண்ட பொழுது இந்தப் புதுக்கருத்தை வகுத்துச் சொன்னார்.

இந்தியா ஒரு தேசிய இனம் என்ற கருத்தைத் தெரிவிக்கும் பொழுது, உள் நாட்டில் நம்முள் உள்ள வேறுபாடுகளை மறுக்கவில்லை; சுதந்திரப் போராட்டத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்ப்பதில் உள்ள ஒற்றுமையையே அக் கருத்து பிரதிபலிக்கிறது.

தேசிய இனங்களின் குடும்பம்

இந்தியா பல அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் என்று ஒப்புக்கொள்ளும் அளவிற்கு வந்திருக்கிறார். ஆனால் யதார்த்தம் என்னவெனில் இந்தியா ரூபமற்ற அங்கத்தினர்களைக்கொண்ட குடும்பம் அல்ல, தேசிய இனங்களைக் கொண்டதொரு குடும்பம்.

நமக்குள்ள பொதுவான தேசிய இயக்கத்தை பிரதிபலிப்பது காங்கிரஸ்; வளரும் முஸ்லிம் தேசிய இயக்கத்தை பிரதிபலிப்பது லீக். இரண்டும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்து நிற்கின்றன. இரண்டும் ஜனங்களின் சுதந்திர வேட்கையையே பிரதிபலிக்கின்றன.

வருங்காலமும் நமக்கு பொதுவானதாக விருக்கிறது. பிரயாசைப்பட்டு பெற்ற பொது சுதந்திரத்தை நாம் ஒன்று சேர்ந்தே காக்க வேண்டியிருக்கும். பொதுவானதான நாட்டின் சமூக பொருளாதார புனருத்தாரணத்திற்கு கூடி உழைக்கவேண்டியிருக்கும்.

மாபெரும் இந்தியக் குடும்பத்தின் தேசிய அங்கங்கள் சுய வளர்ச்சிக்கும், சுயமாக வாழ்வதற்கும் எந்தவிதமான தடையும், தளையுமில்லாத சந்தர்ப்பம் வேண்டுமென்று மனப்பூர்வமாக ஆசைப்படுகின்றன. ஹிந்துக்கள் பெரு

வாரியாகவிருக்கும் தேசீய இனங்களான, தமிழர், ஆந்திரர், மலையாளிகள், மராத்தியர், குஜராத்தியர், சேர்ந்துவாழ விரும்புகின்றனர்; பொதுவான இந்திய யூனியனின் கீழ் பூர்ண சுயாட்சியும், சரியான சமத்வமும் உண்டு என்ற உத்திரவாதம் கிடைத்தால் அவர்களுக்குப் போதும்.

அதைப்போலவே வட மேற்கு, வட கிழக்கு எல்லையில் வாழும் முஸ்லிம் தேசீய இனங்கள் அவர்களுக்குள் ஒன்று சேர்ந்து வாழ விரும்புகின்றன; தனியாக சொந்தமான சர்க்கார் அமைத்துக்கொள்ளவும் விரும்புகின்றன.

பாக்கிஸ்தான்—ஏன்? எப்படி?

அவர்களுக்குச் சொந்தமான தாயகத்தில் சுயேச்சையாகவும், பரிபூர்ண சுதந்திர அந்தஸ்துடனும் வாழும் உரிமை அவர்களிடமிருந்து பறிக்கமுடியாத சுதந்திர பிறப்புரிமை என்பதை அங்கீகரிக்கவேண்டும். இதை மறுத்தால் நாம் சுதந்திரத்தை விரும்புபவர்கள் என்று சொல்லமுடியாது. சகோதரமக்களை வருங்காலத்தில் அடக்கி ஆளும் அதிபதிகளாக விரும்புகிறோம் என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாவோம். ஆனால் இந்த முஸ்லிம்களது உரிமையையும் கோரிக்கையையும் காரியத்தில் கைகூடச் செய்வதெப்படி? முஸ்லிம்களுடைய தேசீய இயக்கம், விரிந்த தேசீய இயக்கத்துடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு காங்கிரஸ் லீக் ஐக்ய முன்னணி ஸ்தாபித்து இருவருக்கும் பொதுவான பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்து அனைவருக்கும் சுதந்திரம் பெற்றால்தான், அந்த உரிமையும் கோரிக்கையும் கைகூடும்.

இரண்டு ஸ்தாபனங்களின் அடிப்படையான லட்சியத்தை அடைவதற்கே ஒரே மாதிரியாக காங்கிரஸ்-லீக்

ஐக்ய முன்னணி அத்யாவசியமானது. அந்த ஐக்ய முன்னணியில்லாமல் சுதந்திர இந்தியாவும் இருக்கமுடியாது, பாக்கிஸ்தானும் இருக்கமுடியாது. இந்த இரு ஸ்தாபனங்களும் ஜனங்களுக்குச் செய்யவேண்டிய கடமையில் தவறி, அதன் விளைவாக பிரிட்டிஷ் ஏகாதிபத்யவாதிகள் புதிய சீர்திருத்தத்தை (1935 ஆக்ட்) நம்மீது சுமத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால் பெயரளவிற்கு பிரிவினை செய்வதின்மூலம் அவர்கள் ஆதிக்கத்தை எதிர்த்து எழக்கூடிய பிரம்மாண்டமான ஒன்றுபட்ட சுதந்திர இயக்கத்தை உடைத்து அந்த அபாயத்திலிருந்து தப்பினோம் என்று விமோசனமடைவார்கள். அவர்கள் ஏற்படுத்தும் பாக்கிஸ்தான் பரிபூர்ண சுதந்திர அந்தஸ்துகொண்டதாய் இருக்காது, அவர்களுடைய ஆதிபத்தியத்திற்கு அடங்கியதாய்த்தானிருக்கும்.

ஆதலால் முஸ்லிம் தேசபக்தர்கள் தங்கள் லட்சியத்தை அடைவதற்கு உள்ளவழி. காங்கிரஸோ அல்லது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டோ கடைசியாக லீகுடன் இந்த விஷயத்தில் சமரசத்திற்கு வந்துதான் ஆகவேண்டியிருக்கும் என்பதல்ல; அதற்குமாறாக லீக் காங்கிரஸுடன் ஐக்ய முன்னணி அமைப்பதற்கு முழுமனதுடன் முன்வரவேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இந்தியாவைப் பிரித்தால், நிச்சயமாக முஸ்லிம் மக்களுக்கு சுதந்திர பாக்கிஸ்தான் கிடைக்காது, முஸ்லிம் மக்கள்தான் இன்னும் அதிக துன்பங்களுக்காளாவார்கள், பாக்கிஸ்தானுக்கு போராடுவது என்பது இன்னும் கஷ்டமாகும். முஸ்லிம் பிரதேசங்களில் இயற்கை வளம் இன்னும் பயன்படுத்தப்படவில்லை; பிரிட்டிஷ் வியாபாரிகள் அவற்றை அபகரித்துக் கொள்வார்கள். முஸ்லிம் மக்களுக்கு இதர மக்களைக் காட்டிலும் வளர்ச்சிகுறைவு; ஏகாதிபத்யத்தினால் அவர்கள் கருணையின்றி நசுக்கப்படுவார்கள்.

பரஸ்பர சந்தேகம்

லீகைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் கொண்டுள்ள சந்தேகங்களையும் தப்பபிப்பிராயங்களையும் அகற்றிக்கொள்ள வேண்டும். அதைப்போலவே காங்கிரஸைப்பற்றி லீகர்களுக்கு உள்ள தப்பபிப்பிராயங்களை போக்கிக்கொள்ள வேண்டும்.

பாக்கிஸ்தான் கோரிக்கையை முதலில் அங்கீகரிக்காமல் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு லீகின் ஆதரவைப் பெறமுடியும் என்ற எண்ணத்தை காங்கிரஸ் விட்டுவிட வேண்டும். அதைப்போலவே, பாக்கிஸ்தான் அரசாங்கம் முஸ்லிம் அல்லாதவர்களை அடக்கி ஆளும் முறையில் அமைக்கப்படாது என்பதற்கும் ஹிந்துஸ்தான் சர்க்காருடன் சகோதர பாவத்துடன் சம அந்தஸ்துடன் தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ளும் என்பதற்கும் முன்கூட்டியே உத்திரவாதம் கொடுக்காமல் காங்கிரஸ் பாக்கிஸ்தானை ஆதரிக்கும் என்ற எண்ணத்தை லீக் விட்டுவிடவேண்டும்.

நியாயமான கோரிக்கையான பாக்கிஸ்தானை, பரிபூர்ண சுதந்திர அந்தஸ்துள்ள சர்க்காராக முதலில் அங்கீகரிக்காவிடில் ராஜாஜியின் திட்டத்திலிருக்கும் நிபந்தனைகள் கண்டிப்பாய் முஸ்லிம் சுதந்திரத்தை குறைக்கத்தான் செய்கிறது.

ராஜாஜியின் திட்டம், முஸ்லிம் கோரிக்கையான பரிபூர்ண சுதந்திரம் படைத்த பாக்கிஸ்தானை சந்தேகத்திற்கு இடம் வைக்காமல் அங்கீகரித்த பிறகுதான் சகோதர ஸ்தாபனத்தினிடமிருந்து சகோதர மக்களின் சார்பாகக் எழும் நியாயமான கோரிக்கையாகிறது,

பரிபூர்ண சுதந்திரம் வகிக்கும் சர்க்கார் அமைக்க உரிமை வேண்டுமென்ற முஸ்லிம் கோரிக்கையை காந்திஜி

ஒப்புக்கொள்ளவில்லையென்றால் லீகர்கள் அவரை சந்தேகிக்க நியாயமிருக்கிறது. அதைப்போலவே பாக்கிஸ்தான் அரசாங்கம் ஜனநாயகமுறையில் அமைக்கப்படும், ஜனநாயக முறையில் நடத்தப்படும் என்ற சகோதரத்துவ உத்திரவாதத்தை ஜனாப் ஜின்னா கொடுக்க மறுத்தால் காங்கிரஸ்காரர்கள் இவரை சந்தேகிக்க நியாயமிருக்கிறது.

பாக்கிஸ்தான் கோரும் லாகூர் தீர்மானத்தை காங்கிரஸ்காரர்கள் புனராலோசனை செய்வது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் லீகர்கள் ராஜாஜி—காந்திஜி திட்டத்தை புனராலோசனை செய்வதும்.

ஹிந்து ஆதிக்கம் இருக்காது என்று காங்கிரஸ்காரர்களை லீகர்கள் நம்பமுடியாது என்றால், பாக்கிஸ்தான் அரசாங்கத்தின் கீழ், முஸ்லிம் அல்லாதவர்கள் அமுக்கப்படமாட்டார்களென்றே, ஹிந்துஸ்தான் அரசாங்கத்துடன் சகோதர ஒத்துழைப்புடனும், சமாதானத்துடனும் பாக்கிஸ்தான் வாழுமென்றே காங்கிரஸ்காரர்கள் லீகரை நம்பவேண்டுமென்று எப்படி எதிர்பார்க்கமுடியும்? லீக் பிரிவினை என்ற பிரதான கோரிக்கையை கேட்கிறது. பாகிஸ்தான் சர்க்கார் ஜனநாயகமுறையில் ஸ்தாபிக்கப்படும்; உள்ளும், வெளியும் ஜனநாயக முறையில் நடந்துகொள்ளும் என்ற சர்வசாதாரண அடிப்படை உத்திரவாதங்களை அளிக்கவேண்டாமா?

நியாயமான கோட்பாடுகளின்மீது ஏற்படும் பரஸ்பர சமரசத்தின் மூலம்தான் நம்பிக்கை ஊட்டமுடியும், சந்தேகங்களை ஒழிக்கமுடியும். மக்களின் வாழ்க்கையையும், வாழ்வையும் பாதிக்கும் எந்த பிரச்னையிலும் ஜனநாயகம், சுதந்திரம் என்ற இரண்டு கோட்பாடுகள்தான் இருக்கமுடியும்.

காந்தி-ஜின்னா பேச்சுவார்த்தைகளில் மிகவும் வருத்தம்

தரும் விஷயம் காந்திஜியின் திட்டத்தின் அடிப்படை ஜன நாயகம் என்பதை ஜனப் ஜின்னவும், ஜனப் ஜின்னவின் கோரிக்கையின் அடிப்படை சுதந்திரம் என்பதை காந்திஜி யும் உணரத் தவறினர்கள். இருவருடைய கொள்கையும் ஜனநாயகம் சுதந்திரம்!'

- காங்கிரஸ் தேசபக்தர்கள் ராஜாஜியின் திட்டத்தின் சாராம்சத்தையும், அடிப்படையையும் லீகர்கள் ஒப்புக் கொள்ளவேண்டுமென்று கேட்பதற்கு முன்னர் முத லில் முஸ்லிம்களின் பிறப்புரிமையை அங்கீகரிக்கட்டும்.

- லீகர்கள், எவ்வித தயக்கமுமில்லாமல் ராஜாஜி திட்டத் தின் நியாயத்தை, ஹிந்துக்களின் தப்பபிப்ராயங்க ளுக்கு விட்டுக் கொடுப்பதாகவோ, பாக்கிஸ்தானுக்கு பேரம் பேசுவதாகவோ இல்லாமல், சந்தேகங்களைப் போக்கி, பாக்கிஸ்தானை வெல்வதற்கு, வெற்றிகரமாக ஐக்ய முன்னணி நிறுவ இன்றியமையாத திட்ட மென்று உணரட்டும்.

மேற்கூறியவாறு ஒருபுறம் காந்திஜியும், காங்கிரஸ் காரர்களும், மறுபுறம் ஜனப் ஜின்னவும் லீகர்களும் தங்கள் கண்ணோட்டத்தை திருத்திக்கொள்ளவில்லை யென்றல் சமீப காலத்திலொன்றும் காங்கிரஸ் லீக் ஐக்யம் கைகூடாது. இப்பொழுது இருவரும் அவரவர் கொள்கையை இறுகப் பிடித்துக்கொண் டிருக்கின்றனர். நான் மேலே குறிப் பிட்ட வழியில்தான் பொதுவான நோக்கு ஏற்படும்.

பொதுத்திட்டம்

கீழே கொடுத்திருப்பது அந்தப் பொதுக் கொள்கைக்கு பொருத்தமான திட்டமாகும் :—

1 இரு ஸ்தாபனங்களுடைய அடிப்படையான கோரிக்கைகளை அடைவதற்கு காங்கிரஸும் லீகும் சேர்ந்து ஐக்ய முன்னணி ஸ்தாபிப்பது. இருசாராரும் தனியாக பிரிட்டிஷ் சர்க்காருடன் எவ்விதமான சமரசமும் செய்து கொள்ளக்கூடாது.

2 எந்தவிதமான நிபந்தனையுமின்றி, லாகூர் தீர்மானத்தின்படி முஸ்லிம் தேசிய இனங்கள் அவர்களது தாயகங்களில் சுயேச்சையான பரிபூர்ண சுதந்திர சர்க்கார்கள் அமைத்துக்கொள்ளும் உரிமையை அங்கீகரிப்பது.

3 பாக்கிஸ்தான் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர் அனைவருக்கும் வயது வந்தவர்களுக்கு ஓட்டு உண்டு என்ற அடிப்படையில் தனிப்பட்ட அரசியல் நிர்ணய சபையை தேர்ந்தெடுத்து அதன்மூலம் பாக்கிஸ்தான் அரசாங்கத்தை நிர்மாணிப்பது.

இவ்வழியில் முஸ்லிம்களுக்கு, பரிபூர்ண சுதந்திர அந்தஸ்தை குறிக்கும் சொந்த அரசியல் நிர்ணயசபை கிடைக்கிறது. ஆனால் ஜனங்களின் எப்பகுதிக்கும் ஓட் உரிமையை மறுக்கமுடியாது. பாக்கிஸ்தான் நிறைவேறாமல் செய்யும்பொருட்டு முதலில் ஓட் எடுக்கிறார்கள் என்ற முஸ்லிம்களின் பயத்தைப்போக்கி பாகிஸ்தான் விஷயத்தில் ஜனங்களின் ஜனநாயக முடிவை காங்கிரஸ் இவ்வழியில் பெறுகிறது. காங்கிரஸ் கோருகின்ற ஜனங்களின் ஜனநாயக முடிவும், லீக் கோரும் பரிபூர்ண சுதந்திர அந்தஸ்தை ஜனங்கள் பிரயோகிப்பதும் ஒரே சமயத்தில் நிகழுகின்றன.

4 எந்த கோட்பாட்டின்படி பாக்கிஸ்தான் நிச்சயிக்கப்படும் என்பதை தெளிவாக குறிப்பிடவேண்டும். முஸ்லிம்களுக்கு பரிபூர்ண சுதந்திர அந்தஸ்துக்கு உரிமையுண்டு என்றால் முஸ்லிம் அல்லாதவர்களின் உரிமைகளை

மறுப்பதற்கு அதிகாரம் என்று அர்த்தமல்ல; அல்லது அவர்களுடைய பிரதேசங்களை பிடுங்குவதற்கு அடிப்படை என்று கொள்ளக்கூடாது.

A சரியான மெஜாரிட்டியாக முஸ்லிம்கள் வசிக்கும் பிரதேசங்களில் முஸ்லிம்கள் சொந்த சர்க்கார் ஏற்படுத்த உரிமையுண்டு; அது அவர்களுடைய அரசியல் நிர்ணய சபையின்கீழ் வந்துவிடுகிறது.

B எல்லைகளில் பெரிய மாறுதல் ஏற்படுத்துவதை ஒரு உரிமையாகக் கொண்டாடமுடியாது. பொதுவான தாயகத்தில் சகோதர மக்களுடன் சேர்ந்து வாழும் பொழுது எல்லையில் பெரிய மாற்றங்கள் பரஸ்பர சமரசத்தின் மூலம்தான் செய்யமுடியும். (இதற்கு முன் நான் எழுதியுள்ள "தலைவர்கள் தவறக் கூடாது" என்ற கட்டுரையில் நியாயம், சமத்வம் இந்த இரு அடிப்படையில் பஞ்சாப், வங்காளம் இவற்றின் பிரச்னையை தீர்ப்பது எப்படி என்று காட்டியிருக்கிறேன். (இதே புஸ்தகத்தில் பின்பார்க்க)

5 சுயேச்சைபெற்ற பாக்கிஸ்தான், ஹிந்துஸ்தானாகிய இரண்டு அரசாங்கமும் எல்லா ஆக்ரமிப்பையும் எதிர்ப்பதற்கு பரஸ்பரம், உதவியளிப்பதற்கும், பிரிட்டிஷார் விட்டுச் செல்லும் பஞ்சம், தரித்திரம் இவற்றை ஒழித்து எல்லா மக்களும் சுபீட்சமாக வாழ்வதற்கு பொருளாதார புணருத்தாரணத்தில் பரஸ்பர ஒத்துழைப்பிற்கும் உடன்படிக்கைகள் செய்துகொள்ள முன்வரும். பரஸ்பர நம்பிக்கை பிறப்பதற்கு காங்கிரஸும் லீகும் தற்காலிக உடன்படிக்கைகளை வகுக்கிறோமென்று உறுதிகொள்ளலாம். காலம் வரும்போது சரியான சர்க்கார் ஸ்தாபனங்களின் மூலம் அதை ஊர்ஜிதம் செய்துகொள்ளலாம்.

எங்கள் விண்ணப்பம்

மேற்கூறிய யோசனைகளை கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் எங்களுடன் உழைக்கும் ஆயிரக் கணக்கான காங்கிரஸ் லீக் தேசபக்தர்கள் விவாதிக்கும்பொருட்டு சமர்ப்பிக்கிறோம்.

மக்களின் உயரிய உணர்வில் எங்களுக்கு அளவு கடந்த நம்பிக்கையுண்டு. நமது மக்களின் ஒரு பகுதியினருக்கு பரிபூர்ண சுதந்திர அந்தஸ்துள்ள அரசாங்க உரிமை கிடைத்தால் அதனால் இதர மக்களின் சுதந்திரத்திற்கு என்றும் ஆபத்தாகாது என்பதில் எங்களுக்கு கிஞ்சித்தும் சந்தேகமில்லை. ஜனநாயகத்தின் அடிப்படையில் உள்ள சுதந்திரம், நமது மக்களின் எல்லா பகுதிகளுடைய சிறந்த சொந்த அறிவு பரிபூர்ணமலர்ச்சி பெறுவதற்குதவி அதிலிருந்து நாமெல்லோரும் சேர்ந்து எவ்வளவு சுதந்திரமும் பலமும் கொடுக்கின்றோமோ அவ்வளவு சுதந்திரமாகவும் வலிமையுடனும், நாம் எவ்வளவு சிறப்புடையதாகவும் செல்வம் நிறைந்ததாகவும் வளர்க்கமுடியுமோ அவ்வளவு உரிமையுடனும் செல்வத்துடனும், நமக்கு பொதுப் புகழ் தரும் மகத்தான இந்தியா உதிக்கும்.

லட்சக்கணக்கான காங்கிரஸ் லீக் தேசபக்தர்களுக்கும் இதேமாதிரியான எண்ணமிருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். எங்கள் திட்டத்தை வைத்துக்கொண்டு எவ்வளவுக் கெவ்வளவு ஆலோசிக்கிறார்களோ அல்லது அவர்களே இதேமாதிரியான சொந்தமாக திட்டங்களை யோசிக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரத்தில் காங்கிரஸும் லீகும் கூடும்.

நமது மக்களின் ஒப்பற்ற இருதலைவர்கள் காந்திஜியும் ஜனப் ஜின்னாவும் என்று நாங்களும் அவர்களை அபாரமாக

கௌரவிக்கிறோம். அவர்கள் நிலைமையை அப்படியே விட்டுக்கொண்டு சும்மாயிருக்கமாட்டார்கள் என்பதில் எங்களுக்கு சந்தேகமில்லை. மீண்டும் கூடுவோம் என்ற நம்பிக்கையிருக்கிறதென்று தெரிவித்திருக்கிறார்கள். இருவரும் அவர்களை பிரித்துவைத்திருந்த பிரச்னைகளைப்பற்றி அவரவர் அபிப்ராயங்களை தெரிவிக்கும்படி மக்களுக்கு விட்டிருக்கிறார்கள்

எல்லோரும் தீர ஆலோசித்தால் அவரவருக்கே காங்கிரஸ் லீக் ஒற்றுமைக்கு வழி புலனாகும். அப்பொழுதுதான் காந்திஜியும் ஜனாப் ஜின்னாவும் சந்திப்பார்கள்; சந்தித்து பிரியாமல், கூடி நம்மை சுதந்திரம்பெற்ற ஜனங்களின் ஹிந்துஸ்தானுக்கும், சுதந்திரம்பெற்ற ஜனங்களின் பாக்கிஸ்தானுக்கும் தலைமைதாங்கி நடத்திச் செல்வார்கள்.

காந்தி-ஜின்னு கடிதப் போக்குவரத்து

....

1. கூட்டு சுதந்திர முன்னணி அமைப்பதில் இருவருக்கும் ஆவல்!

ஜின்னு: ஹிந்து-முஸ்லிம் பிரச்னை பிரதானமானது என்பதை நீங்கள் உணருகிறீர்கள். ஒப்புக்கொள்ளவும் செய்கிறீர்கள் என்று எண்ணுகிறேன். இக் குழியைத் தாண்டாவிடில், இரு தேசங்களின் (ஹிந்து, முஸ்லிம்) பிரதிநிதிகளும் இதைப்பற்றி கலந்தாலோசிக்காவிடில், இந்தப் பிரச்னையில் வழிகாணுவதெப்படி? (கடிதம் 10-9-44)

காந்தி: ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை எனது வாழ்க்கை லட்சியம். வேறு எதற்காகவும் இல்லாவிட்டாலும் வெறும் காங்கிரஸ்-லீக் ஐக்யத்திற்காகமட்டுமே நான் அந்த ஒற்றுமையை நாடுகிறேன். அதை அடைய அந்நிய ஆதிக்கத்தை ஒழித்தாகவேண்டும். ஆதலால் சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்கு முன், இந்தியாவிலுள்ள சகல கட்சிகளும், சர்வ தொகுதிகளும் கூடி அமைக்கும் ஐக்ய முன்னணியின் மூலம் இந்தியா விடுதலை பெறுவது அவசியமாகிறது. துரதிருஷ்டவசமாக அத்தகைய கூட்டு முன்னணி கைகூடாததொன்றாய்விட்டால், அப்பொழுதும் கூட எந்தெந்த தொகுதிகளை ஒன்று கூட்டமுடியுமோ அந்தந்த தொகுதிகளின் ஒத்தாசைகொண்டு நான் போராடவேண்டியிருக்கும். (கடிதம் 11-9-44.)

ஜின்னு : (மேல்கண்ட வாக்கியத்தை எடுத்துச் சொல்லிவிட்டு) இது, (சர்வ கட்சிகளின் ஒற்றுமை கை கூடாவிட்டாலும், எங்கெந்தத் தொகுதிகளை ஒன்றுகூட்ட முடியுமோ, அவைகளின் ஒத்தாசையைக்கொண்டு சுதந்திரப்போர் செய்வது) எனது அபிப்ராயத்தில், பலமுறை திரும்பத் திரும்பசொன்னதுபோல, வால் தலையாகும் கதையாகவிருக்கிறது. பொதுப்படையில் இது அகில இந்திய முஸ்லிம் லீகின் பிரகடனங்களுக்கும், கொள்கைகளுக்கும் நேர்மாறானது. நீங்கள் 1942ம் வருஷத்திய ஆகஸ்டு தீர்மானத்தை விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த நாட்டின் மக்களின் விடுதலையையும், சுயேச்சையையும் அடைவதற்கு முதலாவதாக ஹிந்து முஸ்லிம் உடன்பாடு வெகு அவசியமானது, அது இல்லாமல் முடியாது.

(கடிதம் 11-9-44)

காந்தி : (மேற்கண்ட பாராவை குறிப்பிட்டு) இரண்டாவதுபாரா பொறுத்தவரையில், நான் ஹிந்து, முஸ்லிம் ஐக்ய விஷயத்தில் மூன்றுவது கட்சியை அப்புறப்படுத்திலைல்லாமல் நாம் ஒருவருக்கொருவர் ஒத்துவாழமுடியாது என்று நிச்சயமாகக் கருதுகிறேன். அப்படிச் சொல்வதினுல் நம்மிடையே வாழ்க்கை நடத்துவதற்கு ஒருமைப்பாடு ஏற்படுத்த எல்லாவழிகளிலும் முயற்சி எடுக்கமாட்டேன் என்று அர்த்தமல்ல. (கடிதம், 14-9-44)

★

ராஜாஜி திட்டம்

1. சுதந்திர இந்தியாவின் அரசியல் திட்டத்தில் கீழ்க்கண்டஷரத்துகளுக்கு உட்பட்டு, இந்திய சுதந்திரக் கோரிக்கையை முஸ்லிம் லீக் ஆமோதிக்கிறது ; இடைக்காலத்

தில் ஏற்படும் தாற்காலிக சர்க்காரில் காங்கிரஸுடன் ஒத்துழைக்கும்.

2. முஸ்லிம் மக்கள் மிகப் பெரிய மெஜாரிட்டியினராக வசிக்கின்ற இந்தியாவில் வடமேற்கிலும், வடகிழக்கிலும் தொடர்ந்தாற்போல் இருக்கிற பிரதேசங்களை வரையறுத்து எல்லைக்கோடிட, யுத்தம் முடிந்தவுடன் ஒரு "கமிஷன்" நிறுவப்படும். அவ்விதம் வரம்பு வகுக்கப்பட்ட பிரதேசங்களில் வயது வந்தவர்கள் எல்லோருக்கும் ஓட்டுரிமையுண்டு என்பதையோ அல்லது நடைமுறையில் சாத்தியமான வேறு ஓட் எடுக்கும் முறையையோ அடிப்படையாகக்கொண்டு —எடுக்கப்படும் பொதுஜன வாக்கின்படி, ஹிந்துஸ்தானை விட்டுப் பிரிந்துபோகும் பிரச்சினை கடைசியாக தீர்மானிக்கப்படும். ஹிந்துஸ்தானை விட்டுப்பிரிந்து தனியாக பரிபூர்ண சுதந்திரமுள்ள சர்க்காரை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்று பெரும்பாலான ஜனங்கள் தீர்மானித்தால் அந்தத் தீர்மானம் நடைமுறையில் நிறைவேற்றப்படும். ஆனால் அது எல்லைப் புறத்திலுள்ள ஜில்லாக்கள் எந்த ராஜ்யத்தில் வேண்டுமானாலும் சேரும் உரிமையை பாதிக்காது.

3. பொதுஜன வாக்கு எடுப்பதற்கு முன்பு, தங்கள் தங்கள் அபிப்ராயங்களை விளக்கி எல்லாகட்சிகளும் பிரசாரம் செய்யலாம்.

4. பிரிந்து போவதாயிருந்தால், பாதுகாப்பு, வியாபாரம், போக்குவரத்து முதலிய அவசியமான காரியங்களைக் காத்துக்கொள்ள பரஸ்பர ஒப்பந்தங்கள் செய்யப்படும்.

5. ஜனங்கள் தாங்களாகவே விரும்பினால்தான் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு அவர்களை மாற்றலாம்.

6. இந்தியாவை நிர்வகிக்கும் பொறுப்பையும் முழு அதிகாரத்தையும் பிரிட்டன் நம்மிடம் கொடுத்தால்தான் இந்த ஷரத்துகள் இருவரையும் கட்டுப்படுத்தும்.

2. ராஜாஜியின் திட்டத்தின் அடிப்படையில்

(a) சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பு.

ஜின்னு: இந்த (1)ம் பிரிவில் (ராஜாஜி திட்டத்தைப் பார்க்கவும்) குறிப்பிட்டிருக்கும் சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பு விஷயத்தில், நீங்கள் சொல்லும் அரசியல் அமைப்பு என்ன? அதை வகுப்பது யார்? அது எப்பொழுது அமுலுக்குவரும்? என்று முதலில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அடுத்தபடி அத்திட்டத்தில் "இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை முஸ்லிம் லீக் ஆதரிக்கிறது' என்று கண்டிருக்கிறது. இதற்கு, பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிய 1942ம் வருஷத்திய தீர்மானத்தை ஆதரிப்பது என்று அர்த்தமா? இல்லாவிடில் இந்த வாக்கியத்தின் பொருள் என்ன? ஏனெனில் முஸ்லிம் லீக் தனது தீர்மானங்களின் மூலமாகவும், அதனுடைய அரசியல் அமைப்பில் அடங்கியுள்ள அடிப்படைக் கொள்கையின் வாயிலாகவும் நாங்கள் இந்த சிறுகண்டத்தின் விடுதலைக்காகவும் சுயேச்சைக்காகவும்—அது பாக்கிஸ்தான் ஹிந்துஸ்தான் இரண்டையும் குறிக்கும்—நிற்கிறோம் என்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். இந்த விஷயம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். (கடிதம் 10-9-44)

காந்தி: இத்திட்டம் குறிப்பிடும், தற்காலிக சர்க்காரோ, அல்லது பிரிட்டிஷ் அதிகாரம் நீங்கியபின் அதற்கென இந்த சர்க்கார் அமைக்கும் ஸ்தாபனமோ அரசியல் அமைப்பை வகுக்கும். சுதந்திரமென்று சொல்லும்பொழுது இந்தியா முழுமைக்கும் சுதந்திரம் என்பதே பொருள். (கடிதம் 11-9-44)

ஜின்னு: நான் மறுபடியும் கேட்கிறேன், ஐக்ய இந்தியாவின் அடிப்படையில் அரசியல் அமைப்பு என்று

அர்த்தமா? அந்த விஷயத்தில் நீங்கள் கொடுக்கும் விளக்கம் எனக்கு திருப்திகரமாகவில்லை. (கடிதம் 14-9-44)

காந்தி: சுதந்திரம் என்று சொல்லும்பொழுது 1942-ம் வருஷம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானத்தில் வரையறுத்ததைத்தான் குறிப்பிடுகிறோம். ஆனால் அது ஐக்ய இந்தியாவின் அடிப்படையில் இருக்கமுடியாது. நாம் ஒரு உடன்படிக்கைக்கு வந்தோமானால் அது அந்த உடன்பாட்டின் அடிப்படையின்பேரிலிருக்கும். அந்த உடன்படிக்கை நாட்டில் பொதுவான ஆதரவைப் பெறுகிறது என்று வைத்துக்கொண்டு பேசுகிறேன். அதாவது அதன் போக்கு ஏகதேசம் கீழ்க்கண்டவாறு இருக்கும்; இன்று உள்ளபடியே இந்தியாவிற்கு கூட்டு முயற்சியினால் சுதந்திரத்தைப் பெறுகிறோம். விடுதலைபெற்ற இந்தியா, எல்லைகளை நிர்ணயிப்பது, ஓட் எடுப்பது, சம்பந்தப்பட்ட ஜனங்கள் ஓட் கொடுத்தால் பிரிந்துபோவது, ஆகியவேலைகளை எடுத்துக்கொள்ளும். ராஜாஜியின் திட்டத்தில் இவையெல்லாம் அடங்கியிருக்கிறன்றன. (கடிதம் 15-9-44)

(b) தற்காலிக இடைக்கால சர்க்கார்.

ஜின்னு: அந்தகைய சர்க்கார் ("தற்காலிக இடைக்கால சர்க்கார்") எந்த அடிப்படையில்? எவ்வகையில்? நிர்மாணிக்கப்படும் என்பதை தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கு திட்டவட்டமான முழுத்திட்டம் உங்களிடமிருந்தால் அதை எனக்குக் கொடுங்கள்.

(கடிதம் 10-9-44)

காந்தி: இடைக்கால தற்காலிக சர்க்காரின் அடிப்படை காங்கிரஸூம் லீகும் ஒப்புக்கொள்வதா யிருக்க வேண்டும். (கடிதம் 11-9-44)

ஜின்னு: அந்த அடிப்படை காங்கிரஸ்-லீக் உடன்

பாட்டின் பேரில்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் பொதுவானவகையிலாவது உங்கள் கருத்துப்படி தற்காலிக சர்க்கார் எத்தகையது, எந்த முறைகளில் அமைக்கப்படும் என்பதைப்பற்றி எனக்கு நீங்கள் சொல்வது முறையாகும். ஏனெனில் அதைப்பற்றி இதற்குள் நீங்கள் யோசனை செய்திருக்கவேண்டும். தற்காலிக இடைக்கால சர்க்காரின் நிர்மாணத்திற்கு உங்களுடைய திட்டம் அல்லது யோசனையை தெரிந்துகொள்ளவிரும்புகிறேன். நீங்கள் சொல்வதில் தற்கால இடைக்கால சர்க்காரைப்பற்றி புரிந்துகொள்ளும்படியாக போதிய விபரங்களிருக்கவேண்டும். (கடிதம் 11-9-44)

காந்தி : தற்காலிக இடைக்கால சர்க்காரின் அடிப்படையைப்பற்றி என் கருத்துகள் என்ன என்று கேட்கிறீர்கள். என் மனதில் ஏதாவது திட்டமிருந்திருந்தால் நான் அதை உங்களிடம் சொல்லியிருப்பேன். நாமிருவரும் ஒரு முடிவிற்கு வரமுடிந்தால் பின் அதை யெடுத்துக்கொண்டு மற்ற கட்சிகளிடம் நாம் ஆலோசனை செய்யவேண்டியது தான் என்று நான் எண்ணுகிறேன். ஆனால் இதுமட்டும் நான் சொல்லமுடியும், எந்த தற்காலிக சர்க்காரும் இன்றுள்ள நிலைமையில் நம்பிக்கை பெற்றதாயிருக்கவேண்டுமானால் எல்லாக் கட்சிகளின் பிரதிநிதித்வத்தையும் கொண்டதாயிருக்கவேண்டும். அதை அமைக்கும் காலம் வரும்பொழுது எனக்கு பதிலாக என்னைக்காட்டிலும் அதிகாரபூர்வமான ஒருவர் வருவார். இருந்தபோதிலும் என் மனத்தை நீங்கள் மாற்றிவிட்டால் அல்லது உங்கள் மனத்தை நான் மாற்றிவிட்டால் அல்லது நாமிருவரும் ஒருவரை ஒருவர் மாற்றிக்கொண்டு, இரு உடல் ஒரு எண்ணம் என்று ஆய்விட்டால் நீங்கள் விரும்பும் எந்த க்ஷணத்திலும் நான் வரத்தயாராயிருப்பேன். (கடிதம் 14-9-44)

ஜின்னா: அத்தகைய தற்காலிக சர்க்கார் எல்லா கட்சிகளின் பிரதிநிதித்வத்தைக் கொண்டிருக்கும், இன்றைய நிலைமையில் சர்வ கட்சிகளின் நம்பிக்கைக்கும் பாத்திரமாகும் தன்மையைக் கொண்டிருக்கும் என்பதை நான் தெரிந்துகொண்டுதானிருக்கிறேன். அதை அமைக்கும் காலம் வரும்பொழுது அதைத் தொடர்ந்து இன்னும் சில விஷயங்களும் நிகழும் என்பதையும் நன்கு உணர்கிறேன். ஆனால் நான் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால் அந்த தற்காலிக இடைக்கால சர்க்காரின் அதிகாரங்கள் என்ன? அதை எப்படிக் கூட்டுவீர்கள்? அது யாருக்கு ஜவாப்தாரியாயிருக்கும்? அதில் எந்தெந்த தொகுகள் எந்தெந்த அளவில் சேரும் என்ற விவரங்களைப் பற்றி, காந்தி—ராஜாஜி திட்டத்தை பிரேரேபித்தவர் என்ற முறையில் நீங்கள் பொதுப்படையான அபிப்ராயமும் விபரங்களும் எனக்கு கொடுக்கவேண்டும். அப்பொழுது அத்திட்டத்தில் இப்பகுதியை நான் புரிந்துகொள்ள முடியும்.

(கடிதம், 14-9-44)

காந்தி: உங்கள் கேள்விக்கு நான் பரிபூர்ணமாக திருப்தி அளிக்க முடியும். தற்காலிக இடைக்கால சர்க்கார் இன்றுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களுக்கு அல்லது புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஜவாப்தாரியாகவிருக்கும். யுத்த காலத்தில் இந்தியாவின் பிரதம ராணுவ தளபதியின் அதிகாரம் போக பாக்கி அதிகாரங்களை வகிக்கும்; யுத்தத்திற்குப் பிறகு பரிபூர்ண அதிகாரம் கொண்டதாயிருக்கும். காங்கிரஸிற்கும் லீகிற்கும் ஏற்படும் உடன்படிக்கையை இதர கட்சிகளும் ஒத்துக்கொண்ட பின் அமுலுக்குக் கொண்டுவரும் அதிகாரம் படைத்ததுவும் அதே தற்காலிக சர்க்கார்தான்.

(கடிதம், 15-9-44)

(c) பாக்கிஸ்தான் எல்லைகள்

ஜின்னு: பிரிவு (2) ல் நீங்கள் குறிப்பிடும் கமிஷனை நியமிப்பது யார்? அவர்கள் ஆலோசனையை அமுலுக்குக் கொண்டு வருவது யார்? அதில் சொல்லப்படும் "பரிபூர்ண மெஜாரிட்டி" க்கு அர்த்தம் என்ன? (கடிதம், 10-9-44)

காந்தி: தற்காலிக சர்க்கார் அந்தக் கமிஷனை நியமிக்கும். "பரிபூர்ண மெஜாரிட்டி" என்றால் பலுஜிஸ்தான், பஞ்சாப், எல்லைப்புற மாகாணம் போன்ற பிரதேசங்களில் இருப்பதுபோல் முஸ்லிம்கள் அல்லாதவருக்குமேல் முஸ்லிம்கள் அதிகமாக, நல்ல மெஜாரிட்டியாக விருக்க வேண்டுமென்று அர்த்தம். (கடிதம், 11-9-44)

ஜின்னு: கமிஷனின் ஆலோசனைகளை நிறைவேற்றுவது யார் என்ற என் கேள்விக்கு நீங்கள் பதில் கொடுக்காமல் விட்டுவிட்டீர்கள். அதோடுகூட "பரிபூர்ண மெஜாரிட்டி" யென்றால் 'பலுஜிஸ்தான், பஞ்சாப், எல்லைப்புற மாகாணம் போன்ற பிரதேசங்களில் இருப்பதுபோல் முஸ்லிம் அல்லாதவர்களுக்குமேல் முஸ்லிம்கள் அதிகமாக நல்ல மெஜாரிட்டியாக இருப்பது என்று அர்த்தம்' என்று சொல்லும்பொழுது அந்த பதத்திற்கு நீங்கள் என்ன பொருள் கொடுக்கிறீர்கள் என்று எனக்குத் தெளிவுபடவில்லை. (கடிதம், 11-9-44)

காந்தி: இந்தியாவில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தேசீய இனங்கள் இருக்கின்றன என்று கருதும் அடிப்படையில் நான் எண்ணவில்லை. ஆனால் இந்தியா பல அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு குடும்பம், அதில் வடமேற்கு பிராந்தியத்தில் வாழும் முஸ்லிம்கள் அதாவது பலுஜிஸ்தான், சிந்து, எல்லைப்புற மாகாணமும், பஞ்சாப்பில் எங்கெல்லாம் பரிபூர்ண மெஜாரிட்டியாக விருக்கிறார்களோ அப்பிரதேசங்களும், அதைப்போலவே வங்காளத்திலும், அஸ்ஸாமிலும் எங்கெல்லாம் பரிபூர்ண மெஜாரிட்டியாக

விருக்கிறார்களோ, அப்பிரதேசங்களும் இந்தியாவின் இதர பாகங்களிலிருந்து பிரிந்துவாழ விரும்புகின்றன என்ற அடிப்படையில் பேசுகிறேன். (கடிதம், 24-9-44)

ஜின்ன‍ா: இந்த நிபந்தனையை (மேலே குறிப்பிட்டுள்ளது) ஒப்புக்கொண்டு அமுல் நடத்தினால், இந்த மாகாணங்களின் தற்கால எல்லைகள் சீர்படுத்த முடியாத அளவிற்கு சின்னாபின்னப்படுத்தப்பட்டு, எங்களுக்கு கிடைப்பதெல்லாம் நெல்லுக்குப்பதில் உமியாக விருக்கும். இந்த நிபந்தனைகள் லாகூர் தீர்மானத்திற்கு நேர் மாறானது.

(கடிதம், 25-9-44)

(d) பாக்கிஸ்தானை நிர்மாணிக்க ஓட் எடுத்தல்

ஜின்ன‍ா: நீங்கள் ஓட் எடுக்க உத்தேசிப்பது ஜில்லா வாரியாகவா? இல்லை யென்றால் எந்த அடிப்படையின் பேரில்? 18 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் அனைவருக்கும் ஓட் உரிமை என்று முடிவு கட்டுவது அல்லது நிர்ணயம் செய்வது யார்? ஓட் எடுத்துத்தெரியும் முடிவை அல்லது தீர்ப்பை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவது யார்? எல்லையோரமாக விருக்கும் ஜில்லாக்கள், அதாவது தற்கால மாகாண எல்லைக்குள்ளிருந்து, புதிய எல்லை கட்டி ஒதுக்கும் ஜில்லாக்கள் மட்டுமேதான் இரண்டு சர்க்காரில் ஒன்றுடன் சேருவதென முடிவு செய்யும் உரிமையை அனுபவிக்குமா? அல்லது இன்றுள்ள மாகாண எல்லைக்கு வெளியிலிருக்கும் ஜில்லாக்களும் இரண்டு சர்க்காரில் ஒன்றுடன் சேரும் உரிமை பெற்றிருக்குமா? (கடிதம், 10-9-44)

காந்தி: எந்த முறையில் ஓட் எடுப்பது? எந்த மாதிரி யார் யாருக்கு ஓட் உரிமை அளிப்பது என்ற விஷயங்கள் விவாதிக்க வேண்டியவை. (கடிதம், 11-9-44)

ஜின்ன‍ா: திட்டத்தில் பிரேரேபித்திருக்கும் ஓட் உரி

மையும், ஓட் எடுப்பதும் எந்த முறையில் என்பதை முடிவு செய்வது யார் என்று கேட்ட என் கேள்விக்கு நீங்கள் பதிலளிக்கவில்லை. (கடிதம், 11-9-44)

காந்தி : ஓட் எடுக்கும் முறையும் ஓட் உரிமை வழங்கும் முறையும் நாம் இப்பொழுது முடிவு செய்யாவிடில், அந்த முடிவை தற்காலிக இடைக்கால சர்க்காருக்கு விட்டு விட வேண்டியதுதான். என்னைக் கேட்டால் பாக்கிஸ்தான் எல்லையில் வாழும்சர்வ குடிகளுக்கும், 18 வயதுக்குமேல் உள்ள ஆண் பெண் அனைவருக்கும் ஓட் உரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்லுவேன். (கடிதம், 14-9-44)

காந்தி : திட்டமிடும் பிரதேசத்தில் (பாக்கிஸ்தான்) வாழும் மக்களுக்கு பிரிந்து போகும் விஷயத்தில் தங்கள் அபிப்ராயத்தை தெரிவிக்க உரிமையுண்டா? உண்டு என்றால் அதை அறிவதெப்படி?

ஜின்னா : லாகூர் தீர்மானத்திற்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. (கடிதம், 17-9-44)

(‘சுயநிர்ணய உரிமை’ தலைப்பிலுள்ள பகுதியைப் பார்க்கவும்)

காந்தி : ஓட் எடுப்பதென்றால் உங்களுக்கு பிடிக்கவில்லை. அதற்கு விரோதமாக இருக்கிறீர்கள். லீகின் செல்வாக்கை ஒப்புக்கொண்ட போதிலும், பாதிக்கப்படும் மக்கள் பிரிந்துபோக விரும்புகின்றனர் என்பதற்கு அத்தாட்சி சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் இருக்கவேண்டும். அப்பிரதேசத்தில் வாழும் எல்லா ஜனங்களும் குறிப்பான இந்த ஒரு பிரச்னையின்பேரில் வாக்களிக்கவேண்டும் என்பது எனது அபிப்ராயம். வயது வந்தவர்களுக்கு ஓட் உரிமை வழங்குவதே சரியானமுறை. ஆனால் அதைப்போன்ற வேறு வழி இருந்தால் அதை நான் ஒப்புக்கொள்ளுவேன். (கடிதம், 22-9-44)

ஜின்னா: (இதன் அர்த்தம்) சுயநிர்ணய உரிமையை முஸ்லிம்கள் பிரயோகிக்க மாட்டார்கள், குறிக்கின்ற எல்லைக்குள்ளிருக்கும் குடிகள் பிரயோகிப்பார்கள். இது லாகூர் தீர்மானத்தின் அடிப்படைக் கொள்கைக்கு முரணானது. (நீங்கள் சொல்கிறீர்கள்) பிரிந்து போவதற்கு சாதகமாக ஓட் பெற்றால் "அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டவுடன், எவ்வளவு சீக்கிரத்தில் சாத்யமோ அவ்வளவு சீக்கிரத்தில் தனி அரசாங்கம் அமைத்துக் கொள்ளலாம்" என்று. ஆனால் நாங்கள் நம்மைப் பொறுத்த வரையில் நமக்குள்ளாகவே உடனடி ஒரு முடிவான ஒப்பந்தத்திற்கு வரவேண்டும் பாக்கிஸ்தான், ஹிந்துஸ்தான் என்ற அடிப்படையில் இந்திய மக்களின் சுதந்திரத்தைநமது ஐக்ய முன்னணியின் மூலமாக கூட்டு முயற்சிப்படி, நம் சக்திக்கு எட்டும் எல்லா வழிகளிலும் அடைவதற்கு பிரயத்தனிப்போம்என்று சொல்லுகிறோம்.

(கடிதம், 25-9-44)

(e) ஹிந்துஸ்தானுடன் பரஸ்பர உடன்படிக்கை

ஜின்னா: பிரிவு 4 சம்பந்தமாக பேசும்போது, அந்தப் பிரிவில் குறிப்பிடும் 'பரஸ்பர உடன்படிக்'கையை யார் யார்? எந்த ஸ்தாபனம்? அல்லது அமைப்பின் மூலமாக செய்து கொள்வது என்பதைத் தெரிய விரும்புகிறேன். "பாதுகாப்பு, வியாபாரம், போக்குவரத்து, இன்னும் அத்யாவசியமான இதர விஷயங்களுக்கு குந்தகம் நேராமல் காத்துக்கொள்வது" என்பதின் அர்த்தம் என்ன? யாரிடமிருந்து காப்பது?

(கடிதம் 10-9-44)

காந்தி: பரஸ்பர ஒப்பந்தம் என்பது ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் கட்சியினருக்குள் என்று அர்த்தம். "பாதுகாப்பு முதலியவற்றிக்கு குந்தகம் ஏற்படாது காத்தல்" என்றால் என்னைப் பொறுத்தவரையில் ஒரு மத்ய ஸ்தாபனம்

அல்லது ஒரு கூட்டு ஸ்தாபனத்தின் மூலம் நிர்வகிப்பது என்று அர்த்தம். யாரிடமிருந்து அதை காக்கப்போகிறோம் என்றால் அதற்கு குந்தகம் ஏற்படுத்தும் அனைவரிடமிருந்து காத்தல் என்று தான் பொருள். (கடிதம், 11-9-44)

ஜின்னா: "பரஸ்பர ஒப்பந்தம்" என்பது 'ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் கட்சியினருக்குள்" என்கிறீர்கள். நீங்கள் எண்ணுவது போல ஒரு தற்காலிக இடைக்கால சர்க்கார் ஏற்படுத்திய பிறகு "ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் கட்சியினர்" யார்? "பாதுகாப்பு முதலியவற்றிற்கு குந்தகம் வராமல் காப்பதற்காக" உள்ள மத்ய ஸ்தாபனம் அல்லது கூட்டு ஸ்தாபனத்தை நியமிப்பது யார்? எந்த கோட்பாட்டின் பேரில் நியமிக்கப்படும்? எந்த அமைப்பின் மூலம், அல்லது ஸ்தாபனத்தின் மூலம் அந்த காவல் ஸ்தாபனம் அமைக்கப்படும்? அந்த மத்ய ஸ்தாபனம் அல்லது கூட்டு ஸ்தாபனம் யாருடைய அதிகாரத்திற்கும் உத்தரவிற்கும் கட்டுபட்டிருக்கும்? (கடிதம், 11-9-44)

காந்தி: பாதுகாப்பு, இன்னும் அதுபோன்ற மற்ற பொது விஷயங்களுக்கு லாகூர் தீர்மானத்தின்படி என்ன ஏற்பாடு? (கடிதம், 15-9-44)

ஜின்னா: (பாதுகாப்பு முதலியன) பாக்கிஸ்தான் ஏற்படுத்துகின்ற ஒரு அரசியல் நிர்ணய ஸ்தாபனம் பரிபூர்ண அதிகாரம் கொண்டு பாக்கிஸ்தானின் சார்பாக, ஹிந்துஸ்தானின் அரசியல் நிர்ணய ஸ்தாபனத்தோடு, ஹிந்துஸ்தான் இல்லை யென்றால் சம்பந்தப்பட்ட வேறு தரப்பினரோடு, பேசி முடிவுசெய்யவேண்டிய விஷயங்கள். பாக்கிஸ்தானும், ஹிந்துஸ்தானும் பரிபூர்ண சுதந்திர அந்தஸ்து கொண்ட இரண்டு தனிப்பட்ட சர்க்கார்கள் என்பதை ஒப்புக்கொண்டால் "பாதுகாப்பு அதை யொத்த இதர பொது விஷயங்கள்" என்பதே இருக்கமுடியாது. (கடிதம் 21-9-44)

காந்தி: இரு கைகளுக்கும் பொதுவான நலன்கள் கிடையாதென ஒரே யடியாக மறுக்கிறீர்கள். பிரிகின்ற அதே சமயத்தில் பாதுகாப்பு, அயல் நாட்டுக் கொள்கை, முதலிய பொது நலன்களுக்கு உத்திரவாதம் அளிக்காவிடில் அப்பிரிவினையை நான் ஒப்புக்கொள்ள முடியாது. பொதுவான எல்லையை வைத்துக்கொண்டு பூகோளத் தொடர்ச்சியுள்ள பிரதேசங்களில் வாழ்வதின் நிமித்தமாக இயற்கையாகவே எழக்கூடிய பரஸ்பர ஒத்துழைப்பை அங்கீகரிக்கவில்லையென்றால் இந்திய மக்களுக்கு க்ஷேமமாக வாழ்வோம் என்ற நம்பிக்கை ஏற்படாது. (கடிதம், 22-9-44)

ஜின்னா: இரண்டு கைகளுக்கும் உள்ள பொதுவான நலன்களை நான் நிராகரித்து விட்டேன் என்று நீங்கள் நினைப்பதற்கு நான் வருந்துகிறேன். இப்பொழுது அதை கொஞ்சம் மாற்றிசொல்கிறீர்கள். பொதுவான எல்லையை வைத்துக்கொண்டு பூகோளத் தொடர்புடன் வாழ்வதின் நிமித்தமாக இயற்கையாகவே எழுகின்ற பரஸ்பர ஒத்துழைப்பை நிராகரித்தால் இந்திய மக்களுக்கு க்ஷேமமாக வாழ்வோம் என்ற நம்பிக்கை பிறக்காது என்று நீங்கள் சொல்லும் பொழுது அதற்கு நான் ஏற்கனவே அளித்துள்ள பதில் என்னவென்றால், பாக்கிஸ்தானுடைய அரசியல் நிர்ணய ஸ்தாபனம் ஹிந்துஸ்தான்கூடவோ அல்லது சம்பந்தப்பட்ட மற்ற தேசீய இனத்துடையவோ அரசியல் நிர்ணய ஸ்தாபனத்துடன், இரண்டும் சுயேச்சையான சர்க்கார்கள் என்ற சம அந்தஸ்துடன் அவ்விஷயங்களை முடிவு செய்யும். (கடிதம், 23-9-44)

காந்தி: பிரிந்து போவதற்கு செய்துகொள்ளும் ஒப்பந்தத்திலேயே. அயல்நாட்டுக் கொள்கை, பாதுகாப்பு, போக்கு வரத்து, சுங்கம், வியாபாரம் முதலியவை திருப்திகரமாகவும் திறமையாகவும் நிர்வகிப்பதற்கு ஏற்பாடுகளு

மிருக்க வேண்டும். அதோடு அவசியமாக, தொடர்ந்து அவ்விஷயங்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் கட்சிக ளின் பொது அக்கரையாக இருந்துவரும். (கடி., 24-9-44)

ஜின்ன : இத்தகைய ஜீவாதாரமான விஷயங்களை ஒரு மத்ய ஸ்தாபனம் நிர்வகிக்கும் என்றால் அதற்கு எத் தகைய ஸ்தாபனம் அல்லது அமைப்பு நிர்மாணிக்கப்படும் என்பதுபற்றியும், அந்த ஸ்தாபனம் யாருக்கு ஜவாப் சொல்லும் என்பதைப்பற்றியும் நீங்கள் ஒன்றும் சுட்டிக் காட்டுவதில்லை. லாகூர் தீர்மானத்தின்படி நான் ஏற்கனவே சொன்னதுபோல் ஒரு சர்க்காரின் ஜீவநாடியான இந்த விஷயங்களை ஒரு மத்ய நிர்வாகத்திற்கோ, சர்க்காருக்கோ விட்டுவைக்கமுடியாது. இரு அரசாங்கத்தின் க்ஷேமமும், பொதுவான எல்லையுடன் வாழ்வதின் நிமித்தமாக இயற் கையாகவே எழக்கூடிய பரஸ்பர ஒத்துழைப்பு விஷயம் பாக்கிஸ்தானின் அரசியல் நிர்ணய ஸ்தாபனத்திற்கும் ஹிந்துஸ்தான் அல்லது சம்பந்தப்பட்ட வேறு சர்க்காரின் அரசியல் நிர்ணய ஸ்தாபனத்திற்கும் இடையே இரண்டு சுயேச்சையான சர்க்கார்கள் என்ற ஹோதாவில் முடிவு செய்யவேண்டியவை. (கடிதம், 25-9-44)

(f) லாகூர் தீர்மானமும் ராஜாஜி திட்டமும்

காந்தி : லாகூர் தீர்மானம் திட்டவட்டமாகவில்லை. அதன் சாரத்தை எடுத்து அதற்கு ராஜாஜி உருவம் கொடுத் திருக்கிறார். (கடிதம், 11-9-44)

ஜின்ன : லாகூர் தீர்மானம் எந்தவகையில் திட்ட வட்டமாகவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். அதன் சாரத்தை எடுத்து அதற்கு ராஜாஜி உருவம் கொடுத்திருக்கிறார் என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். 1944 வருஷம் ஜூலை மாதம் 30-ம் தேதி எனது

லாகூர் பிரசங்கத்தில் நான் குறிப்பிட்டுள்ளதுபோல், உருவம் கொடுப்பதற்கு மாறாக அதை உருக்குலேத்ததல்லாமல், சின்னுபின்னமாக்கி சிதைத்திருக்கிறார். (கடிதம் 11-9-44)

காந்தி: என்னே லாகூர் தீர்மானத்தின் அடிப்படையான கோட்பாடுகளே ஒப்புக்கொள்ளும்படி நீங்கள் சொல்கிறீர்கள், அம்மாதிரி கோட்பாடுகளே ஒப்புக்கொள்வதினால் எழக்கூடிய திட்டவட்டமான முடிவுகளே நான் அங்கீகரித்திருப்பதாக நான் எண்ணும்பொழுது நிச்சயமாக அக்கோட்பாடுகளே ஒப்புக்கொள்வது அவசியமில்லே.

(கடிதம், 24-9-44)

★

முஸ்லிம் லீகின் லாகூர் தீர்மானம்

1940 மார்ச் மாதத்தில் லாகூரில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் லீக் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பாக்கிஸ்தான் தீர்மானம்:—

"பின்வரும் ஜீவாதாரமான கோட்பாடுகளின் அடிப்படையில் அமைக்கப்படாத எந்த அரசியல் திட்டமும் இத்தேசத்தில் நடைமுறையில் கைகூடிவராதென்றும், அத்தகைய திட்டத்தை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்றும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

"சேர்ந்தாற்போன்ற, தொடர்ச்சியான, பூகோளபகுதிகளேக்கொண்ட பிரதேசங்களே, பிரதேச மாறுதலுக்குட்பட்டு, நிர்ணயம் செய்வதின்மூலம், முஸ்லிம்கள் பெரும்பான்மையராக வசிக்கும் வடகிழக்கு வடமேற்கு பிராந்திய நாடுகளில் சுதந்திர அரசாங்கம் ஏற்படவேண்டும். இந்த அரசாங்கத்திலுள்ள யூனிட்டுகள் பூரணசுதந்திர ராஜ்யங்களாயிருக்கும்.

இந்த பிரதேசங்களிலுள்ள மைனாரிட்டிகளின் மத, கலாச்சார, பொருளாதார, அரசியல், நிர்வாக உரிமைகளையும் இதர உரிமைகளையும் நலன்களையும் காப்பாற்றுவதற்கு, மைனாரிட்டிகளின் ஆலோசனைகளைக் கேட்டு, போதுமான, சட்டமூலம் நிர்ப்பந்தமுள்ள பாதுகாப்புகள் அளிக்கப்படவேண்டும். அதேபோல, இந்தியாவின் இதர பாகங்களிலுள்ள முஸ்லிம் மைனாரிட்டிக்கும் இதர மைனாரிட்டிகளுக்கும், மத, கலாச்சார, பொருளாதார, அரசியல், நிர்வாக உரிமைகளையும் இதர உரிமைகளையும் நலன்களையும் காப்பாற்ற, அவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு, தக்க, சட்டமூலம் நிர்ப்பந்தமுள்ள பாதுகாப்புகள் அளிக்கவேண்டும்.

பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், போக்குவரத்து, சுங்கம் முதலிய சகல அதிகாரங்களையும் கொண்ட ஆட்சி இந்த நிர்ணயிக்கப்பட்ட பிரதேசங்களில் இறுதியாக ஏற்படப்போவதென்ற உத்தேசத்தில், மேற்கண்ட ஜீவாதாரமான கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு அரசியல் திட்டம் தயாரிக்க காரியக்கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கிறது.

3. லாகூர் தீர்மானத்தின் அடிப்படையில்

(a) முஸ்லிம்கள் - ஒரு தேசிய இனமா ?

காந்தி : இரண்டு தேசிய இனங்கள் என்ற கோட்பாட்டைப் பற்றி தீர்மானத்தில் ஒன்றுமே சொல்லப்படவில்லை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். இந்தியாவில் இரண்டு தேசிய இனங்களிருக்கின்றன, அவர்கள் ஹிந்துக்களும், முஸ்லிம்களும். ஹிந்துக்களுக்கு இருப்பது போல் முஸ்லிம்களுக்கும் இங்கு தாயகங்களிருக்கின்றனவென்றெல்லாம் நம் விவாதத்தின்போது ஆர்வத்துடன்

வாதாடினீர்கள். தர்க்கம் அதிகரிக்க அதிகரிக்க நீங்கள் சொல்லும் விஷயம் எனக்கு பீதியைத்தான் உண்டாக்கு கிறது. நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாயிருந்தால் கவர்ச்சியளிக்கக்கூடியதுதான்; ஆனால் அவை மூற்றிலும் உண்மைக்கு மாறானது என்ற எண்ணம் என்னுள் அதிகப் பட்டு வருகிறது. மதம் மாறிய ஒரு கூட்டத்தினரும் அதன் சந்ததிகளும் அவர்கள் மூதாதையரை விட்டு தனியான ஒரு தேசீய இனம் என்று சொல்லிக் கொள்வதற்கு சரித்திரத் திலே வேறு திருஷ்டாந்தம் கிடையாது. இஸ்லாமிய மதம் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னர் இந்நாட்டு மக்கள் ஒரு தேசீய இனம் என்றால் அம்மக்களில் பெரும்பகுதியினர் அம்மதத்தை தழுவினாலும்கூட அது ஒரு தேசீய இனமாகத் தானிருக்கும். (கடிதம், 15-9-44)

ஜின்னா: தேசத்திற்குள்ள எந்தவிதமான லட்சணங் களை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் சரி; அல்லது வேறு எந்தவிதமான பரீட்சைக்கு உட்படுத்திப் பார்த்தாலும் சரி; ஹிந்துக்களும், முஸ்லிம்களும் இரண்டு பிரதான தேசீய இனங்கள் என்பதை நாங்கள் நிலைநாட்டுவோம். 10 கோடி மக்களைக்கொண்ட ஒரு தேசீய இனம் நாங்கள். எங்களுக் கென்ற தனியான பண்பும், நாகரீகமும், பாஷையும், நூல் களும், கலையும், கட்டிடமும், பெயர்களும், பொதுப் பெயர் களும், மதிப்பு உணர்ச்சியும், அளவு உணர்ச்சியும், சட்டங் களும், ஒழுக்கங்களும், பழக்கங்களும், பஞ்சாங்கமும், சரித் திரமும் பரம்பரையும், வாழ்க்கை இச்சைகளும், லட்சியங் களும் சுருங்கச் சொன்னால் எங்களுக்கு வாழ்க்கையைக் குறித்து கண்ணோட்டமும், வாழ்க்கைக் கண்ணோட்டமும் அலாதியானது. சர்வதேச சட்டத்தின் எந்த கோட்பாட்டின் படியும் நாங்கள் ஒரு தேசீய இனம். (கடிதம், 17-9-44)

காந்தி: ஒரு தேசீய இனத்தை நிச்சயிப்பதற்கு

புதியதொரு முறையையே நீங்கள் கொண்டுவந்து புகுத்தி விட்டீர்கள். இதை நான் ஒப்புக்கொண்டால் இன்னும் பல கோரிக்கைகளையும் ஒப்புக்கொள்ளவேண்டிவரும்; பிரச்னை யும் தீராததாய் முடியும்.

நமது தேசீய லட்சணத்திற்கு உண்மையானதும் தகுதி யானதுமான நிரூபணம் நமது பொதுவான அரசியல் அடி மைத் தனத்திலிருந்து விடுபடுவதேயாகும். இந்த அரசியல் அடிமைத்தனத்தை நீங்களும் நானும் ஒன்றுபட்டு, கூட்டு முயற்சியால் ஒழிப்போமானுல் அந்த அக்னிப் பிரவேசத்தி லிருந்து நாம் சுதந்திரம்பெற்ற ஒரு தேசீய இனமாக உரு வெடுப்போம்; அப்பொழுதும்கூட நமது சுதந்திரத்தை சிறப் பான தொன்றுகக்கொள்ள படித்துக்கொள்ளாவிடில், நமக் குள் நாம் சண்டையிட்டுக்கொள்வோம்; நம்மை அடக்கி ஆள்வதற்கும் தனது இரும்புப்பிடியில் நம்மை ஒன்றுகவைத் திருப்பதற்கும் ஒரு எஜமானன் இல்லாதகாரணத்தினுல் நாம் சின்னஞ்சிறு கூட்டங்களாகவும் தேசீயப் பிரிவுகளாக சிதறிப்போவோம். நம்மை அந்த மோசமான நிலைமைக்குப் போகாமல் தடுப்பதற்கு ஒன்றுமில்லை. ஒரு எஜமானனை தேடிக்கொண்டும் நாம் போகவேண்டியிருக்காது; என்றும் காலியில்லாமலிருக்கும் சிம்மாசனத்திற்கு நான், நீ என்று வருபவர்கள் பலர். (கடிதம் 15-9-44)

(b) பாக்கிஸ்தானும் இஸ்லாமியக் கூட்டுறவும்

காந்தி: பாக்கிஸ்தான் என்ற பதம் தீர்மானத்தில் இல்லை. பஞ்சாப், ஆப்கானிஸ்தான், காஷ்மீர், சிந்து, பலூஜிஸ்தான் இவற்றிலிருந்து ஞாபகார்த்தமாக உருவாக் கிய அந்த பெயர் ஆரம்பத்தில் பெற்ற அர்த்தத்தையே இன்னும் கொண்டிருக்கிறதா? இல்லை என்ருல் அர்த்தம் என்ன?

ஜின்ஞு: வாஸ்தவம், பாகிஸ்தான் என்ற பதம் அந்தத்

தீர்மானத்தில் (லாகூர் தீர்மானம்) குறிப்பிடப்படவில்லை; அதற்கு பழைய அர்த்தம் இடையாது. அந்த பதமும் லாகூர் தீர்மானமும் ஒரே பொருளேயே குறிக்கின்றன.

காந்தி: பாக்கிஸ்தானின் நோக்கம் முஸ்லிம் நாடுகளை எல்லாம் ஒன்று சேர்த்து முஸ்லிம் சாம்ராஜ்யம் அமைப்பதா?

ஜின்னு: இந்தக் கேள்விக்கு இங்கு இடமில்லை. இருந்தாலும் நான் அதற்கு பதில் சொல்கிறேன். அந்த விஷயம் வெறும் பூச்சாண்டி.

காந்தி: மற்ற இந்தியர்களிடமிருந்து ஒரு இந்திய முஸ்லிம் வேறுபட்டவன் என்பதற்கு மதத்தைத் தவிர வேறு என்ன இருக்கிறது? ஒரு துருக்கியனுக்கும் இந்திய முஸ்லிமுக்கும், ஒரு அராபியனுக்கும் ஒரு இந்திய முஸ்லிமுக்கும் வித்தியாசமுண்டா?

ஜின்னு: இந்த விஷயத்திற்கு பதில் முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம் என்ற என்னுடைய பதிலிலேயே அடங்கியிருக்கிறது. உங்கள் கேள்வியின் கடைசிப் பகுதியைப் பொறுத்த வரையில் (முஸ்லிமுக்கும் துருக்கியனுக்கும், முஸ்லிமுக்கும் அராபியனுக்கும் வித்யாசமுண்டா?) அதற்கும் தீர்மானத்தை விளக்குவதற்கும் எந்தவித சம்பந்தமும் இடையாது.

காந்தி: முஸ்லிம் பிரதேசங்களுக்குள்ளிருக்கும் "சுதந்திர அரசாங்கங்கள்" ஒவ்வொரு பிரதேசத்திலும் எவ்வளவு எண்ணிக்கை என்றில்லையா?

ஜின்னு: இல்லை. அவை பாக்கிஸ்தானின் அங்கங்களாகவிருக்கும்.

காந்தி: பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இருக்கும்பொழுதே எல்லைப்பிரிவினை செய்யப்படவேண்டுமா?

ஜின்னு: லாகூர் தீர்மானத்தின் அடிப்படையும், கோட்பாடும் ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் உடனடியாக எல்லே வகுக்கும் வேலையை எடுத்துக்கொள்ளவேண்டும்.

(கடிதங்கள் 15-9-44, 17-9-44)

(c) சுயநிர்ணயம் - இருவித அபிப்ராயம்

காந்தி: "இரண்டு தேசீய இனங்கள்" என்ற விஷயத்தில் உடன்பாடில்லையென்பதை அங்கீகரித்துக்கொண்டு அதே சமயத்தில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இந்தப் பிரச்னையைத் தீர்க்கமுடியாதா? சுயநிர்ணய உரிமை அடிப்படையைக்கொண்டுதான் நான் உங்களிடம் வந்தேன். முஸ்லிம்கள் பெருவாரியாக இருக்கக்கூடிய பிரதேசங்கள் லாகூர் தீர்மானத்தின்படி பிரிக்கப்பட வேண்டுமென்றுல், அந்த பிரதேசங்களில் வாழும் மக்களிடத்தில் பிரிவினை என்ற வருந்தத்தக்க அக்காரியம் குறிப்பாக வைக்கப்பட்டு அவர்களால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

(கடிதம் 19-9-44)

ஜின்னு: "சுயநிர்ணயம்" என்றுல் என்ன என்பதைப்பற்றி உங்களுக்கு தவறுன அபிப்ராயமிருக்கிறது என்று தோன்றுகிறது. பிரதேசரீதியில் நாங்கள் ஒரு அங்கம் அல்லது உருப்பு என்று சுயநிர்ணய உரிமையை கேட்கவில்லே; நாங்கள் ஒரு தேசீய இனமென்கின்ற முறையில் சுயநிர்ணயம் எங்கள் உரிமை என்று கேட்கிறேம். அது எங்களது பிறப்புரிமை. முஸ்லிம் தேசீய இனம் என்ற ரீதியில் யாரும் கொடுக்காமலே சுயமாகவே எங்களுக்கு உள்ள உரிமையை பிரயோகிக்க அதிகாரம் பெற்றிருக்கிறேம். ஆனுல் நீங்கள் தவருக எண்ணிக்கொண்டிருப்பது பிரதேசத்தைக்கொண்டு முடிவு செய்த ஒரு அங்கம் அல்லது பாகம், என்று. அதுவும் எல்லே இன்னும் வரையறுக்கப்

படவில்லை. குறிப்பிடவும்படவில்லை. இந்தியாவிற்கு பரிபூர்ண சுதந்திரம்கொண்ட மத்திய சர்க்காராக யூனியன் சமஷ்டி சர்க்கார் அரசியல் அமைப்பு அமுலிலிருக்கவில்லை. நாங்கள் சொல்லும் தேசிய இனப் பிரிவினை இரண்டு பிரதான தேசிய இனங்களான ஹிந்துக்களும், முஸ்லிம்களுக்கும் ஏற்படும் சமரசத்தின்பேரில் இரண்டு பரிபூர்ணமான சுதந்திரங்கொண்ட சர்க்கார்களை சிருஷ்டிப்பதேயாகும். இருக்கக்கூடிய ஒரு மத்திய யூனியன் சர்க்காரிடமிருந்து—அதுவும் இன்று இருக்கவில்லை—பிரிந்துபோவதோ அல்லது துண்டித்துக்கொள்வதோ அல்ல நாங்கள் கேட்பது. நாங்கள் கோருகின்ற சுயநிர்ணயம் நாங்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையை முன்வைக்கிறது. ஆகையால் அது முஸ்லிம் மக்களின் சுயநிர்ணயம். ஆகவே அந்த உரிமையை பிரயோகிக்க அவர்களுக்கு மட்டுமே உரிமையுண்டு.

(கடிதம், 21-9-44)

4. சகோதரர்கள் என்ற முறையில் பிரிவினை

காந்தி: இந்திய முஸ்லிம்கள் இந்தியாவில் வாழும் மற்ற குடிமக்களிடமிருந்து வேறுபட்ட ஒரு தனி தேசிய இனம் என்ற வாதத்தை என்னல் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அடித்துச் சொல்வதினுல், வலியுறுத்துவதினுல் அது நிரூபணமாய் விடாது. அம்மாதிரி வாதத்தை ஒப்புக்கொள்வதால் ஏற்படும் விளைவுகள் மிக மிக அபாயகரமானவை. அக்கோட்பாட்டை ஒப்புக்கொண்டவுடன் இந்தியாவை எண்ணற்ற துண்டங்களாக பிரிப்பதற்கு வரும் கோரிக்கைகளுக்கு எல்லையே இருக்காது; அது இந்தியாவின் நாசத்தில்தான் கொண்டுபோய்விடும். ஆதலால் நான் அதற்கு ஒரு வழியை சொல்லியிருக்கிறேன். பிரிவினை செய்யத்

தான் வேண்டுமென்றால் இரு சகோதரர்களுக்கிடையே ஏற்படும் பிரிவினையைப்போல் இருக்கட்டும்.

(கடிதம், 22-9-44)

ஜின்னா: இதன் (மேல்கூறிய சகோதரர் என்ற முறையில் பிரிவது) அர்த்தம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை; இந்த யோசனையை நீங்கள் கொஞ்சம் விளக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். லாகூர் தீர்மானம் கூறுகின்ற பிரிவினை, நீங்கள் புதிதாகச்சொல்லும் யோசனைப்படி வரக்கூடிய பிரிவினையோடு எந்த வழியில் வேறுபட்டது? பிரிவினை எப்பொழுது? எப்படி ஏற்படும் என்பவை பற்றி யெல்லாம் பொதுவான முறையிலாவது விளக்கம் கொடுக்கவும். (கடிதம், 23-9-44)

(a) ஆகஸ்டு தீர்மானம் முட்டுக்கட்டையில்லை

காந்தி: முஸ்லிம் இந்தியாவின் கோரிக்கைகளுக்கும் லட்சியத்திற்கும் தீமை விளைவிக்கக் கூடியது' 1942 வருஷத்திய ஆகஸ்டு தீர்மானம் என்ற அபிப்பிராயத்தை அடிக்கடி சொல்லி வருகிறீர்கள். ஒரேயடியாகச் சொல்லும் இந்த அபிப்ராயத்திற்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது. (கடிதம், 22-9-44)

ஜின்னா: 'முஸ்லிம் இந்தியாவின் கோரிக்கைக்கும், லட்சியத்திற்கும் 1942 ஆகஸ்டு தீர்மானம் தீமை விளைவிக்கக் கூடியது என்று நான் சொல்வதை ஒரேயடியாகக் கூறும் கூற்றாக குறிப்பிட்டு, அதற்கு ஆதாரம் ஒன்றுமில்லை என்று சொல்வதைக்கண்டு நான் உண்மையில் ஆச்சரியமடைகிறேன். அத்தீர்மானத்தின் சாராம்சம் கீழ்க்காணுமாறு:—

(i) உடனடி பரபூர்ண சுதந்திரமளிப்பது; பல அங்கங்கள் அல்லது மாகாணங்கள் சேர்ந்து ஐக்ய ஜனநாயக சர்க்காரின் அடிப்படையில் சமஷ்டி சர்க்காரை உடனே நிர்மா

ணம் செய்வது; இதன் அர்த்தம் ஹிந்து ஆட்சியை அமைப்பது.

(ii) இப்படி நிறுவப்படும் தேசிய சர்க்கார் அரசியல் நிர்ணய சபையை உருவாக்குவதற்கு ஒரு திட்டம் வகுக்கும்; அந்த அரசியல் நிர்ணய சபை வயது வந்த ஆண் பெண் அனைவருடைய வாக்கு உரிமையால் தேர்ந்தெடுக்கப்படுவது; அந்த சபை இந்திய சர்க்காருக்கு அரசியல் அமைப்பைத் தயாரிக்கும்; இதன் அர்த்தம் அந்த அரசியல் நிர்ணய சபை பெருவாரியான ஹிந்துக்களையே கொண்டிருக்கும், சுமார் நூற்றுக்கு 75 பேர் விகிதம் இருக்கும்.

(iii) இந்த காங்கிரஸ் கோரிக்கையை நடைமுறைக்குக் கொண்டுவர உங்கள் தலைமையின்கீழ் ஆகஸ்டு தீர்மானம் பொதுஜன சட்டமறுப்பு இயக்கத்தை முடிவுசெய்து காங்கிரஸின் ஏகசர்வாதிகாரி என்ற முறையில், நீங்கள் உத்திரவு கொடுத்தால், இயக்கத்தை துவக்குவதற்கு அதிகாரமும் அளிக்கிறது.

இந்தக் கோரிக்கை முஸ்லிம் இந்தியாவின் கோரிக்கைக்கும், லட்சியத்திற்கும், அதாவது லாகூர் தீர்மானத்தில் சொல்லப்படும் பாக்கிஸ்தானுக்கு, அடிப்படையாக முரண்பட்டது. அந்தக் கோரிக்கையை, பொதுஜன சட்டமறுப்பு ஆரம்பிப்பதின் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வருவது முஸ்லிம் இந்தியாவின் கோரிக்கைகளுக்கும் லட்சியத்திற்கும் தீங்கு விளைவிக்கக் கூடியது. இந்தக் கோரிக்கையை அடைவதில் வெற்றிபெற்று விடுவீர்களானால் அது முஸ்லிம் இந்தியாவிற்கு குழிதோண்டிவிடும். உங்கள் கடிதங்களிலிருந்தும், பேச்சிலிருந்தும் நீங்கள் இன்னும் அந்த அபாயகரமான தீர்மானத்தை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது.

(கடிதம் 23-9-44)

காந்தி : ஜின்னா: லாகூர் தீர்மானத்தில் காணும் கோரிக்கையை நியாயமான அளவிற்கு பூர்த்திசெய்வதின் மூலம், ஒரு சமரசத்திற்கு வரும்பொருட்டு உங்களுடைய ஒத்தாசையுடன் வழிகளை நான் தேடிக்கொண்டிருக்கிறேன். ஆதலால் நமக்குள் சமரசம் ஏற்படுவதற்கு ஆகஸ்டு தீர்மானம் இடையூறாக இருக்குமே என்ற சந்தேகம் உங்களுக்கு வேண்டியதில்லை. பிரிட்டனை எதிர்த்து இந்திய பிரச்னையை எடுத்துச் சொல்வது அத்தீர்மானம். நமது சமரசத்திற்கு குறுக்கே அது நிற்காது. (கடிதம், 24-9-44)

(b) காந்திஜியின் புதுத்திட்டம்

காந்தி : பொதுவான அடிப்படையில் உங்களுடன் வேறுபட்டாலும், என்னுடைய அடிப்படையில் 1940 வருஷத்திய லாகூர் தீர்மானத்திலுள்ள பிரிவினைக் கோரிக்கையை கீழ்க்கண்ட திட்டத்தின்படி, காங்கிரஸூம், நாடும் ஒப்புக்கொள்ளும்படியாக நான் சிபார்சு செய்யமுடியும் :

- காங்கிரஸூம் லீகும் அங்கீகரித்த ஒரு கமிஷன் பிரதேசங்களுக்கு எல்லைகளை வரையறுக்கும். அப்படி எல்லையிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களின் முடிவை, வயதானவர்கள் வாக்களிப்பதின் மூலம் அல்லது அதற்கு சமமான வேறு வழிகளில் தெரிந்துகொள்ளவேண்டும்.

- பிரிவினைக்கு சாதகமாக ஓட்டுகள் விழுந்தால் அந்நிய ஆட்சியிலிருந்து இந்தியா விடுபட்டவுடன் எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில், அப்பிரதேசங்களுக்கு தனிப்பட்ட அரசாங்கம் அங்கீகரிக்கப்படும். இரண்டு பரிபூர்ணசுதந்திர சர்க்கார்கள் நிர்மாணிக்கப்படும்.

- பிரிவினைக்கு ஒரு உடன்படிக்கை இருக்கும்; அதே உடன்படிக்கையில் அயல்நாட்டுக்கொள்கை, பாதுகாப்பு,

உள்நாட்டு போக்குவரத்து, சுங்கம், வியாபாரம் முதலியனவற்றை திறம்பட நிர்வகிக்கும்பொருட்டு முடிவுகள் செய்ய வேண்டும்; உடன்படிக்கையில் கையொப்பமிடும் இரு கட்சியினருக்கும் இவ்விஷயங்கள் எப்பொழுதுமே பொதுவான அக்கரையுள்ளனவாயிருந்து வரும்.

- இரண்டு சர்க்கார்களின் ஆட்சியின்கீழிருக்கும் சிறுபான்மையோர்களின் நலன்களை பாதுகாக்கும் ஷரத்துகள் அதே உடன்படிக்கையில் இருக்கும்.

- இந்த சமரசத்தை காங்கிரஸும் லீகும் ஒப்புக்கொண்ட உடனேயே இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு இரு ஸ்தாபனமும் பொதுவான வேலைத்திட்டத்தை முடிவு செய்யும்.

- காங்கிரஸ் ஏதாவது சட்ட மறுப்பு போன்ற பொது ஜனப் போராட்டங்களில் இறங்கினால், அதில் லீக் கலந்து கொள்ள விரும்பவில்லையென்றால் அதிலிருந்து லீக் விலகி நிற்பதற்கு சுதந்திரம் உண்டு.

இந்தத் திட்டத்திற்கு நீங்கள் ஒத்துவரவில்லையென்றால் லாகூர் தீர்மானத்தின்படி திட்ட வட்டமாக நான் எந்த நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளவேண்டும், எதை காங்கிரஸிற்கு சிபார்சு செய்யக் கட்டுப்படவேண்டும் என்பதை விபரமாகவும், தெளிவாகவும் எனக்கு சொல்லமுடியுமா? அதை நீங்கள் தயவுசெய்து சொன்னால், நமது கண்ணோட்டத்திலுள்ள வேற்றுமை ஒருபுறமிருக்க என்ன என்ன குறிப்பான ஷரத்துகளை நான் ஒப்புக்கொள்வது சாத்யம் என்று உணர்ந்துகொள்ளமுடியும். செப்டம்பர் 23-ம் தேதி நீங்கள் எழுதிய கடிதத்தில் "லாகூர் தீர்மானத்தின் அடிப்படையான" கொள்கைகளைப்பற்றி சொல்லிவிட்டு அவற்றை நான் ஒப்புக்கொள்ளவேண்டும் என்கிறீர். நிச்சயம் அது

அவசியமில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். ஏனெனில் அம்மாதிரியான அங்கீகாரத்திலிருந்து இயற்கையாக எழக்கூடிய உருப்படியான யோசனைகளை நான் ஒப்புக்கொண்டிருக்கிறேன். (கடிதம், 24-9-44)

ஜின்னு: லாகூர் தீர்மானத்தின் அடிப்படையான கோட்பாடுகளை நீங்கள் ஏற்கனவே நிராகரித்து விட்டீர்கள்.

இந்தியாவில் வசிக்கும் முஸ்லிம்கள் ஒரு தேசீய இனம் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வதில்லை.

முஸ்லிம்களுக்கு யாரும் எடுத்தளிக்காமல் சுயமாகவே சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வதில்லை.

அவர்களுடைய இந்த உரிமையை அவர்கள் மட்டுமே பிரயோகிக்க அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வதில்லை.

பாக்கிஸ்தான் என்பது இரண்டு பிரதேசங்களைக் கொண்டது; வட மேற்கு, வட கிழக்கு பிரதேசங்கள். இப்பிரதேசங்கள் லாகூர் தீர்மானத்தில் காட்டியுள்ளது போல், சமரசப்படி எல்லைகளை திருத்தி யமைக்கலாம் என்ற நிபந்தனையுடன் சிந்து, பலூஜிஸ்தான், எல்லைப்புற மாகாணம், பஞ்சாப், வங்காளம், அஸ்ஸாம் ஆகிய ஆறு மாகாணங்களைக்கொண்டது. மேலே குறிப்பிட்டுள்ள அடிப்படையை ஒப்புக்கொண்ட பிறகு எல்லையை நிர்ணயிப்பது, பிரதேசத்தை குறிப்பிடுவது போன்ற விஷயங்கள் எடுத்துக் கொள்ளலாம், அதற்கென பரஸ்பர உடன்பாடுடன் ஸ்தாபனமும் ஏற்படுத்தலாம்.

விவாதங்களிலிருந்தும், உங்கள் கடிதங்களிலிருந்தும் பாக்கிஸ்தான், இந்துஸ்தான் என்ற பிரிவினை பிரச்னை உதட்டளவிலிருக்கிறது; உங்கள் உள்ளத்திலிருந்து எழவில்லை என்பது வெளியாகிறது.

உங்கள் திட்டத்திலிருந்து நீங்கள் எடுத்துக்கொண்ட அடிப்படை லாகூர் தீர்மானத்தின் அடிப்படைக் கொள்கைக்கும், கோட்பாட்டிற்கும் முற்றிலும் விரோதமாகவும், அடியோடு முரண்பட்டதாயுமிருக்கிறது என்று தெரிகிறது.

(எல்லை, ஓட், பரஸ்பர உடன்படிக்கை முதலிய விஷயங்களைப்பற்றி காந்திஜியின் திட்டத்தில் கூறும் யோசனைகளுக்கு மேலே பல்வேறு பகுதிகளில் கூறியிருக்கும் தனது ஆட்சேபனைகளை திரும்பவும் சொல்லிவிட்டு கீழ்க்காணுமாறு சொன்னதைச் சுருக்கச் சொல்கிறார்) :—

ஆதலால் உங்களுடைய புது யோசனையின் முழு அடிப்படையும் லாகூர் தீர்மானத்திற்கு முற்றிலும் மாறானது என்பதை நீங்களே உணர்வீர்கள். மேலும் நான் ஏற்கனவே கடிதத்திலும் விவாதத்திலும் உங்களுக்கு சுட்டிக் காட்டியதுபோல், நீங்கள் பிரதிநிதித்வ அந்தஸ்துடன் யோசனைகளை பிரேரேபிக்காதவரையில், தனிப்பட்ட முறையில் உங்களோடு யோசனைக்கு மறு யோசனைகள் கொடுப்பதோ, பேச்சுவார்த்தைகள் நடத்தி ஒரு சமரசத்திற்கு வருவதோ கடினம்.

(ஜின்னா கீழ்வருமாறு முடிக்கிறார்) லாகூர் தீர்மானத்திலிருந்து உருப்படியாக எழுகின்ற நிபந்தனைகளை நீங்கள் ஒப்புக்கொண்டுவிட்டதாகச் சொன்னால் பின் ஏன் அத்தீர்மானத்தின் அடிப்படையை ஒப்புக்கொண்டு, விபரங்களை பூர்த்தி செய்வதற்கு மேலே செல்லக்கூடாது.

(கடிதம், 25-9-4)

முறிவு

காந்தி: நான் நேற்று அளித்த யோசனைகள் லாகூர் தீர்மானத்தின் அத்யாவசியமான அம்சங்களை ஒப்புக்கொள்வதற்கு எடுத்துக்கொண்ட எனது மனப்பூர்வமான முயற்சி.

வகுப்பு ஒற்றுமை என்ற லட்சியத்தை மனத்தில் கொண்டு, அதற்கென சேவைபுரியும் ஒரே நோக்கத்துடன் அளித்த யோசனைகளை நிராகரிக்கும் முன்பு ஐம்பது தரமாவது யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் கொடுக்கும் யோசனையை நிராகரிக்கும் பொறுப்பை எடுத்துக்கொள்ளவேண்டாமென்று மன்றாடி வேண்டுகிறேன். அதை உங்கள் கவுன்ஸில் முன் சமர்ப்பியுங்கள். அக்கவுன்ஸிலில் பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கொடுங்கள். அவர்கள் அதை நிராகரிப்பதென உத்தேசித்தால், அதை லீக் மகாநாட்டில் வைக்கும்படி அவர்களுக்கு யோசனை சொல்லுங்கள். என் புத்திமதியை ஏற்றுக்கொண்டு என்னை அனுமதித்தால், லீக் மகாநாட்டிற்கு விஜயம் செய்து பேசுகிறேன். (கடிதம் 25-9-44)

ஜின்னா: நேற்று நீங்கள் அனுப்பிய யோசனைக்கும், செப்டம்பர் மாதம் 24-ம் தேதிக் கடிதத்தில் கொடுத்திருக்கும் அதன் சுருக்கத்திற்கும், என்னுடைய பதில் ஏற்கனவே அனுப்பிவிட்டேன்.

கவுன்ஸில் கூட்டத்தில் பேச அனுமதி அளிப்பது, உங்களுடைய “யோசனை”யை அவர்கள் நிராகரிப்பதாயிருந்தால் லீக் மகாநாட்டில் அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற யோசனை கூறுவது—இவை சம்பந்தமாக, நான் தெரிவித்துக்கொள்ளுவது என்னவென்றால் ஒரு அங்கத்தினரோ அல்லது பிரதிநிதியோ தான் முறையே கவுன்ஸில், மகாநாட்டு கூட்டங்களின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொள்ள உரிமை உண்டு. அன்றியும் உங்கள் வேண்டுகோள் வெகு அசாதாரணமானதும், இதுவரை யாரும் கேட்காததுமானதாயிருக்கிறது. என்ன இருந்தாலும் உங்கள் புத்திமதிக்கு வந்தனம். (கடிதம், 26-9-44)

காந்தி: லாகூர் தீர்மானத்தின் அடிப்படைக் கோட்

பாடு என்று நீங்கள் சொல்லும் ஒரு தத்வத்தை நான் ஒப்புக் கொண்டு தானாகவே வேண்டுமென்று விடாமல் வற்புறுத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

ஒரு பிரச்னையை அணுகுவதில் நம்மிருவருக்கும் வேறு பட்ட கண்ணோட்டமிருப்பதால், நான் வாதாடி வருவதெல்லாம், தீர்மானத்தில் கண்டபடி கோரிக்கைக்கு உருவம் கொடுத்து, இருவருக்கும் திருப்தியளிக்கும் முறையில், விபரங்களை பூர்த்தி செய்யலாம் என்பதே. இந்த வழியில் ராஜாஜியின் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். அதே வழியில்தான் நமது பேச்சு வார்த்தைகள் நடக்கும்போது, சம்பாஷணையிலிருந்தே நானும் திட்டம் தயாரித்தேன். ஒவ்வொன்றும் லாகூர் தீர்மானத்தின் முக்ய அம்சங்களை அளிக்கின்றது என்பது என் வாதம். துரதிருஷ்ட வசமாய் நீங்கள் இரண்டையும் நிராகரிக்கின்றீர்கள். நீங்கள் விரும்பும் வகையில் நான் லாகூர் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளமுடியாது. அதுவும் குறிப்பாக தீர்மானத்தை வியாக்யானம் செய்யும்பொழுது நீங்கள் நான் ஒப்புக்கொள்ள முடியாததும், தேசத்தை என்னைக் காவது ஒப்புக்கொள்ளச் செய்யமுடியும், என்று நம்பமுடியாததுமான கொள்கைகளையும், கோரிக்கைகளையும் புகுத்த முயற்சிக்கும்பொழுது அதை ஏற்றுக்கொள்ள அசக்தனா யிருக்கிறேன். நீங்கள் பேச்சுவார்த்தைகளை முறித்தால் அதற்குக் காரணம், எனக்கு பிரதிநிதித்வ அந்தஸ்து இல்லை யென்பதோ அல்லது லாகூர் தீர்மானத்தில் அடங்கியுள்ள கோரிக்கை விஷயத்தில் உங்களுக்கு நான் திருப்தியளிக்க வில்லை யென்பதோ ஆகாது. (கடிதம் 26-9-44)

ஜின்னா: ஒரு மனிதர் எவ்வளவு பெரியவராயிருந் தாலும் சரி, தனிப்பட்ட முறையில் அவரிடமிருந்து எந்த விதமான பொறுப்புவாய்ந்த ஸ்தாபனமும் யோசனைகளை

எடுத்துக்கொண்டு சமரசப் பேச்சு நடத்தாது; அங்கீகாரம் பெற்ற ஒரு ஸ்தாபனத்தின் ஆதரவைப்பெற்று, பூர்ண அதிகாரம்கொண்ட பிரதிநிதியின் மூலம் அந்த யோசனை வந்தால் ஒழிய எடுத்துக்கொள்ள முடியாது. நான் ஏற்கனவே இந்த விஷயத்தை கடிதத்தில் விளக்கியிருப்பதால் இனிமேல் அதை திரும்பத்திரும்பச் சொல்ல வேண்டியதில்லை.

பேச்சுவார்த்தை முறிந்தால் அதற்குக் காரணம் லாகூர் தீர்மானத்தில் கண்டுள்ள முக்கிய கோரிக்கையின் சாராம்சத்தை நீங்கள் எனக்கு அளிக்காததே. நீங்கள் இஷ்டப்படவில்லை என்பதில்லை; ஆனல் நடைமுறையில் அப்படித்தான் வந்து சேருகிறது. பேச்சுவார்த்தை முறிந்தால் அது மிகவும் வருந்தத்தக்கது. ஒருவருக்கு உங்களிடத்தில் ஒப்புமையில்லை, வேறுபடுகிருர் என்ருல், நீங்கள் எப்பொழுதுமே சரி, மற்ற கட்சிஎப்பொழுதுமே தவறு. அடுத்தபடி உங்கள் கூட்டத்தில் பல ஆட்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்; நீங்கள் சொல்லவேண்டியதுதான், என்னைத் தூற்றத் தொடங்கிவிடுவார்கள். ஆனல் நான் எல்லா மிரட்டல்களையும், வசைவுகளையும் விளைவுகளையும் சமாளித்துத் தானகவேண்டும். எனது மனச்சாட்சிக்கும், புத்திக்கும் விரோதமில்லாமல்தான் நான் நடக்க முடியும்

(கடிதம், 26-9-44)



அ. இ. முஸ்லிம் லீகின் லட்சியம்

(i) முஸ்லிம்கள் எண்ணிக்கையில் பெருவாரியாக விருக்கும், பிரதேசங்களை அதாவது இந்தியாவில் வடகிழக்கு வடமேற்குப் பிரதேசங்களை எல்லையில் என்னென்ன மாறு தல்கள் தேவையாயிருக்குமோ அதைச் செய்து பூகோள வாரியாக தொடர்புடைய அங்கங்களை சுயேச்சையான முஸ் லிம்களின் சுதந்திர தேசீய தாயகங்களை அமைப்பதற்காக ஒன்றுகூட்டி ஒரு பிரதேசமாக வரையறுத்து, பரிபூர்ண சுதந்திர சர்க்கார்களை அமைப்பது; அதில் சேரும் அங்கங் கள் பரிபூர்ண சுதந்திரமும் சுயாட்சியும் கொண்டிருக்கும்.

(ii) மேற்கூறிய அங்கங்களிலும் பிரதேசங்களிலும் வாழும் சிறுபான்மையோருடைய மத, கலாச்சார, பொரு ளாதார, அரசியல், நிர்வாக, உரிமைகளையும், இன்னும் இதர உரிமைகளையும் நலன்களையும் காப்பதற்கு, அவர்களுடன் கலந்தாலோசித்து பலன் தரும் முறையில் சட்டபூர்வமாக நிர்ப்பந்தமுள்ள போதிய பாதுகாப்புகள் குறிப்பாக அரசி யல் அமைப்பில், ஏற்படுத்தப்படும்.

(iii) இந்தியாவில் முஸ்லிம்கள் சிறுபான்மையோராக விருக்கக்கூடிய இதரபாகங்களில் அவர்களுக்கும் அல்லாத மற்ற சிறுபான்மையோர்களுக்கும் மத, கலாச்சார, பொரு ளாதார, அரசியல், நிர்வாக உரிமைகளையும், இன்னும் இதர உரிமைகளையும் நலன்களையும் காப்பதற்கு அவர் களுடன் கலந்தாலோசித்து பலன்தரும் முறையில், சட்ட பூர்வமாக நிர்ப்பந்தமுள்ள போதிய பாதுகாப்பு குறிப்பாக அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்படும்.

[பிரிவு 2(a) அகில இந்திய முஸ்லிம் லீக் சட்டதிட்டங் களில் குறிப்பிட்டது (1941).]



"டெய்லி ஒர்க்கர்" நிருபர் எ. எஸ். ஆர். சாரி ஜின்னாவின் பேட்டி.

"பாக்கிஸ்தான் ஹிந்துஸ்தானுடன் நேச உறவு கொள்ளும்"

••••••••••••

காய்தே ஆஜம் ஜின்னு பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி தினசரி, "டெய்லி ஒர்க்கர்" நிருபர் எ. எஸ். ஆர். சாரிக்கு அளித்த பேட்டியின் விவரம் :—

அக்டோபர் மாதம் 5-ம் தேதியன்று லண்டன் 'டெய்லி ஒர்க்கர்' பத்திரிகையின் சார்பில் அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் ஜனுப் ஜின்னுவை பேட்டி கண்டேன்.

"காந்தி-ஜின்னு சம்பாஷணைகளின் முறிவும் அதனுடன் வெளியான தலைவர்களின் கடிதப் போக்கு வரத்து விபரமும் நம்முடைய வித்தியாசங்களையே மேனுட்டு நண்பர்களுக்குத் தெளிவு படுத்துகிறது. நம் நாட்டுத் தலைவர்களே ஒத்துப்போகவில்லை என்ருல், இந்தியாவுடன் சமரசம் செய்துகொள்ள முடியாதென்று இறுமாப்புடன் சொல்லும் அமெரி முன் நம் நண்பர்கள் திகைத்து நிற்பார்கள்.

"இந்தியாவிலேயே, முஸ்லிம் அல்லாத தேசபக்தர்கள் ஜனுப் ஜின்னுவைப் பற்றி தப்பபிப்ராயப் படுகின்றனர். "அவருடைய கோரிக்கைகள் இணங்க முடியாதவை" என்கின்றனர். அவர் இறங்கி வராவிட்டால், சமரசம் சாத்தியமில்லை என்றும் கருதுகின்றனர்.

வெகு கண்யம்

"நான் அவரை சந்தித்தேன். இரண்டு மணி நேரம், சுவாரஸ்யமான முறையில் சம்பாஷித்தோம். "ஜின்னு

வுக்கு பொறுமையில்லை; அதிகம் பேசமாட்டார்" என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் என்னுடன் கண்ணியமாய் சம்பாஷித்தார்; சரஸமாகப் பேசினார்; பொறுமையுடன் நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டார்.

"பாக்கிஸ்தான் கோரிக்கை மதக்கோரிக்கையாகவே முஸ்லிம் அல்லாத தேசபக்தர்களுக்குத் தென்படுகிறதென்று ஆரம்பத்திலேயே எடுத்துரைத்தேன். அதனால் அதை அவர்கள் ஒரு ஜனநாயக சுதந்திரக் கோரிக்கையாக கருதமாட்டேனென்கிறார்கள். அதனால் பாக்கிஸ்தான் ஹிந்துக்களின் ஜனநாயக உணர்வைத் தட்டி எழுப்புவதற்குபதிலாக அவர்களிடத்தில் தப்பபிப்பிராயங்களையே கிளப்புகிறது.

"பாக்கிஸ்தான் கோரிக்கையை முஸ்லிம் அல்லாத தேசபக்தர்கள் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கிக்கூறும்படி கேட்டுக்கொண்டேன்.

"ஜனப் ஜின்னா கூறினார், "பாக்கிஸ்தான் கோரிக்கையின் பரிபூர்ண தாத்பரியத்தை உணர்வதற்கு கீழ்வரும் இந்த உண்மைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும்:— வடமேற்கு, வடகிழக்கு பிரதேசத்தில் உள்ள எல்லைப்புற மாகாணம், பஞ்சாப், ஸிந்து, பலுச்சிஸ்தான், வங்காளம், அஸ்ஸாம் ஆகிய ஆறு மாகாணங்களிலும் 7 கோடி முஸ்லிம்கள் வசிக்கின்றனர்; மொத்த ஜனத்தொகையில் இவர்கள் 70 சத விகிதத்துக்குக் குறைவில்லை. இதரர் ஜாதி-ஹிந்துக்கள், தீண்டாதவர், மலை ஜாதியினர். பிரதானமாக அஸ்ஸாமில் மலை ஜாதியினர் அதிகம்.

"தங்களுடைய தாயகங்களாகிய இந்த இரண்டு பிரதேசங்களிலும் முஸ்லிம்கள் தங்களின் சுதந்திர அரசாங்கத்தை, பாக்கிஸ்தானை ஸ்தாபிக்க விரும்புகின்றனர்.

முஸ்லிம் சுதந்திரம்

கேள்வி : *'பாக்கிஸ்தான் எப்படி முஸ்லிம்களின் சுதந் திரக் கோரிக்கையாகும் என்பதை விளக்குவீர்களா ?*

பதில் : ' அது சுதந்திரக் கோரிக்கையே ; ஏனென்றால் பாக்கிஸ்தானில் வாழும் முஸ்லிம்கள் தங்களுடைய சொந்த உண்மை ஜனநாயக பொதுஜன ஆட்சிஸ்தாபிப்பதை சாத்யமாக்க விரும்புகின்றனர். இந்த சர்க்கார் பாக்கிஸ் தான் பிரதேசத்தில் வசிக்கும் பொதுமக்களின் சம்மதத் தைப் பெற்றிருக்கும். ஜாதி, நிறம், கொள்கை பேதமில்லா மல், பாக்கிஸ்தானிலுள்ள சகல ஜனங்களின் அங்கீகாரத் தையும் ஆதரவையும் கொண்டுதான் சர்க்கார் ஆட்சி புரியும்.

கேள்வி : *"பாக்கிஸ்தான் ஹிந்துஸ்தானுடன் சகோதர உறவு பூண்டிருக்குமா ?"*

பதில் : " நிச்சயமாக, இரண்டு சுதந்திர தேசீய அர சாங்கங்கள் ஒன்றுடன் ஒன்று எப்படி சகோதர உறவு கொள்கிறதோ அப்படியே பாக்கிஸ்தான் ஹிந்துஸ்தானு டன் சகோதர உறவு கொள்ளும். இதை நான் பல தடவை கள் கூறியிருக்கின்றேன். அயல் தேசத்தவருக்கு, "உஷார் ! இந்தியாவின் மீது கை வைக்காதே " என்று நாம் சொல் வோம். இந்த சிறு கண்டத்தின் (இந்தியா) மேல் எவ் விதமான ஆக்கிரமிப்பையோ ஆசையையோ பாக்கிஸ்தான் அனுமதிக்காது. அமெரிக்கர்கள் அனுஷ்டிக்கும் மன்ரோ கொள்கையைப் * போன்ற ஒரு கொள்கையை நாம்

---

* *மன்ரோ கொள்கை : அமெரிக்கா கண்டத்திலுள்ள எந்த ஒரு நாட்டையும் அந்நியர் ஆக்ரமித்தால் இதர அமெரிக்க நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஆக்கிர மிப்பாளனை எதிர்க்கும்.*

இந்தியாவில், அதைவிட அதிக சிரத்தையுடன் அனுஷ்டிப் போம். நாங்கள் ஹிந்துக்கள் விஷயத்தில் கொண்டிருக்கும் இதே மனோபாவத்தை அவர்களும் எங்கள் விஷயத்தில் கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஏகாதிபத்ய எதிர்ப்பு

கேள்வி: "உங்கள் கோரிக்கை, இயக்கம்பற்றி பிரிட்டிஷ் சர்க்காரின் மனோபாவம் என்ன?

பதில்: "இதரர்களைவிட பிரிட்டிஷ் பிற்போக்கு ஆட்சி வர்க்கம் பாக்கிஸ்தான் உருவாவதை தீவிரமாக எதிர்த்து நிற்கும். ஏனென்றால் பாக்கிஸ்தான் மூலம்தான் இந்தியாவிலுள்ள பல்வேறு தேசிய இனங்களும் நிச்சயமாக, துரிதமாக, விடுதலை அடையும் என்பது என் முடிவு. இது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

இந்திய மசோதா பார்லிமெண்டில் நிறைவேற்றப் பட்டு, இந்திய ஆட்சி பிரிட்டிஷ் மன்னர் கைக்கு சென்ற காலத்திலிருந்து (1858) ரகசியக் கடிதங்கள் மூலமாகவும், பகிரங்க அரசாங்க யாதாஸ்துகள் மூலமாகவும், ஐக்கிய இந்தியா என்றால் ஏகாதிபத்திய ஆட்சி நீடிப்பு என்பதை திரும்பத் திரும்ப தெளிவுபடுத்தி யிருக்கின்றனர். நூறு வருடங்களாக அவ்வழியில் நம்மை வைத்திருக்கின்றனர்.

"எவ்வித முன்னேற்றமுமில்லாமல் தடுக்க முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். "இந்தியா ஒரு தேசிய அங்கம் அதற்கென ஒரு ஐக்கிய ஜனநாயக பார்லிமெண்டரி சர்க்கார்" என்ற கோஷத்தை ஹிந்து இந்தியாவிடம் உபயோகித்துக்கொண்டு, இயற்கைக்கு விரோதமாக, ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒன்றாய் சேர்த்துவைக்க முயற்சிக்கிறார்கள். இது நடக்காது.

“இந்திய முன்னேற்றமும் நலன்களும் உங்கள் சண்டை பூசல்களால் தடைபடுவதை நாங்கள் அனுமதியோம். ஆளுவதற்கு கடவுளின் அனுக்ரஹம் பெற்ற நாங்கள் எங்கள் கடமையை செய்தாகவேண்டும். நீங்கள் சமரசம் செய்துகொள்ளும் வரையில் காத்திருக்க முடியாது. அதனுல் எஜமானர்கள் என்ற ஹோதாவில் சண்டை செய்துகொண்டிருக்கும் உங்கள்மீது இந்த அரசியல் திட்டத்தை திணிக்கிரும்” என்று சொல்லிக்கொண்டு 1935ல் ஒரு சட்டத்தை திணித்தது போல், மறுபடியும் ஒரு சட்டத்தை திணிப்பதற்கு சால்ஜாப்பு சொல்வதற்கு ஸ்திரமான நிலைமையை உண்டாக்கிக் கொள்ளும் தந்திரமே ஐக்கிய இந்தியா கோஷம். அத்தகைய அரசியல் திட்டத்தின்கீழ், ஹிந்துக்களோ, முஸ்லிம்களோ, வேறு எந்த இந்தியரோ சுதந்திரமாயிருக்க முடியாது.

பாதுகாப்பு

கேள்வி :—“ பஞ்சாபில், கவர்ன்மெண்டும் அதன் ஏஜெண்டுகளும், பாஸிஸ்ட் எதிர்ப்பு யுத்த முயற்சிகளில் உங்களுக்கு சிரத்தையில்லையென்றும் லீக் மந்திரி சபைகள் யுத்த முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் என்றும் பிரசாரம் செய்கிருர்களே, அது உண்மையா?

பதில் :—“ இது பச்சைப் பொய். யுத்த முயற்சிகளுக்கு எவ்வகையில் தடையுமே நாங்கள் செய்யவில்லை. நாங்கள் அன்னிய ஆக்கிரமிப்பை விரும்பவில்லை. அதற்கு மாருக, எங்கள் குடியிருப்பு பிரதேசங்களை பாதுகாக்கவும், யுத்தத்தில் ஒத்துழைக்கவும் தயாராயிருக்கிரும் என்று யுத்த ஆரம்பத்திலிருந்தே, நான் படித்துப் படித்து கூறியிருக்கிறேன், முஸ்லிம் லீகும் திரும்பத் திரும்ப தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறது.

"எங்கள் கட்சியை பிரிட்டிஷ் சர்க்கார் மறுத்துவிட்டதால் எங்களால் எவ்வித உதவியும் செய்ய முடியவில்லை. சர்க்கார் நிர்வாக அதிகாரத்தில் எங்களுக்கு உண்மையான பங்கு கொடுக்க மறுத்துவிட்டது. சர்க்கார் சகல அதிகாரங்களையும் அவர்கள் கையில் வைத்துக்கொண்டு. அவர்களுக்கு உட்பட்டு பொறுப்பையும் பளுவையும் நாம் தாங்கிக்கொண்டிருக்க வேண்டுமென விரும்புகின்றனர்.

"மாகாண நீதியில் கொஞ்சம் அதிகாரங்களிருப்பதால், லீக் மந்திரி சபை அமைந்திருக்கும் மாகாணங்களில் அவர்களால் இயன்ற உதவி அனைத்தையும் செய்திருக்கின்றனர்.

அதிகார மாற்றம்

கேள்வி: "அதிகாரத்தை மாற்றுவதற்கு இஷ்டமில்லாததால், காங்கிரஸுடனோ லீகுடனோ சமரசத்துக்குவர சர்க்காருக்கு இஷ்டமில்லை என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

பதில்:—"தேசப் பாதுகாப்பிலும் யுத்தத்தை நடத்துவதிலும், நமது உற்சாகமான ஒத்துழைப்பை தருவதற்கு ஏதுவாக, காங்கிரஸுக்கோ லீகுக்கோ சர்க்காரின் அதிகாரத்தில் உண்மையான பங்கை கொடுக்க விரும்பவில்லை.

பிரிட்டிஷ் மக்களுக்குச் செய்தி

கேள்வி:—'பிரிட்டிஷ் மக்களுக்கு உங்கள் செய்தி என்ன? அவர்கள் என்ன செய்யவேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்கள்?

பதில்—பிரிட்டிஷ் மக்களுக்கு என் செய்தி இதுதான். அவர்கள் நேர்மையாக இருப்பதானால் (பலர் அத்தகையவர்) இந்திய அரசியல் பிரச்னைக்குள்ள ஒரேவழி பாக்கிஸ்தான் கொள்கையை பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமாறு

அவர்கள் நிர்ப்பந்திப்பதே. அதன் மூலம் முஸ்லிம்கள் மாத்திரமல்ல, ஹிந்துக்களும் இதரரும்கூட விடுதலை அடைவர்.

என்முடிவு: "பேட்டியிலிருந்து எனக்குத் தெரிவது என்ன?


"பாக்கிஸ்தான் முஸ்லிம்களின் சுதந்திரக் கோரிக்கை என்பதை நிதரிசனப்படுத்தி யிருக்கிறார். பாக்கிஸ்தானில் வாழும் முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதார் எல்லோருமே சேர்ந்து அரசாங்க அமைப்பை நிர்ணயிப்பர் என்று உறுதிப்படுத்தியிருக்கிறார். இதர முஸ்லிம் தேசங்களுடன் சேர்ந்து பாக்கிஸ்தான் ஹிந்துஸ்தானத்தின்மீது படையெடுக்கும் என்ற பீதிப் பிரசாரத்திற்கு பதிலளித்திருக்கிறார். பாக்கிஸ்தான் ஹிந்துஸ்தான் உறவு சகோதர பாவத்தில் சௌஜன்யமா யிருக்குமென்பதை ஐயத்துக் கிடமின்றி விளக்கியிருக்கிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்யவாதிகள் பாக்கிஸ்தானை ஒரு வெகுமதியாக தருவார்களென்று தான் எதிர்பார்க்கவில்லை யென்றும் உறுதிப்படுத்தி யிருக்கிறார்.

"காங்கிரஸும் லீகும் ஒன்றுகூடி நமது ஒற்றுமை பலத்தின் நிர்ப்பந்தத்தால், பிரிட்டிஷ் சர்க்காரிடமிருந்து அதிகாரத்தை பிடுங்காவிட்டால், நம் ஒருவருக்கும் சுயேச்சை இல்லாத ஒரு பிரிட்டிஷ் அரசியல் திட்டம் நம்மீது திணிக்கப் படுமென்பதையும் வற்புறுத்தியிருக்கிறார்.

"தற்காலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினிடமிருந்து விடுவித்துக்கொள்வதும், எதிர்காலத்தில் ஹிந்து ஆதிக்கம் ஏற்படாதிருக்க உத்திரவாதம் செய்துகொள்வதுமே முஸ்லிம் கோரிக்கை என்பதை உணர்த்தியிருக்கிறார். அதனால் தான் முஸ்லிம்கள், தங்கள் தாயகங்களின் வாழ்க்கை மீதும் ஆதிக்கம் வகிக்கக்கூடிய அகில இந்திய சர்க்காரை எதிர்க்கின்றனர். 75 சதவிகித ஹிந்துக்களிருக்கும் இந்தியாவின்

மத்திய அரசாங்கம் ஹிந்து ஆதிக்கமாக விருக்குமென்பதே அவர்கள் பயம்.

"சுருங்கச் சொல்லப்போனால், ஜனப் ஜின்னாவின் சுலோகங்கள் இவைதான்: அவர்கள் தாயகங்களில் சுதந்திரமாய் வாழ்வதற்கு முஸ்லிம்கள் பிறப்புரிமையாகிய பாக்கிஸ்தானை ஒப்புக்கொள்ளுங்கள், இந்த அடிப்படையில், காங்கிரஸ் லீக் கூட்டு முன்னணி நிறுவி, ஹிந்து, முஸ்லிம் தேசிய இனங்களுக்கு சுதந்திரம் கைப்பற்றுவோம்."



ஜின்னு சொன்னது

பீபிள்ஸ்வார் மலர் III இதழ் 16-ல், அக்டோபர் மாதம் 16-ம் தேதி பிரசுரிக்கப்பட்ட தலையங்கத்தைக் கீழே தருகிறோம் :—

லண்டன் "டெய்லி ஓர்க்கர்" பத்திரிகை நிருபருக்கு ஜனாப் ஜின்னு அளித்தபேட்டியை இந்தப் பக்கத்தில் அச்சிட்டிருக்கிறோம். இந்த பேட்டியின் முக்யம் என்னவெனில் முஸ்லிம் அல்லாதவர்களின் மனத்தைச் சங்கடப்படுத்திக் கொண்டிருக்கும் ஜீவாதாரமான கேள்விகள் ஜனாப் ஜின்னுவிற்குப் போடப்பட்டது. அந்தக் கேள்விகளுக்கு ஜனாப் ஜின்னு 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்ற முறையில் நேரான பதில் கொடுத்திருக்கிறார். பாக்கிஸ்தானைப்பற்றி முஸ்லிம் அல்லாதவர்களிடையே இருந்துவரும் தப்பபிப்பிராயங்களை அகற்றக்கூடிய தன்மையில் பதில் அமைந்திருக்கிறது. அவரவர் தாயகத்தின் விடுதலைக்குப் போராடி வரும் மக்களிடையே உள்ள ஒரே பாந்தம் ஜனநாயகம். அந்த ஜனநாயக அடிப்படையில் ஜனாப் ஜின்னு பாக்கிஸ்தானை சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கியிருக்கிறார். எவ்வளவுக்கெவ்வளவு ஜனாப் ஜின்னுவும் முஸ்லிம் லீகும் பாக்கிஸ்தான் கோரிக்கையை எப்படி ஜனநாயகக் கோரிக்கை என்பதை தெளிவுபடுத்துகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு முஸ்லிம் அல்லாதவர்கள் தாராளமாக அக்கோரிக்கையின் நியாயத்தை உணர்வார்கள் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை.

பாக்கிஸ்தான் "சுதந்திர கோரிக்கை" என்று ஜனாப் ஜின்னு சொல்கிறார். ஏனெனில் தங்கள் தாயகங்களில் "உண்

மையான மக்களின் ஆதரவுபெற்ற ஜனநாயக சர்க்கார்'' அமைக்கவேண்டுமென்று முஸ்லிம்கள் விரும்புகின்றனர். பாக்கிஸ்தான் மதத்தின்பேரில் அமைக்கப்படும் ஒரு அரசாங்கம், அவ்வழியில் சென்றால் மத்திய நூற்றாண்டுகளின் பிற்போக்குத்தனத்திற்கு இழுத்துச் செல்லப்படுவோமென்று ஹிந்துமகா சபைக்காரர் விடாமல் வேறுமென்றே பிரசாரம் செய்வதை ஒன்றுமறியாதவர்கள் பலர் உண்மையிலேயே அதை நம்பிவிடுவதால் அவர்களது பயத்தை, கொள்கையை சரியாக பிரகடனப்படுத்துவதால் எவ்வளவு தூரத்திற்கு ஒழிப்பது சாத்யமோ அவ்வளவு தூரத்திற்கு ஜனாப் ஜின்னா இப்பிரகடனத்தின் மூலம் சாதித்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல; அதற்கு மேலும் அவர் கொள்கையை தெளிவுபடுத்தியிருக்கிறார். பாக்கிஸ்தான் ஜனநாயக முறையில் இருக்குமென்றால், எந்த வழியில் என்பதையும் விளக்கியிருக்கிறார். பாக்கிஸ்தானில் ''வர்ண, வகுப்பு, கொள்கை பேதமின்றி குடிமக்களின் ஏக முடிவையும் ஆதரவையும் கொண்டே அரசாங்க நிர்வாகம்'' நடக்கும், முஸ்லிம் என்றும், முஸ்லிம் அல்லாதவர் என்றும் பாக்கிஸ்தானில் பாகுபாடு செய்து முஸ்லிம்களுக்கு சாதகமாகவும், முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஓர வஞ்சனையாகவும் நிர்வாகம் நடக்கும் என்ற பயத்தை ஜனாப் ஜின்னா நீக்கியிருக்கிறார். முஸ்லிம் அல்லாதவர்களுக்கு சமத்வமான பூர்ண பிரஜா உரிமைகள் உண்டு. பாக்கிஸ்தான் அரசாங்க நிர்மாண விஷயத்திலும், நிர்வகிக்கும் முறையிலும் முஸ்லிம்களுக்கு எவ்வளவு வாக்குரிமையுண்டோ அவ்வளவு இதர்களுக்கும் உண்டு என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார். ஹிந்துஸ்தானுடன் பாக்கிஸ்தான் சகோதர உறவுகொண்டிருக்கும் என்று எவ்வித நிபந்தனையில்லாமல் கூறியது நாட்டின் பாதுகாப்பு விஷயத்தில் உள்ள உண்மையான பயத்தை அகற்றும். அந்நியர்

விஷயத்தில் லீகின் கொள்கை "இந்தியாவைத் தொடாதே"; 'எல்லா அந்நிய ஆக்ரமிப்பையும் எதிர்ப்போம்' என்பதே என்றுசொல்லியிருக்கிறார்.

பிரிட்டிஷார் பாக்கிஸ்தானைத் தூக்கிக் கொடுத்துவிடுவார்கள் என்று அவர் மனப்பால் குடிக்கவில்லை. சொல்லப்போனால் காங்கிரஸின் நோக்கத்திற்கும் அவருடைய நோக்கத்திற்கும் எந்தவிதமான வித்யாசமுமில்லை. இரண்டும் ஒன்றே. பிரிட்டிஷார் தயாரிக்கும் அரசியல் அமைப்பின் கீழ் ஒருவருக்கும் சுதந்திரமிருக்காது. அனைவரும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ்த்தானிருப்பார்கள் என்பதை வெகு தெளிவாக உணருகிறார். அதனால்தான் அவர் காங்கிரஸ் லீக் ஐக்ய முன்னணி வேண்டுமென்கிறார். அத்தகை ஐக்ய முன்னணிக்கு அவர் கோரும் அடிப்படை பாக்கிஸ்தான்.

இந்த பேட்டியில் பாக்கிஸ்தானை அவர் எப்படி விளக்கினாரோ, அதேமாதிரி காந்திஜியிடம் அவர் விளக்கவில்லை,—வெளியான கடிதங்களிலிருந்து ஒருவர் முடிவு செய்ய வேண்டுமானால் அந்த முடிவிற்குத்தான் வரவேண்டியிருக்கிறது—என்பது வருந்தத்தக்க விஷயம். "பாக்கிஸ்தானைப் பற்றிபயப்படவேண்டாம். அது ஜனங்களின் ஆட்சி" என்று அவர் சொல்லவில்லை. "பாக்கிஸ்தான் ஏற்பட்ட பிறகு வருங்கால இந்தியாவில் பாதுகாப்பைப்பற்றி பயப்படவேண்டாம், வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் இந்தியாவின் வாயில் காவலர்களாகவிருப்பார்கள்" என்று சொல்லவில்லை. "உங்களது சுதந்திரத்தையும் அவர்கள் காப்பார்கள். முஸ்லிம்கள் ரத்தம் சிந்துவார்கள், நீங்க க்ஷேமம் பெறுவீர்கள்" என்று சொல்லவில்லை. ஆனால் ஜனப் ஜின்னா சொன்னதெல்லாம் என்ன? பாக்கிஸ்தான் என்பது யாரும் மறுக்கமுடியாத எங்களுடைய பிறப்

புரிமை. இதை காந்திஜி அங்கீகரிக்க இணங்காததினால்தான் ஒற்றுமை தடைபட்டது என்பதே.

பாக்கிஸ்தான் கேட்டதின் நியாயத்தை தான் ஒப்புக் கொள்ள முடியவில்லை என்றதும் அதிலிருந்து எழும் நடை முறை நிபந்தனைகளையாவது ஒப்புக்கொள்ள முடியுமா வென்று பரிசீலனை செய்வோம் என்று காந்திஜி முன்வந் தார். ஜனாப் ஜின்னா 6 மாகாணங்களைக் கேட்கிறார்—அதை இந்த பேட்டியிலும் கூறியிருக்கிறார்—என்றதும் பேச்சு வார்த்தை தடைபட்டது; ஆறு மாகாணங்களைச் சேர்த்து பாக்கிஸ்தான் நிர்மாணிப்பதை ஒப்புக்கொண்டால் முஸ்லிம் அல்லாதவர்களின் நியாயமான உரிமைகளை தியாகம் செய் வதாகும் என்று அவருடைய பீதி அதிகரித்தது.

முஸ்லிம்கள் பெருவாரியாகவிருப்பதை அடிப்படை யாகக்கொண்டு ஜனாப் ஜின்னாவின் கோரிக்கை எழுகிறது. அதே சமயத்தில் பிரிட்டிஷார் வரையறுத்த இன்றுள்ள மாகாணங்களின் எல்லைகளை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென்கிறார். அப்படியானால் பிரிட்டிஷார் ஒன்று கூட்டிய ஹிந்து மெஜாரிட்டியுள்ள இந்தியாவிற்கு அவர் எப்படி ஆட்சேபனை செய்யமுடியும்? பாக்கிஸ்தான் முஸ் லிம் தாயகங்களுக்கு சுதந்திரக் கோரிக்கை. அப்படியானால் அதில் முஸ்லிம் அல்லாதவர்களின் தாயகங்களை எப்படி சேர்க்க முடியும்? முஸ்லிம் சுதந்திரம் என்ற பெயரில் சீக்கி யர்களின் தாயகங்களையும் கேட்க முடியாது. முஸ்லிம்கள் சுதந்திரம் என்று சொல்லிக்கொண்டு வங்காள ஹிந்து தாய கங்களும் எங்களுக்கு வேண்டுமென்று கேட்கமுடியாது. கிழக்கு பஞ்சாப்பில்லாமல் மேற்கு பஞ்சாப் வாழமுடியாது, மேற்கு வங்காளமில்லாமல் கிழக்கு வங்காளம் வாழமுடி யாது என்றால் அதை ஒரு தேவையென்று சொல்லலாமே யொழிய அதை ஒரு உரிமையென்று கொண்டாடமுடியாது.

ஆகவே முஸ்லிம் அல்லாதவர்களின் சம்மதத்தை முன் கூட்டியே பெறுவதற்கும், அவர்களுக்கு சமத்வம் அளிக்கவும், பரிபூர்ண நியாயம் வழங்கவும் அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவது அவசியமாகிறது என்பது வெள்ளிடைமலை. நூற்றுக்கு 33 பேர் முஸ்லிம்களையும், 36 பேர் மலைஜாதியினரையுங்கொண்ட அஸ்ஸாம் மாகாணம் முழுவதும் வேணுமென்று கோருவது கேட்பவரைத் தூக்கி வாரிப்போடுகிறது. சரித்திர பூர்வமாகப் பார்த்தாலும் சரி, எண்ணிக்கைப்படி பார்த்தாலும் சரி, அஸ்ஸாம் அங்குள்ள மலை ஜாதியினரின் தாயகம். சில்ஹட்டில் வங்காள முஸ்லிம்கள் வசிக்கிறார்கள்; அது கிழக்கு வங்காளத்துடன் சேரவேண்டியதே.

சில்ஹட் வங்காளத்துடன் சேர்ந்தால் முஸ்லிம் மெஜாரிட்டி இன்னும் குறைந்துபோகிறது. அஸ்ஸாமியருக்கு பொதுவான பாஷை, பொதுவான கலாச்சாரம், பொதுவான பொருளாதாரம் இருக்கிறது; இவ்வழியில் வங்காளத்தினிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள். செல்வம் மிகுந்த சில்ஹட் வங்காளத்திற்குப் போவதைப்பற்றி அஸ்ஸாமிலுள்ள எவருக்கும், அவர் எந்தவிதமான கொள்கையுடையவராயிருந்தாலும் பரவாயில்லை, ஆட்சேபனை கிடையாது. ஏனெனில் அப்பொழுது அஸ்ஸாம் மாகாணத்தை ஒரேமாதிரியான ஒரு அங்கமாக தங்கள் தாயகத்தை வளர்ப்பதற்கு ஏதுவாகும். இதற்கு ஜனப் ஜின்னா அவர்கள்பால் நன்றிசெலுத்த வேண்டும். அவர்கள் தாயகத்தை தன்னுடையது என்று கேட்கக்கூடாது. அஸ்ஸாம் முழுமையும் வேண்டுமென்று அவர் கேட்பதற்குள்ள ஒரே வாதம், அகண்ட ஹிந்துஸ்தான்காரர்கள் ஐக்கிய இந்தியா கோரிக்கைக்கு கொடுக்கும் வாதத்தை போன்றதாகவேயிருக்கும்.

கோரிக்கைகள் எல்லாம் நியாயமான கோட்பாடுகளைக்

கொண்டிருக்கவேண்டும். மற்ற ஜனங்களின் பிரதேசங்களும் வேண்டுமென்று கோரிக்கை போடுவதால், தனது நியாயமான சொந்தக் கோரிக்கையான பாக்கிஸ்தானுக்கு ஆதரவு கிடைக்காமல் போக நேரிடும். "டெய்லி ஓர்க்கர்" நிருபருக்கு ஜனாப் ஜின்னா அளித்த பேட்டியை ஊன்றிக் கவனித்த பிறகு முன்னைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் முஸ்லிம்கள் அல்லாதவர்கள் பாக்கிஸ்தான் முஸ்லிம் தாயகங்களைக் கோரும் நியாயமான கோரிக்கை. அக்கோரிக்கை அவர்கள் சுதந்திரத்தையே கேட்கிறது. ஜனநாயக முறையில் சர்க்கார் நிர்வாகம் என்பதை உணருவார்கள் என்று நம்புகிறோம். எந்த நியதிப்படி பாக்கிஸ்தான் நியாயமோ அதே நியதிப்படி 6 மாகாணங்களை பாக்கிஸ்தானுக்குக்கேட்பது நியாயமானதல்லவென்பதை லீகர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறோம். அம்மாதிரியான கோரிக்கையின் அர்த்தம் முஸ்லிம்களின் சுதந்திரமல்ல, முஸ்லிம் அல்லாதவர்களின் பூமிக்கும் பேராசை! இந்தக் கோரிக்கையை எவ்வளவு சீக்கிரத்தில் கைவிடுகிறோமோ அவ்வளவு சீக்கிரத்தில் பாக்கிஸ்தானை நெருங்குவோம். 6 மாகாணக் கோரிக்கை எந்தக் காலத்திலும் முஸ்லிம் அல்லாதவரின் சம்மதத்தைப் பெறாது. அதற்கு மாறாக சீக்கியர்கள், அஸ்ஸாமியர்கள், வங்காள ஹிந்துக்கள் இவர்களிடையே அதற்கு பலமான எதிர்ப்பை கிளப்பிவிடும். நியாயமானதொரு கோரிக்கை அநியாயமான எல்லை என்ற பாறையில் மோதுண்டு உடையும்.

தலைவர்கள் தவறக்கூடாது!

[தலைவர்கள் சந்திப்பதற்கு முன்னரே, 1944 ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி பீப்பிள்ஸ்வார் மலர் 3 இதழ் 8-ல் வெளியான பி.ஸி. ஜோஷியின் கட்டுரை]

★

சமீபத்தில் நடக்க இருக்கும் காந்தி-ஜின்னா சந்திப்பு, இந்தியாவின் தேசீய சரித்திரத்திலேயே ஒரு மகத்தான சம்பவம். இந்த யுத்தம் ஆரம்பித்தது முதற்கொண்டே, காங்கிரஸும், லீகும் தனித்தனியாக, தத்தம் கோரிக்கைகளை, பிரிட்டிஷ் சர்க்காரிடம் சமர்ப்பித்து வந்துள்ளன. இரு ஸ்தாபனங்களுக்கும், பிரிட்டிஷ் சர்க்கார் "உனக்கும் பெப்பே! அவனுக்கும் பெப்பே!" என்று கூறி கையை விரித்து வந்திருக்கிறது. பிரிட்டிஷ் சர்க்காரின் இந்த இறுமாப்புக்குச் சமாதிகட்டும் முயற்சியிலே, ஒரு ஐக்கிய முன்னணியை நிறுவும் லட்சியத்துடன், இவ்விரு ஸ்தாபனங்களின் மாபெரும் தலைவர்களும் சந்திக்கப் போகின்றனர். இதோர் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம்.

நம்மிடையிலுள்ள பிளவைப் பயன்படுத்தி, தேசமக்களுக்கு அதிகாரத்தை இதுகாறும் மறுத்து வந்திருக்கின்றனர் பிரிட்டிஷார். இந்தப் பிளவு சீர்படுத்தப்படும் என்ற சூசகங்கள் தோன்றியுள்ளன. நம்முடைய ஒன்றுபட்ட வலிமையைக் கொண்டு, ஸ்தம்பிப்பைத் தகர்க்க முடியும் என்ற நம்பிக்கையின் அடையாளங்கள் தோன்றியுள்ளன, அவ்வளவுதான். ஆயினும், இந்த அடையாளங்களைக் கண்ட மக்கள், நம்பிக்கையால் உந்தப்பட்டு, காந்தி-ஜின்னா சந்திப்பின் விளைவை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். நம் நாட்டின் இரு மாபெரும்ஸ்தாபனங்களின் தலைவர்கள் கூடிப் பேசப்போகின்றார்கள் என்பதைக் கேட்ட மாத்திரத்தில் ஆனந்தமடைகின்றனர். அனைவரும், தலைவர்களின் இம் முயற்சி வெற்றிபெறவேண்டுமென்று ஆசி கூறுகின்றனர்.

ஆனால், வெறும் நம்பிக்கை மாத்திரம் போதாது; ஆசி கூறுவதினால் மட்டும் எதுவும் வந்துவிடாது. காங்கிரஸ்-லீக் ஒற்றுமை மூலம்தான் தேச விமோசனத்திற்கு வழியுண்டாகும் என்பதை நாம் நன்கு உணர்கிறோம். அதே காரணத்தினால், இவ்வொற்றுமையை நடைமுறையில் ஸ்தாபிப்பதற்கு இடையே என்னென்ன கஷ்டங்களிருக்கின்றன! என்னென்ன முட்டுக்கட்டைகளை அகற்றித் தாண்டிச் செல்ல வேண்டும் என்பதையும் நாம் நன்குணர்கிறோம். "மகாத்மாஜியும், காயிதே ஆஜமும் இப்பொழுது கூடிப் பேசப் போகின்றனர்; எப்படியாகிலும், அவர்கள் காரியத்தை சாதித்து விடுவார்கள்" என்ற குழந்தைத்தனமான நம்பிக்கை நமக்கு இல்லை. இவ்வாறு வெறும் நம்பிக்கையில் மூழ்கி இருப்பவர்களுக்கு, பிறகு ஏமாற்றம் ஏற்படலாம்.

காங்கிரஸும், லீகும் பல வருஷங்களாகத் தனித்து நின்றிருக்கின்றன. இதற்குக் காரணம், ஏதோ காந்திஜிக்கும், ஜின்னாஸாஹேபுக்கும் பரஸ்பரம் சொந்த ஹோதா

வில், ஒருவருக்கொருவர் விரோத மனோபாவமோ, தப்பபிப் பிராயமோ, ஏற்பட்டிருப்பதனாலல்ல. ஆனால், நம் நாட்டின் பொதுவான தேசிய இயக்கத்தில் தோன்றியுள்ள வேறு பட்ட இரு மனோபாவங்களின் உருவாக, இரண்டு வெவ்வே றான அரசியல் போக்குகளின் உருவாக, அவர்கள் விளங்கு கின்றனர். அதனால்தான் இந்த நிலைமை.

இந்த மனோபாவங்கள் சமீபத்தில் நடக்கவிருக்கும் சம் பாஷணைகளில் பிரதிபிம்பிக்கத்தான் செய்யும். இந்தப் போக்குகளை நன்குணர்ந்தால், காந்திஜியும், காயிதே ஆஜமும், தத்தம் அபிப்பிராயத்தை கீழ்க்கண்டவாறு கூற லாம் என்று ஊகிக்க முடியும்.

மகாத்மா காந்தி : இந்தியா ஒரே தேசம் என்பதில் விவாதத்திற்கு இடமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அது ஒரு பிரத்தியட்ச உண்மை. ஆயினும், முஸ்லிம் மக்களை அவர்களுடைய விருப்பத்திற்குமாறாக, பலவந்த மாக, பிணைத்துவைப்பதற்கு நான் சம்மதிக்க மாட்டேன். ஆகவே, அவர்களுடைய விருப்பம் என்ன என்பதை, சர்வ-ஜன வோட்டுமூலம். அவர்கள் பகிரங்கப்படுத்தட்டும். பாக்கி ஸ்தான் வேண்டுமென்றால் தாராளமாக எடுத்துக்கொள்ள லாம்.

ஜனாப் ஜின்னா : பாக்கிஸ்தான் என்பது, முஸ்லிம்க ளுடைய பிறப்புரிமை; இது என்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கை. தங்களுடைய தாய்நாட்டுப் பிரதேசங்களில், முஸ்லிம்கள் சுதந்திரர்களாய் வாழ்வதையே முஸ்லிம் மக் கள் விரும்புகின்றனர். இது பிரத்தியட்சமான உண்மை. இதில் விவாவதத்திற்கு இடமே கிடையாது. ஐக்கிய இந்தியா என்பது, ஹிந்துக்களின் ஆதிக்கம் கொண்டதாய்தான் இருக்க முடியும். அதில் முஸ்லிம்கள் ஒடுக்கப்பட்டவர்க ளாய்தான் இருக்கமுடியும்.

பேச்சுவார்த்தைகள் இந்த நேரத்திலேயே ஆரம்பித்தால், ஆரம்பத்திலேயே, ஸ்தம்பிப்பு ஏற்பட்டுவிடும் என்பது தெளிவு. ஸ்தம்பிப்பு மாத்திரம் அல்ல. நிலைமை இன்னும் மோசமாகக்கூடப் போய்விடலாம்.

தேசத்தில் பிரிவினை ஏற்படுத்துவதைச் சில முஸ்லிம் ஸ்தாபனங்களும், தலைவர்களும் எதிர்ப்பதைச் சுட்டிக் காட்டி, காந்திஜி சர்வ-ஜனவாக்கெடுப்பதை வற்புறுத்தலாம். அப்பொழுது, ஜனாப் ஜின்னா, "சர்வஜன வாக்கெடுப்பதற்கு இசைவது, ஹிந்து பணமூட்டைகளுக்கு, லஞ்சப் பேயாட்டம் ஆட சந்தர்ப்பம் அளிப்பதாகும்! முஸ்லிம் மக்களிடையே பிளவை உண்டுபண்ணி, அவர்களை சீர்குலைக்க, இப்பணமூட்டைகளுக்குச் சந்தர்ப்பமளிப்பதாகும்; முஸ்லிம்களின் நியாயமான உரிமை பறிபோவதற்குச் சந்தர்ப்பமளிப்பதாகும்" என்று ஆக்ரோஷத்துடன் பதில் கூறலாம்.

பாக்கிஸ்தான் என்பது முஸ்லிம்களின் கோரிக்கை. ஹிந்துக்களின் எதிர்ப்புத்தான் தெரிந்தே இருக்கிறது. ஆகவே, முஸ்லிம்களிடம் மாத்திரம் வோட் எடுப்பதற்கு அவர் ஒருக்கால் சம்மதிக்கலாம்.

காந்திஜியோ இதை மைனாரிட்டியாக உள்ள ஹிந்துக்களின் உரிமையை நசுக்குவதாகக் கருதலாம். முஸ்லிம்களைப்போலவே, அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையும் இந்த நடவடிக்கையின் மூலம் நிர்ணயிக்கப்படப் போகின்றது. இப்படிப்பட்ட ஜீவாதாரப் பிரச்னையில், தங்களுடைய அபிப்பிராயத்தைக் கூறும் உரிமைகூட ஹிந்துக்களுக்குக் கிடையாதா என்று காந்திஜி நினைக்கலாம்.

முஸ்லிம் மெஜாரிட்டியை மைனாரிட்டியாக்கும் சூழ்ச்சி என்று ஜனாப் ஜின்னா கருதலாம்; காந்திஜியோ ஒற்றுமைச்

காக, மைனாரிட்டியாரின் உரிமைகளை விட்டுக்கொடுக்க நிர்ப்பந்தப்படுத்தப்படுவதாக நினைக்கலாம்.

இந்தப் போக்கில் சம்பாஷணை போகுமானால், காந்தி-ஜின்னா சந்திப்பு ஒருமணி நேரத்திற்குள் முடிவடைந்து விடலாம். இத்தலைவர்களின் பின்னே நிற்கும் கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையெல்லாம், நொடிப்பொழுதில் திமுதிமுவென்று சாய்ந்து சரிந்துபோகும்! இருசாராருக்கும் இதன் பயனாய் கேடுதான் விளையும்.

எனவே, இவ்விரு தலைவர்களும், தங்கள் தங்கள் அபிப்பிராயத்தையே கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பார்களேயானால், தங்கள் தங்கள் யோசனைகளையே விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பார்களேயானால், சமரஸம் ஏற்படும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லை.

காந்திஜியும், ஜனாப் ஜின்னாவும் பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விடுத்துள்ளனர். தங்கள் தங்கள் அபிப்பிராயங்களையே பிடிவாதமாகக் கொண்டிருப்பார்கள் என்பதற்கான சூசகங்கள் அந்த அறிக்கைகளில் காணப்படுகின்றன. ஆயினும் ஏதாவது ஒரு சமரஸத்திற்கு வந்தே தீருவது என்று உறுதிகொண்டிருப்பதாகவும் இருவரும் கூறுகின்றனர்.

எவ்விதம் சமரஸம்?

அப்படியானால், இருவருக்கும் ஒத்த முறையில் சமரஸம் செய்துகொள்வதற்கான அடிப்படை எங்கிருக்கிறது? இரண்டு ஸ்தாபனங்களுக்கும் பொதுவான நோக்கங்கள் சில இருக்கின்றன. அதேபோல் தனியான நோக்கங்களும் இருக்கின்றன. தாங்கள் எந்தெந்த ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளாக இருக்கின்றனரோ, அந்தந்த ஸ்தாபனங்களுக்கும்

திருப்தி ஏற்படுகிற வகையில், இந்த இரண்டு நோக்கங்களையும் அனுபவசாத்தியமாக்குவதற்கு வேண்டிய திட்டங்களை, இம்மாபெரும் தலைவர்களிருவரும் வகுப்பார்கள் என்ற நம்பிக்கையிலேயே அந்த அடிப்படை இருக்கிறது.

காங்கிரஸிற்கும், முஸ்லிம் லீகிற்கும் பொதுவாக உள்ள நோக்கங்கள் என்ன? அரசியல் முட்டுக்கட்டையை உடைத்தெறிவது; இந்தியாவின் சுதந்திரத்தை அடைவது.

தனியான நோக்கங்கள் என்ன? சுதந்திர இந்தியாவில் சுதந்திர பாக்கிஸ்தானை அடைவது லீகின் தனியான நோக்கம். ஐக்கிய இந்தியாவில் எல்லோரும் சுதந்திரர்களாய் வாழ்வது காங்கிரஸின் நோக்கம்.

இந்த லட்சியங்களை சமரஸப் பேச்சுவார்த்தைகளின் மூலமாக சாதிக்க முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள் என்பதுதான் இத்தலைவர்களின் சந்திப்பிற்கு அர்த்தம்.

ஆனால் அவர்கள் இருவருக்குமிடையேயுள்ள பெரிய வித்தியாசங்களைக் காணாமல் இருப்பது கண்மூடித்தனம். இருவருடைய கண்ணோட்டமும் வெவ்வேறானவை "சுதந்திர இந்தியா" என்பதற்கு வெவ்வேறான அர்த்தத்தை மனதில் கொண்டவர்கள். முஸ்லிம் மக்களுக்கு பிரிந்துபோகும் உரிமையைக் கொண்ட இந்தியாதான் சுதந்திர இந்தியா என்பது லீகின் மனோபாவம். யாரும் பிரிந்துபோகாமல் ஒன்று சேர்ந்து வாழும் மிகப்பெரிய ஐக்கிய இந்தியாதான் சுதந்திர இந்தியா என்பது காங்கிரஸின் மனோபாவம்.

முஸ்லிம் லீகர் நினைப்பது

முஸ்லிம் லீகரிடம் போய், "நீ இந்திய சுதந்திரத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை" என்று கூறிவிட்டால் போதும். அவருக்கு ஏகப்பட்ட கோபம் வந்துவிடும். இதைக்காட்டி

லும் அவருக்கு வெறுப்பூட்டக்கூடியது வேறெதுவும் இருக்காது.

ஒரு காங்கிரஸ்காரரிடம் போய், "நீ ஹிந்து ராஜ்யத்திற்காகவே போராடுகிருய்" என்று கூறிவிட்டால் போதும். அவருக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வருவதைப் பார்க்கலாம்.

இருந்தாலும், ஒருவர் இன்னெருவரைப்பற்றி இப்படித் தான் நினைக்கிருர்!

ஆனல் உண்மை என்ன? மூஸ்லிம் லீகரும் சுதந்திரத்தில் ஆர்வமுள்ளவர் தான்; இந்தியா விடுதலையடையவேண்டுமென்று அவர் மனப்பூர்வமாக கோருகிருர். ஏனெனில், பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்ருல் தான், தாங்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்துள்ள குடியிருப்புப் பிரதேசங்களில் தாங்களும் சுதந்திரர்களாய் வாழ்வதற்கு வழி ஏற்படும் என்பதை அவர் நன்கு உணர்கிருர். ஆனல் மூஸ்லிம் மக்கள் ஹிந்துக்களைக் காட்டிலும், கல்வி, பொருளாதாரத் துறைகளில் சிறிது பின்னே நிற்கின்றனர். அவர்கள் வசிக்கும் பிரதேசங்களை எடுத்துக்கொண்டால், சிறுபான்மையோராயிருக்கும் ஹிந்துக்களிடம் வியாபாரம், லேவாதேவி, தொழிற்சாலைகள், முதலியவைகள் பெரும்பான்மையாக இருக்கின்றன. சுருங்கக் கூறின், பொருளாதார ஆதிக்கம் பூராவும் ஹிந்துக்களிடம் இருப்பதாக மூஸ்லிம் லீகர் பார்க்கிருர். எனவே, மூஸ்லிம் மக்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் சுரண்டப்படுவதோடு மாத்திரமல்ல, ஹிந்துக்களாலும் சுரண்டப்படுவதாக அவர் எண்ணுகிருர். இந்த ஆதிக்கத்தை லீகர் ஒழிக்கவேண்டுமென்று விரும்புகிருர். அதல்லாமல், பொருளாதார ஆதிக்கத்தோடு, அரசியல் துறையிலும் ஹிந்துக்களின் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டால், என்ன ஆகிவிடும் என்று அவர் பயப்படுகிருர். அத

னால், தன்னுடைய பாக்கிஸ்தான் உரிமையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகிறார். அது ஏற்றுக்கொள்ளப்பட்டால்தான், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் சேரமுடியுமெனக் கூறுகிறார்.

இந்தக் கோரிக்கை முழுக்க முழுக்க நியாயமானது என்றே அவருக்குப் படுகிறது. அதனால், பிரிட்டிஷ் ஆதிக்கம் இருந்த இடத்தில் ஹிந்துக்களின் ஆதிக்கத்தைப் புகுத்த விரும்பாத வரையில், சுதந்திரம் விரும்பக்கூடிய ஒரு ஹிந்து, தன்னுடைய நியாயமான கோரிக்கையை எப்படி மறுக்க முடியும் என்பதே அவருக்குப் புரியவில்லை.

காங்கிரஸ்காரர் நினைப்பது

முதன் முதலில் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய ஸ்தாபனம் காங்கிரஸ். சுதந்திரத்திற்காக முதலில் பிரதிக்ஞை எடுத்ததும் அதுவே. சுதந்திரத்திற்காக முதலில் போர்க்கோலம் பூண்டதும் அதுவே. ஆதலின் இயற்கையிலேயே அதன் கவனம் பூராவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் மேலேயே சென்றது. நம் புராதன புண்ணியபூமியின் அடிமைத்தளைகளைத் தகர்க்க, இங்கு வசிக்கும் எல்லோரும் சுயநலம் பாராட்டாமல் ஒன்றுதிரளவேண்டும் என்று காங்கிரஸ் வற்புறுத்திற்று. இவ்விதம் நம் தேசிய உணர்ச்சியைத் தட்டி எழுப்பிவிட்டது. "இந்த நாட்டில் வாழப் பிறந்தவர்கள் நாம். இந்த நாட்டிற்கு நாமே அதிகாரிகள்" என்ற மனோதிடத்தை நமக்கு அளித்தது. அதாவது, தேசபக்தியை நமக்கு ஊட்டிற்று.

நம் பெற்றோர்கள் சுதந்திரம் கேட்டார்கள். ஏகாதிபத்யம் கொடுக்க மறுத்தது. அதற்கு என்ன காரணத்தைக் காட்டிற்று? "உங்கள் தேசிய வாழ்வு மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கின்றது!" என்றது. இந்தியாவிற்கு

சுதந்திரம் கொடுத்தால் அது பண்டைக்கால காட்டுமிராண்டிகளின் வாழ்க்கைக்குத் திரும்பிவிடும் என்று தன்னைத் தானே திருப்திசெய்துகொண்டது போலும்!

இப்பொழுது நாம் சுதந்திரம் கேட்கிறோம். அதே பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் மறுக்கிறது. அதற்குக் காட்டும் காரணம்? "நீங்கள் உங்களுடைய தேசீய வாழ்வில் பிளவுபட்டுக் கிடக்கிறீர்கள். உங்களுக்குள்ளே ஏகப்பட்ட வித்தியாசங்கள் இருக்கின்றன" என்று கூறுகிறது. இவ்விதம் இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுத்தால் உள்நாட்டுப் போர் ஆரம்பித்துவிடும் என்று தன்னைத்தானே திருப்தி செய்து கொள்ளுகிறது போலும்;

ஏகாதிபத்யம் நம்மீது சாட்டும் இந்த அவதூறை, பரம்பரையாக காங்கிரஸ்காரர்கள் மறுத்து வந்திருக்கின்றனர். நம் உள்நாட்டு சமூக வாழ்க்கையைப்பற்றி நிந்தனையாக சொல்லப்படுவதையெல்லாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யவாதிகள் கிளப்பிவிடுகிற அவதூறு என்றே மறுத்து வந்திருக்கின்றனர். உள்நாட்டிலுள்ள வித்தியாசங்களைச் சுட்டிக் காட்டுபவர்களையெல்லாம், ஏகாதிபத்யத்திற்கு ஆதரவளிப்பவர்களாகக் கருதிவந்திருக்கின்றனர். இந்த நிலைமையில் இப்பொழுது, தங்களுடைய தேசத்திலேயே வசிக்கும் மக்களில் ஒரு பகுதியினர்—பலமிருந்த ஒரு சிறுபான்மையினர்—அவ்விதம் செய்வதைப் பார்க்க, அவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது, ஆத்திரம் பொங்குகிறது. ஜாதி மத வித்தியாசம் பாராட்டாமல் எல்லா ஜனங்களையும் ஒன்றுபடுத்துவதற்காகவும், தேசம் பூராவிற்கும் சுதந்திரமடையப் போராடுவதற்காகவும், தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்துகொண்டிருக்கும் காங்கிரஸ்காரர்களுக்கு, இந்த விஷயம் புரியவே இல்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஏஜெண்டல்லாதவரையில், கௌரவமான ஒரு இந்தி

யன் எப்படி தங்களை சந்தேகிக்க முடியும்; சுதந்திரத்திற்காகப் போராடும் தாங்கள், தங்களுடைய சொந்த மக்களில் ஒரு பகுதியினரை ஒதுக்கி ஆள முயற்சிக்கிறார்கள் என்று எப்படி எண்ண முடியும் என்று அவர்கள் திகைத்துப்போகின்றனர். அதனால், இப்பொழுது ஏகாதிபத்ய ஆட்சியிலிருந்து விடுதலைக்காக ஒன்றுபடுவோமேயானால், எதிர்காலத்தில் பரஸ்பர சம்மதத்துடன் சுதந்திர இந்தியாவை நிர்மாணிப்பதில் ஒன்றுபட்டு வாழ்வது நிச்சயம் என்று அவர்கள் மனப்பூர்வமாக எண்ணுகின்றனர். பெரிய ஏகாதிபத்ய பூதத்தை ஒழித்துக் கட்டிவிட்டால், சின்ன வகுப்பு வித்தியாச குட்டிச்சாத்தான்கள் பிரச்சினையைத் தீர்ப்பது பிரமாதமல்ல.

லீகின் நிலைமையும், காங்கிரஸ் நிலைமையும் இவ்வாறிருக்கையில், இவைகளிலிருந்து ஒரு பொதுவான மனோபாவத்தைச் சிருஷ்டிக்க முடியுமா?

சரித்திரத்தைப் பாருங்கள்

இதற்கெல்லாம் என்ன காரணம்? சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். இந்த வித்தியாசங்களுக்கெல்லாம் மூலகாரணம், நம் தேசிய சரித்திர வளர்ச்சியில் இருக்கிறது. அதைக் கண்டு பிடித்துவிட்டால், பிரச்சினையைத் தீர்ப்பது வெகு சுலபம். முஸ்லிம் லீக் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து அதனுடைய போக்கை கவனித்தால், காங்கிரஸ் எந்த அரசியல் கொள்கையைக் கடைப்பிடித்ததோ, அதே கொள்கையை கொஞ்சம் காலதாமதம் செய்து லீகும் பின்பற்றியிருப்பதைக் காணலாம். அதேபோன்று என்றையிலிருந்து முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளை மட்டும் வரையறுத்து வகுக்க முஸ்லிம் லீக் முற்பட்டதோ, அன்றைய

தினத்திலிருந்து அவற்றை கொஞ்ச நாட்கள் வாதம் செய்த பிறகு காங்கிரஸ் ஒப்புக்கொண்டு வந்திருக்கிறது.

ஸ்தல ஸ்தாபனங்களில் இந்தியர்களுக்கு அதிக ஸ்தானங்கள் வேண்டும், சர்க்கார் உத்தியோகங்கள் வேண்டும் என்று மனுப்போடும் ஸ்தாபனங்களாக இரண்டும் ஆரம்பமாயின. 1906-ம் வருடம் கல்கத்தாவில் நடந்த மகாநாட்டில், சுயஆட்சி வேண்டும் என்ற தீர்மானத்தைக் காங்கிரஸ் நிறைவேற்றிற்று. 1912-ல் லக்ஷ்மண புரியில் நடந்த மகாநாட்டில் முஸ்லிம் லீக் அதே தீர்மானத்தை நிறைவேற்றிற்று. 1930-ல் லாகூர் மகாநாட்டில், பூரண சுதந்திரம் வேண்டுமென்று காங்கிரஸ் தீர்மானித்தது. 1937-ல் லக்ஷ்மணபுரியில் நடந்த மகாநாட்டில் முஸ்லிம் லீக் அதே கோரிக்கையை நிறைவேற்றிற்று. இவை நிதர்சனமான உண்மைகள். சரித்திரத்தில் நிற்கின்றன. தேசபக்தி என்பது தங்களுடைய ஏகபோக உரிமை என்றும், இன்றைக்கு எந்த நிலைமையில் தாங்கள் பார்க்கிறார்களோ அதேபோல் ஆரம்பத்திலிருந்தே காங்கிரஸ் இருந்து வந்திருக்கிறது என்றும் எண்ணிக்கொண்டு, முஸ்லிம் லீகை ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவான ஸ்தாபனம் என்று சந்தேகப்படும் மனம்மாற விரும்பாத காங்கிரஸ்காரர்களுக்கு, இந்த உண்மைகள் எதிரே நிற்பது தெரியவேண்டும். வளர்ச்சியில் குன்றி பிற்போக்காக இருந்த முஸ்லிம் சகோதரர்களை விழிப்படையச் செய்ய, முஸ்லிம் லீக் கொஞ்சம் அதிக காலத்தை எடுத்துக்கொண்டது. அவ்வளவுதான் வித்தியாசம்.

ஒரு குறிப்பிட்ட கட்டத்தை நம் தேசீய இயக்கமும், மக்களின் விழிப்பும் அடைந்தபோது, இனியும் ‘இல்லை’ என்று கூறமுடியாமல், ஏதாவது ஒரு சட்ட திட்டத்திற்கு பிரிட்டிஷார் இணங்க வேண்டியதாயிற்று. அந்த சமயத்தில்

தனித் தொகுதியை முஸ்லிம் லீக் கோரியது. தன்னுடைய முஸ்லிம் சகோதரர்களின் உரிமையை ஊர்ஜிதம் செய்யவும், சுய ஆட்சியை ஐக்கிய முன்னணியை ஸ்தாபிக்கவும், 1916-ம் வருடம் லக்ஷ்மணபுரி ஒப்பந்தத்தின் மூலம் லீகின் கோரிக்கையை காங்கிரஸ் ஒப்புக்கொண்டது.

ஸைமன் கமிஷன் பகிஷ்காரத்தின்போது, காங்கிரஸுடன் லீக் சேர்ந்திருந்தது. 1928-ல் மோதிலால் நேரு தயாரித்த சட்டதிட்டங்களின் மூலம், பலம் பொருந்திய மத்திய சர்க்கார் இருக்க வேண்டுமென்று காங்கிரஸ் விரும்பியது. அந்த மத்திய சர்க்காரில் ஹிந்துக்களின் ஆதிக்கம் தான் இருக்கும் என்று லீக் பயந்தது. அதற்காக, சட்டதிட்டங்களில் விடுபட்டுப்போன அதிகாரங்கள், மாகாணங்களின் கையிலேயே இருக்கவேண்டும் என்று கோரிற்று.

யுத்தம் ஆரம்பித்தவுடன்

1939-ல் யுத்தம் ஆரம்பித்தது; அதிகாரத்தைப் பெறும் பிரச்சினை முன்னணிக்கு வந்தது. இந்திய சுதந்திரத்தைக் காங்கிரஸ் கோரிற்று; முஸ்லிம் மக்களின் சுதந்திரத்தைக் குறிக்கும் பாக்கிஸ்தானின் அங்கீகாரத்தை லீக் கோரிற்று.

கிரிப்ஸ் வந்து சமரசப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியபோது, "எந்த தேசியப் பிரதேசத்திலுள்ள மக்களையும், அவர்களுடைய விருப்பத்திற்கு எதிராக இந்திய யூனியனில்தான் இருக்கவேண்டும் என்று நிர்பந்திக்கும் விதத்தில் காங்கிரஸ் நினைக்காது" என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி சொன்னது. அதாவது, ஐக்கியப்பட்ட இந்தியாவையே காங்கிரஸ் விரும்பிய போதிலும், முஸ்லிம் மக்கள் அதிலிருந்து பிரிந்து வெளியே இருக்க இஷ்டப்பட்டால், அவ்விதமே இருக்கலாம் என்று காங்கிரஸ் கூறிற்று.

1942 ஆகஸ்ட் 8-ம் தேதி நடந்த சரித்திரப் பிரசித்தி

பெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம், (A.I.C.C.) "இந்திய யூனியனில் சேர்ந்திருக்கும் மாகாணங்களுக்கு அதிகப்படியான சுய ஆட்சி உரிமையும், சட்டதிட்டங்களில் விடுபட்டுப்போன அதிகாரங்களையும் (Residuary Powers)" வழங்கியது. அந்தக் கூட்டம் முடிந்ததும், இதைப்பற்றிப் பேசுவதற்காக ஜனப் ஜின்னவை காந்திஜி சந்திப்பதாக இருந்தது. ஆனல் கைது செய்யப்பட்டார். ஜனப் ஜின்னவுக்கும் இந்தத் திட்டம் திருப்தியளிப்பதாக இல்லை.

முஸ்லிம்கள் பாக்கிஸ்தான் அமைத்துக்கொள்ளுவதற்கான உரிமையை, சிறையிலிருக்கும்போது காந்திஜி ஒப்புக்கொண்டார். இப்பொழுது அந்தத் திட்டம் தேச மக்களின் முன்னே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த திட்டத்தில் எவ்வளவோ குறைகள் இருப்பதாக ஜனப்ஜின்ன கூறுகிறார். ஆயினும் பிரிவினைக் கோரிக்கையின் தத்துவத்தை அது அங்கீகரிப்பதாக அவர் ஒப்புக்கொள்ளுகிறார். இப்பொழுது மீதியிருக்கும் கேள்வி, எப்பொழுது எவ்விதம் அதை அனுபவ சாத்தியமாக்குவது என்பதே என்றும் அவர் ஏற்றுக்கொள்கிறார்.

மேலேகண்ட சுருக்கமான சரித்திர விமர்சனத்திலிருந்து ஒரு விஷயம் தெளிவாகும். சுயஆட்சிக் கோரிக்கையிலிருந்து, படிப்படியாக வளர்ச்சியடைந்து சுதந்திரக் கோரிக்கை கட்டத்தைக் காங்கிரஸ் அடைந்திருக்கிறது. அதன் கூடவே-அதனுடைய ஒரு பகுதியாக-வகுப்புவாரி பிரதிநிதித்வக் கோரிக்கையிலிருந்து, படிப்படியாக வளர்ச்சியடைந்து, பாக்கிஸ்தான் கோரிக்கைக் கட்டத்தை லீக் அடைந்திருக்கிறது. தேசீய இயக்கத்தின் வளர்ச்சியில் ஒரு பகுதியாக இருக்

கிறது லீக் கோரிக்கையின் வளர்ச்சி. இந்த இரண்டு கோரிக்கைகளுக்கும் சரிசமமான முக்கியத்வமுண்டு.

நாளுக்குநாள் நமது மக்களின் தேசிய விழிப்பு அதிகமாக அதிகமாக, நமது தேசியக் கோரிக்கையும் பரிபூரண சுதந்திரத்தை நோக்கி வளர்ந்திருக்கிறது. அதன் கூடவே நம் முஸ்லிம் சகோதரர்களின் விழிப்பும் வளர்ந்து, தங்களுடைய குடியிருப்புப் பிரதேசங்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்ற கோரிக்கையாக வளர்ந்திருக்கிறது.

தம்பிக்கு வயதுவந்துவிட்டது; தன்னுடைய காரியத்தைத் தானே கவனித்துக்கொள்ளக்கூடிய பருவத்தை அடைந்துவிட்டான். காங்கிரஸிற்குப் பின்னால் லீக் இன்னும் நொண்டி நொண்டி வந்து கொண்டிருக்கவில்லை. ஆனால் நிமிர்ந்து நிற்கிறது. "எனக்கு சட்டைவேண்டும்; செலவுக்குப் பணம்வேண்டும்" என்பதுபோன்ற சில பிரத்தியேக சலுகைகளை, அண்ணனிடமிருந்து அது கேட்கவில்லை. சமமான உரிமைகள் வேண்டுமென்று கேட்கிறது. இந்தியா முழுவதற்கும் பிரிட்டிஷாரிடமிருந்து நாம் கேட்கிறோமே, அதே சுதந்திரத்தை முஸ்லிம் தேசிய இனங்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று லீக் கேட்கிறது. இதைக் கண்டு நாம் பயப்படவேண்டியதில்லை. பயப்படவேண்டியவர்கள் பிரிட்டிஷார்; ஏனெனில் சொத்தை—பாகிஸ்தான் பிரதேசத்தை—இழப்பவர்கள் அவர்கள். மகிழ்ச்சியடைய வேண்டியவர்கள் நாம். ஏனெனில், நம் முஸ்லிம் சகோதரர்கள் தங்களுடைய சொந்த பிரதேசத்திற்கு தாங்களே அதிகாரிகளாக வருகின்றனர் என்பதைத் தவிர அது வேறல்ல.

கொஞ்சம் பிற்போக்காக இருந்த மக்களின் ஸ்தாபனமாக இருந்ததினால், காங்கிரஸின் தேசிய அரசியல் கோரிக்

கையை ஏற்றுக்கொள்ள அதற்கு கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டதினால், தேசபக்தி குறைந்த ஸ்தாபனமாக லீகை இதுவரை காங்கிரஸ் நினைத்தது. இப்பொழுது பாடம் தலை கீழாக இருக்கிறது. எல்லா ஜனங்களுடைய—சமூகங்களுடைய—பெயராலும் எதை பிரிட்டிஷாரிடமிருந்து கேட்கிறதோ, அதையே முஸ்லிம்களுக்கு வழங்குவதற்கு தயங்குவதால், காங்கிரஸ் நியாயமாக நடந்துகொள்ளவில்லை என்று இப்பொழுது லீக் சந்தேகப்படுகிறது. இவ்விதம் லீக் நினைப்பது தவறு. ஏனெனில் தம்பிக்கு வயது வந்துவிட்டது என்று அண்ணன் உணர்வதற்குக் கொஞ்சம் காலம் பிடிக்கும் என்பதை லீக் மறந்துவிடுகிறது!

இவ்விதமாக, கடைசி காலத்தில், லீகின் நியாயமான கோரிக்கையை அங்கீகரிப்பதற்கு காங்கிரஸ்தான் தயங்குகிறது. இருவருக்கும் பொதுவான பிதுரார்ஜித சொத்து அன்னியன் கையிலிருக்கிறது. அதைப் பிடுங்க, நீண்ட நாட்களாக, கடுமையான போராட்டத்தை நடத்தி வருகிறோம். இருவரும் சேர்ந்து, கடைசியாக ஓங்கி அவனுடைய மண்டையிலடித்து சொத்தைப் பிடுங்குவதற்கு முன்பு, அந்த சொத்தில், தன்னுடைய பங்கை நிர்ணயித்துவிடவேண்டும் என்கிறான் தம்பி. தன்னுடைய பங்கு நிச்சயம் தனக்குக் கிடைக்கும் என்ற உத்திரவாதத்தைப் பெற அவன் முயற்சித்தால், அவன் அநியாயமாக நடந்துகொள்ளுகிறான் என்று எப்படிக் கூறமுடியும்? அவனைத் திட்டுவது என்றால் சொத்து முழுவதையும் அப்படியே 'அபேஸ்' செய்துவிடவே அண்ணன் எண்ணுகிறான் என்ற குற்றச்சாட்டிற்கு உள்ளாகவேண்டித்தான் இருக்கும்.

"நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கிற, உண்மையான அன்புள்ள சகோதரர்களாக நாம் இருந்தால், நம்முடைய முன்னோர்கள் தேடிவைத்த சொத்தை நாம் கூறுபோடக்

கூடாது; இருவரும் சேர்ந்து அதை பெருக்கவேண்டும்" என்று பிரிவினையைப்பற்றி பெரிய "பாராயண"த்தைப் படித்து, பிரிவினை பாவம் என்றும், கஷ்டமென்றும் புத்திமதி மட்டும் கூற முற்பட்டால், எந்த தம்பியாவது அண்ணனை நம்புவானா? அதற்கு பதிலாக, அண்ணன் மேல் அதிக சந்தேகந்தான் அவனுக்கு ஏற்படும்.

எவ்வளவு தூரம் காங்கிரஸும் லீகும் நெருங்கி வந்துவிட்டன என்பது இன்று வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது. இதுவரையில் எந்த வழியில் நடந்து வந்தனவோ, அதேபாதையில், தங்கள் இருவரின் லக்ஷியத்தையும் அடைவதற்கு, அவை இன்னும் ஒரே ஒரு அடியைத்தான் முன்னுக்கு எடுத்து வைக்கவேண்டும். ஆனால் அந்த ஒரு அடியை எடுத்து வைப்பதுதான், காங்கிரஸிற்கும் லீகிற்கும் மிகவும் கஷ்டமாக இருக்கும். ஏனெனில், இதுவரையில் அவர்கள் எண்ணிய முறையை விட்டுவிட்டு, பரிபூரணமாக வேறுவிதத்தில் எண்ணும்படி அது செய்கிறது.

ஒன்றுபட்ட ஐக்கிய இந்தியா என்ற எண்ணத்தைக் காங்கிரஸ் மனதில் கொண்டிருந்து வந்திருக்கிறது. அந்த எண்ணத்தை எந்தவிதத்திலும் பாதிக்காத முறையில், எவ்வளவு சலுகைகள் வேண்டுமானாலும் கொடுப்பதற்கு காங்கிரஸ் தயாராக இருந்து வந்திருக்கிறது. இன்றோ, இந்தப் பிரிவினைக் கோரிக்கையை ஒப்புக்கொள்ளும்படி அது அழைக்கப்படுகிறது.

இந்த விஷயத்தில் காந்திஜி தவறிவிட்டாரேயானால், காப்பாற்றப்படப்போவது இந்தியாவின் ஒற்றுமையல்ல; இந்திய சுதந்திரத்திற்கான ஐக்கியப் போராட்டமே ஒத்திப்போடப்படும்.

எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக பிடிவாதத்துடன் வற்புறுத்துகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு கோரிக்கை

பலமடைவதாகவும், எவ்வளவுக்கெவ்வளவு வேகமாக சத்தம் போடுகிறேமோ, அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாக காங்கிரஸ் இறங்கி வந்துவிடுமென்றும் நினைத்து, இதுவரை லீக் வளர்ந்து வந்திருக்கிறது. இதுவரை இருந்தாற்போ லில்லை இன்றைய நிலைமை. இன்று லீக் சில சலுகைகளை வேண்டி நிற்கவில்லை. இன்று, முஸ்லிம்களுடைய, இந்தி யாவுடைய சுதந்திரத்திற்கான கடைசிப் போராட்டத்தில் தானும் கலந்துகொள்வதற்கு முன்பு, அது தன்னுடைய கடைசிக் கோரிக்கையை—முஸ்லிம் மக்கள் வாழப் பிறந்த பிரதேசங்களின் பூரண சுதந்திரத்தை—அங்கீகரிக்கவேண்டு மென்கிறது.

இந்த சந்தர்ப்பத்தில், எவ்வளவுக்கெவ்வளவு அதிக மாக உறுதியுடன் தான் வற்புறுத்துகிருரே, அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக தன் கோரிக்கைக்கு காந்திஜி செவி சாய்ப்பார் என்று ஜனப் ஜின்ன நினைப்பாரேயானல்—காந்திஜியின் எண்ணத்திற்கு எதிராக இருக்கிறது பாக்கிஸ் தான் என்பதையும், காந்திஜியை அந்த எண்ணத்திலிருந்து மாற்றவேண்டி யிருக்கிறது என்பதையும் ஜனப் ஜின்ன மறந்துவிடுவாரேயானல்—பாக்கிஸ்தானை அவரால் அடைய முடியாது. பூகோள ரீதியாக இந்தியா ஒரே தேசீய இனம் என்று வேவல் படிக்கும் "புராணத்தை"க் கேட்டுக்கொண் டும், "பாக்கிஸ்தான்" என்று காகிதத்தில் எழுதிப் பார்த் துக்கொண்டுமே இருக்கவேண்டி இருக்கும்.

பொதுவான கொள்கை

காந்திஜியும் ஜனப் ஜின்னவும் சமரஸம் செய்துகொள் வதற்கு, நாம் அனுப்பும் வாழ்த்துச்·செய்திகள் மட்டும் அவர் களுக்கு பிரயோஜனப்படாது. அதனல் எவ்வளவுதூரம் நாம் ஒற்றுமை ஏற்படுவதை விரும்புகிறேம் என்று அவர்

கள் அறிவார்களே தவிர, வேறென்றையும் அவர்களால் அறிந்துகொள்ள முடியாது. சமீபகாலத்தில் அவர்களைப் பார்த்துப் பேசி வந்தவர்களெல்லோரும், இருவரும் சமாஸம் செய்துகொள்வதற்கு ரொம்ப ஆவலுடன் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். ஆதலின் அவர்களுடைய இதயங்களில் நல்லெண்ணம் நிரம்ப இருக்கிறது. ஆனால் அவர்களுடைய கொள்கைகளில் உள்ள வேறுபாடுகள் தான் சமரஸப் பேச்சுவார்த்தைகளை பாதிக்கக்கூடியவையாக இருக்கின்றன.

ஒற்றுமை நிரம்ப கிட்ட வந்துவிட்டது; இனியுள்ள வித்தியாசமெல்லாம் அடிப்படையான கொள்கையில் இல்லை, நடைமுறையில் அனுபவசாத்தியமாக்கும் முறையிலேயே வித்தியாசங்கள் இருக்கின்றன, என்று சில பத்திரிகைகள் கூறுகின்றன. இது சரியல்ல.

கொள்கையில் ஒப்பந்தம் ஏற்பட்டு அதை எந்த முறையில் அடைவது என்பதுபற்றி காந்திஜியும் ஜனாப் ஜின்னாவும் விவாதிக்க வேண்டி இருக்காது. தேசீய விடுதலைக்காக தேசீய ஒற்றுமையைக் கட்டும் பிரச்சினையில் அமிழ்ந்து கிடக்கும் அடிப்படையான கொள்கையைப் பற்றியே அவர்கள் விவாதிக்கவேண்டியிருக்கும். விவாதம் வெற்றி பெறவேண்டுமானால், இதுவரை அவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயங்களையெல்லாம் பரிபூரணமாக விட்டுவிட்டு, இருவருக்கும் பொதுவாக இருக்கும்படியான கொள்கையை—அபிப்பிராயத்தை—அவர்கள் வரையறுக்க வேண்டும், அந்த பொதுவான கொள்கைதான் நம் தேசபக்திப் பரம்பரைக்கு உகந்ததாகவும், நம் தேசபக்தியை இன்னும் முன்னுக்கு அழைத்துச் செல்வதாகவும், காங்கிரஸ்-லீக் ஐக்கிய முன்னணிக்கு அஸ்திவாரமாகவும் இருக்கும்.

''இன்று சுதந்திரத்திற்காக யார் யார் போராடுகிறார்

களோ, அவர்களாலேயே நியாயமான கோரிக்கைகளைப் பெறமுடியும்; காங்கிரஸின் உருவமே தேசீய ஒற்றுமை" என்பது காங்கிரஸ் காரர்களிடையே பரம்பரையாக உள்ள நம்பிக்கை. ஆதலின், ஜனப் ஜின்னாவின் வேலை அதிகமாகிறது. பாக்கிஸ்தானை அமைத்துக்கொள்ள முஸ்லிம் மக்களுக்குள்ள உரிமை நியாயமானது; அதை அங்கீகரிப்பதை அடிப்படையாகக்கொண்டு காங்கிரஸ் லீக் ஒற்றுமை ஏற்படாதவரையில், இந்த நாட்டின் சுதந்திரத்தை அடைவது முடியாது என்பதை, இதற்கு முன்னால் உணர்ந்ததைவிட இன்னும் தெளிவாக உணரும்படி காந்திஜிக்கு ஜனப் ஜின்னா எடுத்துக்கூறுவாரா?

"பாக்கிஸ்தான் கிடைப்பதை முன்னாலேயே ஊர்ஜிதம் செய்துகொள்ளாமல், காங்கிரஸுடன் சேர்ந்து பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடுவது என்றால், ஹிந்துக்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டப் போராடுவது என்றே அர்த்தம்; காங்கிரஸ் ஹிந்துக்களின் ஸ்தாபனம்; ஏனெனில் அது எங்களுடைய நியாயமான பாக்கிஸ்தான் கோரிக்கையை அங்கீகரிக்க மறுக்கிறது" என்பது முஸ்லிம் லீகர்களிடையே பரம்பரையாக உள்ள நம்பிக்கை. ஆதலின் காந்திஜியின் வேலையும் அதிகமாகிறது. எல்லோருடைய சுதந்திரத்திற்காக காங்கிரஸ்-லீக் ஒற்றுமையின்மூலம் போராடாதவரையில், முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கையை அடைவது சாத்தியமல்ல என்பதை, இதற்கு முன்னால் உணர்ந்ததைவிட, இன்னும் தெளிவாக உணரும்படி ஜின்னாவுக்கு காந்திஜி எடுத்துக்கூறுவாரா?

சுதந்திரமும் நியாயமும்

நியாயம் என்ற கோஷத்திற்கெதிரே சுதந்திரம் என்று கோஷிக்கிறது காங்கிரஸ். சுதந்திரம் என்றவுடன் நியாயம் என்று கோஷிக்கிறது லீக்.

சுதந்திர இந்தியா எவ்விதம் இருக்கும் என்பதை தெளிவாக விளக்கி திட்டவட்டமான உருவத்தைக் கொடுத்தால், அதன் முழுத்தன்மையையும் ஜனங்கள் உணர்ந்து கொள்வார்கள்; அதனால் சுதந்திரப் போராட்டத்திற்கு இன்றுள்ளதைவிட அதிக ஆதரவு கிடைக்கும் என்பதை இன்னும் காங்கிரஸ் அறியவில்லை.

எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக சுதந்திரப்போராட்டத்தில் தான் பங்கெடுத்துக்கொள்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதனுடைய நியாயமான கோரிக்கை உறுதி பெறுவதோடு, நடைமுறையில் கைக்குக் கிட்டுவது சுலபமாகிறது என்றும், அவ்வளவுக்கவ்வளவு அதை எதிர்க்கும் சக்திகளுக்கு பலஹீனமேற்படுகிறது என்றும், இன்னும் லீக் உணரவில்லை. காந்திஜியை சந்திக்கப்போவதாக ஜனாப் ஜின்னா அறிவித்தவுடன் நாம் என்ன பார்க்கிறோம்? மற்ற காங்கிரஸ்காரர்களிடமிருந்து ஹிந்து மகா சபையினர் தனிமைப்படுத்தப்பட்டனர். பாகிஸ்தானை எதிர்ப்பதில், அவர்கள்மட்டும் தனியாக நிற்கவேண்டியதாயிற்று.

அவசியம் உந்துகிறது

பரம்பரையாக எந்தவித மனோபாவத்துடன் காங்கிரஸ் வளர்ந்து வந்ததோ, அந்த மனோபாவத்துடன், தன்னுடைய சொந்த வழியிலேயே காங்கிரஸ் சுதந்திரப் போராட்டத்தை நடத்திற்று. ஆனால் அதை ஈடேறும்படி செய்யமுடியவில்லை. அதனால்தான் ஜனாப் ஜின்னாவின் பக்கம் காந்திஜி திரும்பியிருக்கிறார்.

பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தினரிடமிருந்து 'வரப்பிரசாத'மாக பாக்கிஸ்தான் கிடைத்துவிடாது; சுதந்திர இந்தியாவிலேயே அதை அடைய முடியும் என்ற பாடத்தை ஜனாப் ஜின்னா கற்றுக்கொண்டுவிட்டார். கேந்திரமான ஸ்தானத்

தில் உட்கார்ந்துகொண்டு, சும்மா கையைக் கட்டிக்கொண்டிருப்பதால், லீகிற்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை என்பதை அவர் பார்க்கிறார். அதனால்தான் அவர் காந்திஜியின் பக்கம் திரும்புகிறார்.

இருவருடைய கோரிக்கைகளையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மறுத்துவிட்டதற்கு பிறகே, இருவரும் சந்திக்கின்றனர். தங்களுடைய கனவை நினைவாக்க உடனடியாக உள்ள ஒரே வழி காங்கிரஸ்—லீக் ஒற்றுமையைத் தவிர வேறில்லை என்ற முடிவிற்கு இருவரும் வரும்படியாகிவிட்டது. இந்த நிலைமையில் உள்ள மிகப் பெரிய பலஹீனம் என்னவென்றால்,நிகழ்ச்சிப்போக்கின் நிர்ப்பந்தத்தால் அவர்கள் ஒன்று சேர முயற்சிக்கிறார்களே ஒழிய, ஒன்று சேருவதின் நியாயமான தன்மையை உணர்ந்து "அதுதான் சுதந்திரப்பாதை" என்ற மனத்தெளிவுடன் ஒன்று சேரவில்லை.

> **இவ்விதம் கூறுவதனால், சமீபகாலத்தில் அவர்கள் முன்னேறியிருப்பதின் முக்கியத்வத்தைக் குறைத்துக் கூறவில்லை. முதலாவதாக, பரிபூரணமான நல்லெண்ணத்துடன், சமரஸம் ஏற்படுத்த இருவரும் ஒருவரையொருவர் சந்திக்க ஆவலுடன் இருக்கிறார்கள். இரண்டாவதாக லீக் கோரிக்கையின் தத்துவத்தை அங்கீகரித்து, சமரசப் பேச்சு வார்த்தைகளை நடத்த ஒரு அடிப்படையை சிருஷ்டித்திருப்பது. இவ்விரண்டிற்கும் அதிக முக்கியத்வம் உண்டு.**

ஆனால், இதை பெரிய நடவடிக்கையாக நாம் கருதி அதில் லயித்துப்போய், அளவுக்கு மீறி மதிப்பிட்டுவிடக்கூடாது. ஏனெனில் அதனால் ஏதாவது இல்லாதவற்றை

யெல்லாம் எண்ணிக்கொண்டிருந்து, இன்னும் நடக்க வேண்டியிருக்கும் நடங்கல்களை நாம் மறந்துவிட ஏது வாகும்.

காந்திஜியின் கண்ணோட்டம்

ஐக்கிய இந்தியா என்ற தன்னுடைய கண்ணோட்டத்தை இன்னும் காந்திஜி விட்டுவிடவில்லை. லீகினுடைய கோரிக்கை நியாயமானது என்று அறிந்தநுனும் அதை காந்திஜி அங்கீகரிக்கவில்லை. முட்டுக் கட்டையை உடைப்பதற்கான போராட்டத்தில் லீகையும் இழுப்பதற்கு அந்த ஒரு வழிதான் இருக்கிறது என்று அவர் எண்ணுகிறார்; எதிர்காலத்தில் பிரிட்டிஷ் ஆதிக்கம் இருப்பதனால் ஏற்படக்கூடிய தீமையைவிட, பாக்கிஸ்தான் ஏற்படுவதனால் ஏற்படக்கூடிய தீமை குறைவாகவே இருக்கும் என்று அவர் கருதுகிறார். இந்தக் கண்ணோட்டத்தினாலேயே, லீகின் கோரிக்கையை அங்கீகரிக்க அவர் முன் வருகிறார்.

பாக்கிஸ்தான் நியாயமான உரிமையல்ல; தீமையே: இருப்பினும் அடிமை வாழ்வோடு ஒத்திட்டுப் பார்த்தால் குறைந்த தீமையாக இருக்கிறது; அதனால் அதை அங்கீகரிப்போம் என்ற மனோபாவத்துடன்—இது எவ்வளவுக் கெவ்வளவு குறைவாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது—சமரசம் பேசப்போனால், வெற்றிகரமாக சமரசத்தை முடிப்பது கஷ்டமாக இருப்பதை தவிர்க்க முடியாது

முஸ்லிம் மக்களுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான பங்கு அல்ல, ஒரு சலுகையே பாக்கிஸ்தான் என்ற எண்ணத்தை மனதில் கொண்டு விபரங்களை ஆராயப் புகுந்தால் தங்களுடைய குடியிருப்புப் பிரதேசங்களை பெறுவதற்கு முஸ்லிம் மக்களுக்கு எவ்விதம் நாம் உதவ முடியும் என்பது

நம் கண் முன்னால் நிற்காது. அதற்கு பதிலாக, முஸ்லிம்களைத் திருப்திப்படுத்தும்போது, மற்றவர்களுடைய நலன்களை இழந்துவிடாமல் எப்படிப் பாதுகாப்பது என்ற எண்ணமே மூளையை உறுத்திக்கொண்டிருக்கும்!

இந்நாட்டிலுள்ள பிரதான பெரிய ஸ்தாபனம் காங்கிரஸ். அதுதான் சரியான வழியைக் காட்டவேண்டி யிருக்கிறது. அதனால் காந்திஜியின் பொறுப்பு மகத்தானது, தன்னுடைய கோரிக்கையை லீக் தெளிவாக வகுத்து வரையறுத்தால் போதும்; அது மைனாரிட்டியினருடைய ஸ்தாபனம்; மெஜாரிட்டியினரைப் பார்த்து சந்தேகங்கொள்வதில் ஒன்றும் தவறில்லை. பிரதான தேசீய ஸ்தாபனம் காங்கிரஸ்; அதனுடைய தலைவர் காந்திஜி; லீகினுடைய கோரிக்கையை சரியாக அறிந்துகொள்வது அவருடைய கடமை; அந்த கோரிக்கையை, தேசத்தின் பொதுவான கோரிக்கையின் ஒருபகுதியாக ஆக்கி, காங்கிரஸ்–லீக் ஒப்பந்தத்திற்கு அஸ்திவாரம் போடுவது அவருடைய பொறுப்பு. ஜனாப் ஜின்னாவை விட அதிகமாக அவர் சிந்தனை செய்யவேண்டி யிருக்கிறது; லீகிற்கு திருப்தி ஏற்படுகிற வகையிலும், காங்கிரஸ்—லீக் ஐக்கிய முன்னணியை நடத்திச் செல்லக்கூடிய வகையிலும் இருக்கக்கூடிய ஒரு புதிய அரசியல் திட்டத்தை நம் தேசீய இயக்கத்திற்கு அவர் அளிக்கவேண்டி யிருக்கிறது.

ராஜாஜியின் திட்டத்தை அங்கீகரித்ததின் மூலம், அவர் நிரம்ப தூரம் முன்னேறி யிருக்கிறார்; அந்தத் திட்டம் முஸ்லிம் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறது என்று ராஜாஜி கூறுகிறார். எனினும், சமரசப் பேச்சு வார்த்தைகளைத் துடங்க ஒரு அடிப்படையை அது கொடுத்த போதிலும், முஸ்லிம் மக்களின் **சுய நிர்ணய உரிமையை அது அங்கீகரிக்கவில்லை** என்ற அபிப்பிராயத்தை உறுதியுடன் ஜனாப் ஜின்னா தெரிவிக்கிறார்.

மக்களின் பூர்ண ஆட்சி உரிமையை அங்கீகரியுங்கள்

பின் ராஜாஜியின் திட்டம் எதைத்தான் அங்கீகரிக்கிறது? பாகிஸ்தானை ஏற்படுத்திக்கொள்கிற உரிமையை ராஜாஜியின் திட்டம் அங்கீகரிக்கிறது; ஆனால் பாகிஸ்தானை அங்கீகரிக்கவில்லை. அதை அடைய அவர்கள் விரும்பினால், அதற்காக ஓட்டு எடுப்பதற்கான சாதனத்தை அது அளிக்கிறது. ஆனால் ஓட்டுப்போடும் உரிமை, சுயநிர்ணய உரிமை ஆகாது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து பிரிந்துபோக வேண்டுமானால், இந்தியாவில் பொதுஜன வாக்கு எடுங்கள் என்று பிரிட்டிஷார் கூறினால் காங்கிரஸ் என்ன சொல்லும்? "அதைக் குப்பையிலே போடுங்கள்; இந்திய சுதந்திரத்தை எங்களுடைய பிறப்புரிமையாக அங்கீகரிக்கவேண்டும்" என்று நாம் கூறுவோம். இந்தியாவிற்கு சுதந்திரம்வேண்டுமா, வேண்டாமா என்பதை தீர்மானிக்க பொதுஜன வாக்கு எடுக்க நாம் தயாராக இல்லாதபோது, தங்களுடைய குடியிருப்புப் பிரதேசங்களுக்குச் சுதந்திரம் வேண்டுமா, வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க எப்படி முஸ்லிம்களை பொதுஜன வாக்கு எடுக்கும்படி நாம் கூறலாம்? தாங்கள் அவமதிக்கப்படுவதாக அவர்கள் நினைப்பது இயற்கையே! "சுயராஜ்யம்" எப்படி எல்லோருக்கும் மறுக்கமுடியாத உரிமையோ, அதேவிதம் "பாகிஸ்தான்" முஸ்லிம்களுடைய பறிக்கமுடியாத உரிமை.

பூரண சுதந்திரத்தைக் கொண்ட சர்க்காரை ஏற்படுத்திக்கொள்ளலாமா, வேண்டாமா என்று தீர்மானிக்க ஜனங்களுக்குக் கொடுக்கப்படும் ஓட்டுப்போடும் உரிமையல்ல சுய நிர்ணய உரிமை. ஜனநாயக முறைப்படி ஜனங்கள் தங்களுடைய சொந்த சர்க்காரை அமைத்துக்கொள்கிறார்கள்.

அந்த சர்க்காரை அங்கீகரிப்பதே, சுய நிர்ணய உரிமையை வழங்குவது.

சகல அதிகாரங்களையும் ஒரு மத்திய நிர்வாகத்தின் கீழ்க்கொண்ட அகில இந்திய அரசாங்கம், சுதந்திர இந்தியாவில் இருக்கும் என்று பரம்பரையாக காங்கிரஸ்காரர்கள் நினைத்துவருகின்றனர். அந்த கண்ணோட்டத்தை பரிபூரணமாக அவர்கள் விட்டுவிடவேண்டி யிருக்கிறது. புதிய கண்ணோட்டத்தில் சுதந்திர இந்தியாவை காணவேண்டி யிருக்கிறது. பரிபூரண சுதந்திர ஆட்சியைக்கொண்ட அநேக நாடுகளை சுதந்திர இந்தியாவில் அவர்கள் பார்க்கவேண்டும். அந்த நாடுகள் தங்களுடைய இஷ்டப்படி, ஒப்பந்தங்கள் மூலம் ஒரு யூனியனை சேருவதை அவர்கள் காணவேண்டும். இதை மறுக்கமுடியாது என்று உணரவேண்டியிருக்கிறது. பிரிட்டிஷாருக்கு எதிராக சுய நிர்ணய உரிமை கோஷத்தை காங்கிரஸ் கோஷித்தது. இப்பொழுது, அந்த கோஷத்தின் அர்த்தத்திற்கு **முரண் இல்லாமல்**, சுதந்திர இந்தியாவை எப்படி நிர்மாணிப்பது என்று காங்கிரஸ் சிந்தனை செய்யவேண்டும்.

சுய நிர்ணய உரிமையை **வாயளவில்** ஒப்புக்கொள்ளுவதிலிருந்து, நடைமுறையில் அதை அனுபவசாத்தியமாக்குவதற்கு மனப்பூர்வமாக லீகிற்கு உதவ காங்கிரஸ் முன்வந்தால்தான், காங்கிரஸ் லீக் ஒற்றுமையை நடைமுறையில் கட்டமுடியும். நம்முடைய நியாய உணர்ச்சியை நம்புவதற்கு முஸ்லிம்கள் தயாராக இல்லை; தங்களுடைய குடியிருப்புப் பிரதேசத்தில் சகல அதிகாரங்களும் தங்கள் கையிலேயே இருப்பதற்கு அவர்கள் உத்திரவாதம் கேட்கிறார்கள். பாக்கிஸ்தான் என்பதற்கு இதுதான் அர்த்தம்: ஹிந்து ஆதிக்கத்தைக் கண்டு பயம்; சுதந்திரமாக இருப்பதற்குள்ள உரிமையை ஊர்ஜிதம் செய்தல்.

அர்த்தத்திற்கு முரணாக இல்லாமல், சுய நிர்ணய உரிமையை நடைமுறையில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது என்றால், ஜனநாயக சர்க்காரை அமைப்பதற்காக அரசியல் நிர்ணய சபையைக் கூட்டி பொதுஜனப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, சட்டதிட்டங்களை வரையறுப்பதன்மூலம், ஜனங்களுக்குள்ள பரிபூரண சுதந்திர ஆட்சி உரிமையைப் பிரயோகிப்பது என்றே அர்த்தம்.

பாக்கிஸ்தானுக்கு அடிப்படை ஜனநாயகம்

எந்த சுதந்திரக் கொள்கைகளின் பெயரால் நாம் பேசுகிறோமோ, எந்த கொள்கையின் பெயரால் முஸ்லிம்களுக்காக லீக் பேசுகிறதோ, அதே கொள்கையின் பெயரால் லீகின் உரிமையை, பாக்கிஸ்தானை நாம் மறுக்க முடியாது. பாக்கிஸ்தானை அடைய லீகிற்கு நாம் உதவும்போது, பாக்கிஸ்தான் சர்க்கார் ஜனநாயக சர்க்காராக இருக்கவேண்டும் என்றும், ஜனநாயக உரிமைகள் ஒழுங்காக அமுலில் இருக்கவேண்டுமென்றும் உத்திரவாதம் பெறவேண்டியது அத்யாவசியம். ஜனநாயக முறையை லீக் ஊர்ஜிதப்படுத்தும்படி நிச்சயம் செய்யவேண்டும்; ஏனெனில் நம் முஸ்லிம் சகோதரர்களுக்கு சுதந்திர சர்க்கார் ஏற்படுத்திக்கொள்ள நாம் உதவி செய்யும்போது எதிர்காலத்தில் சிநேகபாவத்தோடுகூடிய நல்ல அடுத்த நாட்டு நண்பர்களாக அவர்கள் இருப்பார்கள் என்ற உத்திரவாதத்தை நாம் பெறவேண்டும்.

இந்திய சுதந்திரக் கோரிக்கையில் எப்படி பாக்கிஸ்தான் அடங்கியிருக்கிறதோ, அதே போல் பாக்கிஸ்தான் கோரிக்கையில் ஜனநாயகம் அடங்கியிருக்கிறது. நடை

முறையில் காங்கிரஸ்-லீக் ஒற்றுமையைக் கட்டுவதென்றால், பொதுவான கொள்கையில் அடங்கியிருக்கும் இவற்றிற்கு உருவம் கொடுத்து, காங்கிரஸ் லீக் தலைவர்கள் பகிரங்கப் படுத்தவேண்டும். எப்படி?

(1) முஸ்லிம்கள் தொன்றுதொட்டு, பெரும் பான்மையினராக வசித்துவரும், தொடர்ந்தாற் போலுள்ள பிரதேசங்களில், அவர்கள் தங்களுடைய பரிபூரண சுதந்திர ஆட்சியைக் கொண்ட சர்க்காரை அமைத்துக்கொள்ள பரிபூரண உரிமையுண்டு என்று பிரகடனப்படுத்துக.

அதாவது, முஸ்லிம் லீகின் சட்டதிட்டங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் "லீகின் நோக்கத்தை" நியாயமானது என்று அங்கீகரிக்கவும்.

(2) அரசியல் நிர்ணய சபையின் மூலம் அத்தகைய சுதந்திர முஸ்லிம் அரசாங்கம் ஏற்படுத்தப்படவேண்டும். எல்லை வகுக்கப்பட்ட, முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் ஒவ்வொரு பிரதேசத்திற்கும், தனியான அரசியல் நிர்ணய சபையை, அந்த பிரதேச மக்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம். முஸ்லிம்களுக்குமட்டும் இல்லாமல், அங்கு வசிக்கும் எல்லா வயதுவந்த மக்களுக்கும் ஓட்டு உரிமை உண்டு.

(3) அத்தகைய அரசியல் நிர்ணய சபை, பெரும்பான்மையான ஓட்டுகளின் மூலம், தனக்கும் மற்ற இந்திய யூனியனுக்கும் இடையில் எத்தகைய உறவு இருக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும்: பரிபூரண சுதந்திர சர்க்காராக தனியாகவே இருந்துகொண்டு, ஒப்பந்தங்களின் மூலம், இந்திய யூனியனுடன் சிநேகபாவத்துட

னும் சகோதரபாவத்துடனும் கூடிய நல்லுறவை ஏற்படுத்திக்கொள்வதா அல்லது தன்னுடைய பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பூரண சுய ஆட்சியை அனுபவித்துக்கொண்டு, மற்ற குடியரசுகளுக்கும் தனக்கும் பொதுவாகவுள்ள காரியங்களுக்காகவும், நோக்கங்களுக்காகவும் இந்திய யூனியனுடனும் சேருவதா என்பதைத் தீர்மானிக்கும்.

இவ்விதம், சுயநிர்ணய உரிமையை அதனுடைய அர்த்தத்திற்கு முரண்பாடில்லாமல் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதிலேயே, பாக்கிஸ்தானை இந்திய சுதந்திரத்தின் ஒரு பாகமாகவும், ஜனநாயகத்தை பாக்கிஸ்தானின் அஸ்திவாரமாகவும் இருக்கும்படி செய்யலாம். இதுவரையில் ஜனநாயகம் என்றால் ஹிந்து மெஜாரிட்டியினரின் ஆதிக்கம் என்று லீக் கருதிவந்தது. ஆனால் அவர்களுடைய சுதந்திரத்தையும், பிரிந்துபோகும் உரிமையையும் ஒருதரம் நிபந்தனையின்றி நாம் அங்கீகரித்துவிட்டோமேயானால்—ஜனநாயகத்தை அடிப்படையாகக்கொண்டு தங்களுடைய சொந்த எதிர்கால வாழ்வை தாங்களே நிர்வகிக்கும்படி அவர்கள் அழைக்கப்படுவார்களேயானால்—சுதந்திர இந்தியாவில் ஒற்றுமையோடு வாழும் சகோதரர்களாகவோ, அல்லது சகோதரத்வத்தோடு வாழும் பக்கத்து தேச நண்பர்களாகவோ நாம் வாழ்வோம்.

கொள்கை ரீதியாகப்பார்த்தால், மேலே கண்டது நியாயமான வழியைக் காட்டுவதாக இருக்கிறது; நிதர்சன உண்மைகளை அடிப்படையாகக்கொண்டு பார்த்தால், நடைமுறையில் அனுபவசாத்தியமான திட்டமாக இருக்கிறது.

முஸ்லிம் மக்களின் குடியிருப்புப் பிரதேசங்கள் எல்லாம் அநேகமாக குறிப்பிட்ட வட்டாரத்தில் தொடர்ச்சியாக

அமைந்திருக்கின்றன. முஸ்லிம்கள் மெஜாரிட்டியினராகவும் இருக்கிறார்கள். உதாரணமாக கவனித்தால், முஸ்லிம் மக்களின் ஜனத்தொகை கீழ்க்கண்ட சதவிகிதப்படி இருக்கிறது: சிந்து மாகாணத்தில் நூற்றுக்கு 71 பேர் முஸ்லிம்கள்; பலுச்சிஸ்தானத்தில் நூற்றுக்கு 87½ பேர் முஸ்லிம்கள்; வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் நூற்றுக்கு 92 பேர் முஸ்லிம்கள். இந்தப் பிரதேசங்களில் பொதுஜன வாக்கு எடுக்கவேண்டிய பிரச்சினையே இல்லை. அவையெல்லாம் முஸ்லிம்களுடைய குடியிருப்புப் பிரதேசங்கள்; அவர்களுக்கே சொந்தம். அங்குள்ள முஸ்லிம் அல்லாதவர்கள், ஓட்டுரிமையையும், மற்ற மைனாரிட்டிப் பாதுகாப்புகளையும்தான் கேட்கலாம். அதையெல்லாம் கொடுப்பதாக லீக் உறுதி கூறியிருக்கிறது.

பஞ்சாப் பிரச்னை: எவ்விதம் தீர்ப்பது?

பஞ்சாப் மாகாணம் பூராவையும் ஜனாப் ஜின்னா கேட்கிறார் என்பதாக வதந்திகள் உலாவுகின்றன. அதுமட்டும் உண்மையாக இருக்குமானால், அது பாக்கிஸ்தானின் மேலுள்ள காதல் அல்ல; மற்ற ஜனங்களுடைய பூமியை அபகரிக்கநினைக்கும் பேராசை என்றே கூறப்படும். இன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "ஒரே மத்திய அரசாங்கம் சுதந்திர இந்தியாவில் இருக்கக் கூடாது; திருத்தியமைக்கப்படவேண்டும்" என்று ஜின்னா நியாயமாக விரும்பும்போது, அதே ஏகாதிபத்தியத்தால், அதனுடைய மூளைக்கு எட்டியபடி வகுக்கப்பட்ட மாகாண எல்லைக்கோடுகளை அப்படியே வைத்திருக்கவேண்டும் என்று கூற எவ்விதம் அவர் முன்வருவார்?

முஸ்லிம்கள் தங்களுடைய குடியிருப்புப் பிரதேசங்களில் சுதந்திரமாக இருக்கலாம் என்று பாக்கிஸ்தானை அங்கீகரித்துவிட்டால், அதற்கான

எல்லையை வகுப்பது ஒன்றும் பிரமாதமான பிரச்சினை அல்ல. சில புள்ளி விபரங்களையே அது பொறுத்திருக்கிறது.

எந்தெந்தப் பிரதேசங்களில் தாங்கள் பெரும்பான்மையினராக இருக்கிறார்களோ, அந்தப் பிரதேசங்களைத்தான் முஸ்லிம்கள் கோரலாம். அதற்குமேல் ஒரு அங்குலங்கூட அதிகமாக, மற்றவர்களுடைய நிலத்திலிருந்து எடுத்துக் கொள்ள அவர்களுக்கு உரிமையில்லை. எந்தெந்த பகுதிகள் பாக்கிஸ்தானுடன் சேருகிறது, எதெது சேரவில்லை என்பதை. இந்தப் புத்தகத்தில் வேறொரு இடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் பூகோளப்படத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

மேற்கு ஜில்லாக்களில் நூற்றுக்கு 60 பேரிலிருந்து 90 பேர்வரை முஸ்லிம்கள்—பெரும்பான்மையினராக—வசிக்கிறார்கள். அந்த பிரதேசங்களைப்பற்றி சந்தேகமே இல்லை. முழுக்க முழுக்க முஸ்லிம்களின் குடியிருப்புப் பிரதேசம். காங்ரா ஜில்லாவில் முஸ்லிம்கள் நூற்றுக்கு 5 பேர்தான்; ஹிந்துக்கள் நூற்றுக்கு 93 பேர் வசிக்கிறார்கள். அம்பாலா டிவிஷனில் உள்ள ஜில்லாக்களில் நூற்றுக்கு 28 பேர் முஸ்லிம்கள்; ஹிந்துக்கள் நூற்றுக்கு 66 பேர். இந்தப் பிரதேசங்களைப்பற்றி தகராறு எழுவதற்கு நியாயமில்லை, மாகாணத்தில் மற்றப் பகுதிகளில் இருப்பதுபோல் பஞ்சாபி பாஷையைப் பேசாமல், இந்த ஜில்லாக்களில் வசிப்பவர்கள் அநேகமாக ஹிந்துஸ்தானியை தாய்பாஷையாகக் கொண்டு தினசரி வாழ்க்கையில் பேசிவருபவர்கள். ஆதலின், பாக்கிஸ்தானோடு இதை சேர்க்கமுடியாது என்பது வெளிப்படை.

பஞ்சாப் மாகாண ஜனத்தொகையை மொத்தமாக இன்றுள்ளபடி பார்த்தால், நூற்றுக்கு ஹிந்துக்கள் 28 பேர்

வீதமும், முஸ்லிம்கள் 57 பேர் வீதமும், சீக்கியர்கள் 13 பேர் வீதமும் இருக்கிறார்கள். அப்படியே பார்க்கிறபோது முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் பெரும்பாலாக ஹிந்துக்களைக்கொண்ட, 44 லக்ஷம் மக்கள் வசிக்கின்ற, தொடர்ந்தாற்போலுள்ள ஒரு பிரதேசம் இதில் அடங்கியிருக்கிறது. அதாவது அம்பாலா டிவிஷன். இந்தப் பிரதேசம் ஹிந்துக்களால் நிரம்பப்பெற்று, ஹிந்துஸ்தானியை பாஷையாகக் கொண்டிருப்பதால், டில்லி மாகாணத்துடன் சேரவேண்டும்.

> ***அம்பாலா டிவிஷனையும், காங்ரா ஜில்லாவையும் நீக்கிவிட்டு, பஞ்சாப் மாகாணத்தின் ஜனத்தொகையை கவனித்தால், நூற்றுக்கு ஹிந்துக்கள் 16 பேர் வீதமும், முஸ்லிம்கள் நூற்றுக்கு 67 பேர் வீதமும், சீக்கியர்கள் நூற்றுக்கு 15 பேர் வீதமும் இருக்கிறார்கள். இப்பொழுது, முஸ்லிம்களுடைய சரியான குடியிருப்புப் பிரதேசமாக அந்தப் பிரதேசம் அமைகிறது.***

ஆனால் இத்துடன் பஞ்சாப் பிரச்சினை தீர்ந்துவிடவில்லை. (படத்தைப் பாருங்கள்) சட்லஜ் நதிக்கு கிழக்கிலுள்ள ஜலந்தர் டிவிஷனில் அடங்கிய ஜில்லாக்களும், அந்நதிக்கு மேற்கிலுள்ள அமிர்தசரஸ், குருதாஸ்பூர் ஆகிய இரண்டு ஜில்லாக்களும், பொதுவாக சீக்கியர்களுடைய ஜில்லாக்களாகக் கருதப்படுகின்றன. பாக்கிஸ்தானின் எல்லைக்கோட்டை வகுக்கும்போது அங்கு தகராறு ஏற்படும். அங்குள்ள ஜனத்தொகை, வகுப்புவாரியாக அடுத்தப் பக்கம் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கிறது.

யாருடன் சேர்வதென்பதற்காக பொதுஜன வாக்கு

இந்த புள்ளி விவரங்களிலிருந்து, முதலாவதாக கவனிக்கவேண்டியதென்னவென்றால், ஹிந்து ஜில்லாக்களா

டிய காங்ரா, அம்பாலா ஆகியவற்றிற்குப் பக்கத்தில் இருக்கிற ஹோஷியார்பூர் ஜில்லாவைத் தவிர, மற்ற

ஜில்லாக்கள்	நூற்றுக்கு		
	முஸ்லிம்கள்	சிக்கியர்கள்	ஹிந்துக்கள்
ஹோஷியார்பூர்	37	17	40
ஜலந்தர்	45	26	18
லூதியான	37	41	20
பிரோஸ்பூர்	45	34	20
அமிர்தசரஸ்	47	36	15
குருதாஸ்பூர்	50	19	24

எல்லா இடங்களிலும் ஹிந்துக்கள் குறுகிய மைனரிட்டியினராக இருக்கிறார்கள்.

இரண்டாவதாக, எந்த இடத்திலும் சீக்கியர்கள் மெஜாரிட்டியினர் அல்ல; ஆனால் பெரிய மைனாரிட்டியினர்.

மூன்றாவதாக, முஸ்லிம்கள்கூட இந்த ஜில்லாக்களில் மெஜாரிட்டியினர் அல்ல. குருதாஸ்பூர் ஜில்லாவில் மட்டும் நூற்றுக்கு 50·2 பேர் இருக்கிறார்கள்.

நான்காவதாக, இந்த ஜில்லாக்களில் எந்த வகுப்பினரும் மிகவும் பெரிய மெஜாரிட்டியினராக இல்லை. ஆனால் முஸ்லிம்கள் மிகவும் பெரிய மைனாரிட்டியினராக இருக்கிறார்கள். அவர்களுக்கு அடுத்தபடி சீக்கியர்கள் மைனாரிட்டியினர். இதனால்தான் இந்த ஜில்லாக்களில் ' தகராறு ' ஏற்படுகிறது.

ஆதலின், ஹிந்துஸ்தானுடன் சேருவதா பாக்கிஸ்தானுடன் சேருவதா என்பதைப்பற்றி தீர்மானிக்க, பொதுஜனவாக்கு இந்த ஜில்லாக்களில் அவசியமாகிறது.

இந்தப் பிரதேசங்களில் வாழையடிவாழையாக சீக்கியர்கள் வசித்து வருகிறார்கள்; இங்குதான் எண்ணிக்கையிலும் அவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்; எனினும் அவர்கள் மெஜாரிட்டி அல்ல. அதிகமாக வசிக்கக்கூடியவர்கள் முஸ்லிம்கள். 20 லக்ஷம் பேர்களுக்கு மேல் சீக்கியர்கள் இருக்கிறார்கள்; முஸ்லிம்கள் 30 லக்ஷம் பேர்கள் வசிக்கிறார்கள். இரண்டுமாக சேர்ந்து மொத்தம் 50 லக்ஷம் பேர். இதிலிருந்து வெளிப்படையாக தெரிவதென்னவென்றால், தகராறுக்குள்ளாகும் இந்த ஜில்லாக்கள் சீக்கியர், முஸ்லிம்கள் ஆகிய இரண்டு வகுப்பாருக்கும் பொதுவான குடியிருப்புப் பிரதேசங்களாக இருக்கின்றன.

பொருளாதாரத் துறையிலும், கலாச்சாரத்துறையிலும், இவர்கள் இருவரும் பஞ்சாபின் ஒரு பகுதியாக ஐக்கியமாகி

யிருக்கிறார்கள். ஒரே பாஷையைப் பேசுகின்றனர்; ஒரே விதமான கலாச்சாரத்தை—பஞ்சாபிகளின் கலாச்சாரத்தைக்—கொண்டிருக்கின்றனர். பொருளாதாரத் துறையில் ஒருவரோடொருவர் பிணைந்திருக்கின்றனர்.

இவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க ஒரே ஒரு வழி தான் சாத்தியமாக இருக்கிறது. முஸ்லிம் மெஜாரிட்டி சர்க்கார் தங்களுடைய நலன்களுக்கு எதிராக உபயோகப் படுத்தப்படாமல், மைனாரிட்டி கலாச்சார உரிமைகளுக்கும், நிர்வாகத்தில் நியாயமான பங்கிற்கும் உத்திரவாதமளிக்கக் கூடியவாறு "முஸ்லிம்-சீக்கியர் ஒப்பந்தம்" ஒன்று செய்து கொண்டு, அதன் அடிப்படையில் பாக்கிஸ்தானோடு சேருவதுதான் இந்த ஜில்லாக்களுக்கு உசிதமானது.

தங்களுடைய கோரிக்கைகளை வரையறுத்துக் கொடுக்கும்படி சீக்கியர்களை, திரும்பத் திரும்ப ஜனாப் ஜின்னா கேட்டிருக்கிறார். சீக்கியர்களின் சுயநிர்ணய உரிமையை லீக் அங்கீகரித்து, சீக்கியர்கள் முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொண்டு, இரண்டு வகுப்பாருடைய விருப்பத்திற்கும் இசைந்ததாக இருக்கக்கூடிய ஐக்கிய பஞ்சாபை சிருஷ்டிக்க இருவரும் முன்வந்தால், அதன் அடிப்படையில் சமரஸம் ஏற்படுவது சாத்தியம் என்பதில் சந்தேகமில்லை. சீக்கியர்களுடன் ஒரு உடன்பாட்டிற்கு வருவதைத் தவிர, முஸ்லிம் மெஜாரிட்டி பஞ்சாபை பாக்கிஸ்தானுக்குள் சேர்த்துக்கொள்ளுவதற்கு வேறு திருப்திகரமான மார்க்கமில்லை என்பதை நன்றாக ஜனாப் ஜின்னா அறிவார்.

சீக்கியர்கள் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. இதுவரை அவர்கள் காங்கிரஸ்கூடவே இருந்து வந்திருக்கின்றனர். அவர்களுக்கு ஆதரவளிக்க, பஞ்சாபிலும் சரி, பஞ்சாபிற்கு வெளியிலும் சரி, காங்கிரஸ் இருக்கிறது.

கம்யூனிஸ்ட் சீக்கியர்களைத் தவிர, மற்ற சீக்கியத் தலைவர்கள் துரதிருஷ்டவசமாக இந்தப் பிரச்சினையை இவ்விதம் பார்க்க மாட்டேனென்கிறார்கள்.

ஆஜாத் பஞ்சாப் ஸ்லோகத்தின் அர்த்தமென்ன ?

பெருமைமிக்க சரித்திரப் பரம்பரையில் வந்தவர்கள் சீக்கியர்கள்; பஞ்சாபிலுள்ள முக்கியமான தேசீய இனமாகவும் இருக்கிறார்கள். ஆனால் கஷ்டம் என்னவென்றால், அவர்களுடைய குடியிருப்புப் பிரதேசமாகச் சொல்லுவதற்கு தொடர்ந்தாற்போலுள்ள பிரதேசம் ஒன்றுகூட இல்லை. இங்குமங்குமாக ஏதோ சில தாலூகாக்களில்தான் அவர்கள் மெஜாரிட்டியினராக இருக்கிறார்கள். மற்ற எல்லா ஜில்லாக்களிலும் சிதறி மைனாரிட்டியாக இருக்கிறார்கள். ஆதலின், ஒரு சீக்கியர் தனிநாட்டை வரையறுத்து வகுத்துக் கொடுக்க முடியாது.

மற்றவர்களுடைய உரிமைகளுக்கு பங்கம் ஏற்படாமல், தங்களுடைய நியாயமான உரிமைகளை எவ்விதம் பாதுகாத்துக்கொள்வது என்பதைப்பற்றி சிந்தனை செய்யாமல், சில சீக்கிய அரசியல்வாதிகள் "ஆஜாத் பஞ்சாப்" (சுதந்திர பஞ்சாப்) என்று ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கின்றனர்.

அவர்கள் தங்களுக்கு தோன்றியபடி சில எல்லைக் கோடுகளைக் கிழித்து, ஒரு பிரதேசத்தை வரையறுத்திருக்கிறார்கள்; அதை "ஆஜாத் பஞ்சாப்" என்று சண்டப்பிரசண்டமாகப் பேசுகிறார்கள்.

அந்த எல்லைக்கோடுகளுக்குள் எந்தெந்த பிரதேசங்கள் அடங்கியிருக்கின்றன தெரியுமா? அமிர்தசரஸ், குருதாஸ்பூர் ஜில்லாக்களோடு, ஜலந்தர், அம்பாலா டிவிஷன்களில் உள்ள ஜில்லாக்களும் அடங்கியிருக்கின்றன. இன்னொரு

திட்டங்கூட இருக்கிறது; அதில் லாஹூரும் கூடசேர்க்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாபியரல்லாத நமக்கு, இந்த ஜில்லாக்களின் பெயரைப் படிப்பதால் ஒன்றும் அதிகமாக விளங்காது. ஆனால் அந்தத் திட்டம் அனுஷ்டானத்திற்கு வருகிறது என்றால், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மிகப்பெரிய அநீதி இழைக்கப்படுகிறது என்றே அர்த்தம்.

அதன்மூலம், அம்பாலா டிவிஷனில் உள்ள ஹிந்து மெஜாரிட்டியினர், மைனாரிட்டியாக மாற்றப்படுகின்றனர். அதோடு, ஹிந்துஸ்தானி பேசுகிற தங்கள் இனத்தாரோடு சேர்ந்து வாழாமல் தடுக்கப்படுகின்றனர்.

அதன்மூலம், முஸ்லிம்களுடைய பிரதேசங்கள் துண்டிக்கப்படுகின்றன. பொட்டல் பிரதேசம் பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்படுகிறது. பஞ்சாபிலேயே மிகவும் வளமை பொருந்திய, வளர்ச்சி பெற்ற பிரதேசங்கள், பாகிஸ்தானிலிருந்து துண்டிக்கப்படுகின்றன. பொருளாதார துறையில் பார்த்தாலும் சரி, கலாச்சாரத் துறையில் பார்த்தாலும் சரி, அந்தப் பிரதேசங்கள் மேற்கு பஞ்சாபுடன் நெருங்கியதாக இருக்கிறதேயொழிய, கிழக்கு ஹிந்துக்கள் பஞ்சாபுடன் எந்தவிதத்திலும் நெருங்கியில்லை. இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ள ஜில்லாக்களில், அம்பாலா, காங்ரா ஜில்லாக்களைத்தவிர, மற்ற எல்லா ஜில்லாக்களிலும் மிகவும் பெரிய மைனாரிட்டி முஸ்லிம்கள். (யாரும் மெஜாரிட்டியல்ல) முதல் உரிமை முஸ்லிம்களுக்குத்தான் இருக்க முடியும். எனினும் அந்த ஜில்லாக்களில் தகராறு ஏற்படுகிறது; ஜனநாயக முறைப்படி, பொதுஜனவாக்கின் மூலமே அந்தத் தகராறைத் தீர்க்கவேண்டும்.

"ஆஜாத் பஞ்சாபின்" ஜனத்தொகையை வகுப்புவாரியாகப் பாருங்கள்.

லாஹூரை சேர்த்துக் கணக்கிட்டால், நூற்றுக்கு ஹிந்துக்கள் 42 பேர்; முஸ்லிம்கள் 37 பேர்; சீக்கியர்கள் 12½ பேர்.

லாஹூரை சேர்க்காமல் கணக்கிட்டால், நூற்றுக்கு ஹிந்துக்கள் 45 பேர்; முஸ்லிம்கள் 35 பேர்; சீக்கியர்கள் 18½ பேர்.

இந்தத் திட்டத்திலுள்ள சூக்ஷ்மத்தை சுலபமாக அறிந்துகொள்ளலாம். அம்பாலா டிவிஷனில் சீக்கியர்கள் நூற்றுக்கு 5 பேர்; ஜலந்தர் ஜில்லாவில் நூற்றுக்கு 24 பேர். எவ்வளவு சாமர்த்தியமாக அந்தப் பிரதேசம் வகுக்கப்பட்டிருக்கிறது என்று பாருங்கள். சீக்கியர்கள் கேந்திர ஸ்தானத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். அதிகமான மெஜாரிட்டி ஹிந்துக்களுக்குமில்லை; முஸ்லிம்களுக்குமில்லை; நிரம்பவும் குறைந்த மைனாரிட்டியாகிய சீக்கியர்கள் எந்தப் பக்கம் சாய்கிறார்களோ அந்தப் பக்கந்தான் மெஜாரிட்டி! சீக்கியர்கள் மனம் வைத்தால் எந்த தீர்மானத்தையும் நிறைவேற்றவோ, தோற்கடிக்கவோ முடியும்!

> ***பஞ்சாப் மாகாணத்தைப் பிளவுபடுத்தி, சீர்குலைத்து, மிகவும் செழிப்பான பூமியையெல்லாம் ஒன்றாக்கி, இயற்கைக்கு விரோதமான ஒரு மாகாணத்தை சிருஷ்டிப்பதற்கான முயற்சியே இந்தத் திட்டம். மைனாரிட்டியினரான சீக்கியர்களின் ஆதிக்கத்தை மற்றவர்களின்மேல் திணித்து, ஒருவர் பலத்தைக் குறைக்க இன்னொருவருடன் சேர்வதுபோன்ற சூழ்ச்சிகளைக் கையாள்வதற்கான முயற்சி.***

சீக்கியர்களின் உண்மையான நலன்

இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த சந்தர்ப்பவாதிகள்,

முஸ்லிம்களைப் பார்த்து, "இதோ உங்களுடைய பாக்கிஸ்தான்! (பாலைவனஸ்தான்தான் அது!) எடுத்துக்கொள்ளுங்கள்!" என்று கூறுகிறார்கள். ஹிந்துக்களைப் பார்த்து, "இதைப்பற்றி கவலைப்படாதீர்கள். ஆஜாத் பஞ்சாப் ஹிந்துஸ்தானுடனேயே சேர்ந்து ஒரு மாகாணமாக இருக்கும்!" என்று சொல்லுகிறார்கள். பாக்கிஸ்தானுக்கு எதிராக ஹிந்துக்களிடையேயுள்ள அபிப்பிராயங்களை உபயோகப்படுத்தி, ஆத்திரக் கயிறு தங்கள் கையில் இருக்கும்படியாக ஒரு மாகாணத்தை சிருஷ்டிக்க சீக்கியரிடையேயுள்ள சில சந்தர்ப்பவாதிகள் செய்யும் முயற்சியே இது.

இந்தத் திட்டத்தை ஆதரித்து நிற்பவர்களில் சிலருடன் தனியாகப் பேசும்போது இந்த முயற்சியில் உள்ள வேடிக்கை வெளிப்படுகிறது. "ஐக்கிய பஞ்சாப் ஏற்படுவதே முஸ்லிம்களுடைய நலனுக்கும், சீக்கியர்களுடைய நலனுக்கும் உகந்ததாக இருக்கும். கடைசியாக, சீக்கியர்கள் லீகோடவே சேருவார்கள் என்பதில் சந்தேகமில்லை" என்று அவர்கள் கூறுகிறார்கள். இருந்தாலும் அவர்கள் "ஆஜாத் பஞ்சாப்" என்று வாதம் புரிகிறார்கள். இது எதற்காக என்று கேட்டால், "ஜின்னா எந்தத் தந்திரத்தைக் கையாண்டாரோ, அதே தந்திரத்தை அவருக்கு எதிராக உபயோகித்து, நியாயத்தை உணரும்படி செய்யவேண்டும்." என்று கூறுகிறார்கள். அதாவது கொஞ்சங்கூட விட்டுக்கொடுக்காமல் உறுதியோடு இருந்து ஏகப்பட்ட கூச்சல் போட்டதனாலேயே, பாக்கிஸ்தான் அங்கீகாரத்தை ஜனாப் ஜின்னா பெற்றார் என்று அவர்கள் நினைக்கின்றனர். தங்களுடைய கோரிக்கையை ஜனாப் ஜின்னா ஒப்புக்கொள்ளும்படி செய்வதற்கு அவருடைய பாக்கிஸ்தான் கோரிக்கையை ஹிந்துக்களுடன் சேர்ந்து பலமாக எதிர்க்கவேண்டும்; "ஆஜாத் பஞ்சாப்" என்று பயமுறுத்தவேண்டும். அப்பொழுதுதான் ஜனாப்

ஜின்னு இறங்கிவருவார் என்று அவர்கள் முடிவுக்கு வரு கின்றனர்.

ஆஜாத் பஞ்சாபின் தன்மையை அறிய இதற்குமேலும் கூறவேண்டிய அவசியமில்லை.

மிகவும் வருந்தத் தக்க விஷயம். இன்றைய சீக்கிய தலைவர்கள் மகத்தான தேச பக்தப் பரம்பரையைக் கொண் டிருக்கின்றனர். இன்று சீக்கியர் சார்பாகப் பேசுபவர்கள் தங்களுடைய நேர்மைக்கும், எளிமைக்கும் பெயர்பெற்ற வர்கள். சீக்கியர்களின் கோரிக்கையை அடைவதாகச் சொல்லிக்கொண்டு, இத்தகைய 'தகிடுதத்தங்களை' அவர் கள் கையாளலாமா? இச்செய்கை மிகவும் வந்தத்தக்கது.

சீக்கியர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு உத்தரவாதமளிக்கும் காங்கிரஸ்—லீக் ஒப்பந்தத்தின் மூலம், பஞ்சாப் பிரச்னையைத் தீர்க்கக் காட்டப்படும் எந்த வழியை யும், தேசபக்தி மிக்க சீக்கியர்களில் பெரும்பாலோர் பின் பற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், சீக்கி யர்கள் தேச பக்தர்கள்; எப்பொழுதுமே காங்கிரஸை ஆத ரித்து வந்திருக்கின்றனர். சீக்கிய விவசாயிகளிடையே கம்யூனிஸ்ட்களுக்கு மட்டுந்தான் செல்வாக்கு உண்டு. காந்தி—ஜின்னு ஒப்பந்தத்தை நிச்சயம் அவர்கள் ஆதரிப்பார் கள். பிற்போக்காளர்களுக்கு இன்று தாளம் போட்டுவரும் காங்கிரஸ் சீக்கியர்கள் கூட, நாளைக்குத் திரும்பிவிடு வார்கள்.


வங்காளப் பிரச்சினை : கிழக்கு பாக்கிஸ்தான்

இந்தியாவில் எந்த மாகாணத்தையும்விட அதிகமாக கலாச்சாரத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் வங்காளம் ஐக்கியப்பட்டிருக்கிறது. வங்காளிகள் ஒரு தனி தேசிய இனத்தினர்; மற்ற தேசிய இனங்களைவிட அதிக

மாக வளர்ச்சியடைந்தவர்கள். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் தெளிவான வித்தியாசங்கள் இருந்த போதிலும் அவர்கள் உள்ளத்தில் தாங்களிருவரும் ஒரே பகுதி என்ற எண்ணம் இருக்கிறது. ஐக்கிய வங்காளத்தை அமைப்பதுதான் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உகந்த வழி என்பது வெளிப்படை. இது அவர்களுக்கே தெரியும். ஆனால், சமமான வளர்ச்சியின்மையால் தோன்றிய சந்தேகங்களும், அவநம்பிக்கையும் அவர்களுக்கிடையில் நிற்கின்றன.

முஸ்லிம்கள்தான் மெஜாரிட்டியினர். ஆனால் அவர்கள் பொருளாதாரத் துறையிலும், கலாச்சாரத் துறையிலும் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கும் விவசாயிகளாக இருக்கிறார்கள். ஹிந்துக்கள் ஒரு மைனாரிட்டி. ஆனால் வங்காளம் முழுவதிலும் அவர்கள் ஆதிக்கஞ்செலுத்துகிறார்கள். பொருளாதாரத் துறையிலும் சரி, கலாச்சாரத் துறையிலும் சரி அவர்கள் வளர்ச்சியடைந்திருக்கின்றனர். பணம் படைத்த தொழிற்சாலை முதலாளிகளாகவும், நிலம் படைத்த பெரிய மிராசுதார்களாகவும், ஜமீன்தார்களாகவும் இருக்கிறார்கள்.

முஸ்லிம்களின் பிற்போக்குத் தனத்தைக் கண்டு, வங்காள ஹிந்துக்கள் என்ன நினைத்தனர்? தேசிய இயக்கத்திற்கு விரோதமாக பிரிட்டிஷாருடன் முஸ்லிம்கள் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று சந்தேகப்பட்டனர். பொருளாதாரத் துறையில் ஹிந்து நிலச்சுவான்தார்களும், முதலாளிகளும் தங்களைச் சுரண்டுவதை முஸ்லிம் விவசாயிகள் எதிர்த்தனர். இயற்கையிலேயே அவர்களுடைய வெறுப்பு அதிகமாகத்தான் இருக்கும். இந்த வேற்றுமையை—வர்க்கப் போராட்ட மோதல்களை—தனக்கு சாதகமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உபயோகப் படுத்திக்கொண்டது. 1899-ல் நடந்த வங்கப் பிரிவினை காலத்திலிருந்து, இந்த தகராறை







உபயோகப்படுத்தி, வங்க தேசீய இயக்கத்தை ஏகாதிபத்தியம் பிளவுபடுத்தி வந்திருக்கிறது.

இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வங்காளப் படத்தைப் பாருங்கள்.

கிழக்கு வங்காள ஜில்லாக்களில், முஸ்லிம்கள் மிகப் பெரிய மெஜாரிட்டியினராக இருக்கிறார்கள். மற்ற சில ஜில்லாக்களில் சாதாரண மெஜாரிட்டியினராக இருக்கிறார்கள்—(அதாவது மைனாரிட்டிக்கும் மெஜாரிட்டிக்கும் கொஞ்சந்தான் வித்தியாசம்.)

அஸ்ஸாம் மாகாணத்தில் மேற்குப் பகுதியில் **ஸில்ஹெட்** ஜில்லா இருக்கிறது. கிழக்கு வங்காள ஜில்லாக்களோடு சேர்ந்து தொடர்ந்தாற்போல் இருக்கிறது. அங்கு வசிக்கும் மக்கள் அநேகமாக வங்காளிகள், அதுவும் மெஜாரிட்டியினர் முஸ்லிம்கள். ஆதலின் அது நியாயமாக வங்காளத்துடன் சேர்ந்திருக்கவேண்டும்; அஸ்ஸாமுடன் அல்ல.

இந்தத் தொடர்ந்தாற்போலுள்ள பிரதேசந்தான் முஸ்லிம்களுடைய தாயகம்; தொன்று தொட்டு அங்கேயே பிறந்து, வளர்ந்து, தொழில் புரிந்து அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பிரதேசத்தில் தங்களுடைய சுதந்திர சர்க்காரை தனியாக அமைத்துக்கொள்ள முஸ்லிம்களுக்கு உரிமை யுண்டு. அதாவது அங்கு பாக்கிஸ்தான் ஏற்படுத்த முஸ்லிம்களுக்கு பரிபூரண உரிமையுண்டு.

எந்த உரிமையோடு இந்த ஜில்லாக்களைப் பாக்கிஸ்தானுக்கு சொந்தமென்று அவர்கள் கூறுகிறார்களோ, அதே உரிமையோடு ஹிந்துக்கள் மெஜாரிட்டியாகவுள்ள மேற்கு வங்காள ஜில்லாக்களை தங்களுடைய கிழக்கு பாக்கிஸ்தானுக்குக் கிடைக்கவேண்டும் என்று அவர்கள்கூறமுடியாது. இந்த மேற்கத்திய ஜில்லாக்களில் முஸ்லிம் ஜனத்தொகை ரொம்ப குறைவாக இருக்கிறது. **பங்கூரா** ஜில்லாவில்

நூற்றுக்கு 5 பேர் தான் முஸ்லிம்கள். "24 பர்காநு" ஜில்லாவில் நூற்றுக்கு 34 பேர்தான் முஸ்லிம்கள். பாக்கிஸ்தான் எல்லைக்குப் பக்கத்தில் இருக்கிற நதியா ஜில்லாவில் தான் நூற்றுக்கு 49½ பேர் விதம் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள்.

பெரிய துறைமுகத்தைக் கொண்ட கல்கத்தா நகரம் இந்தப் பிரதேசத்திற்குள் வந்துவிடுகிறது. இங்கு நூற்றுக்கு 26 பேர்தான் முஸ்லிம்கள்.

முக்கியமான தொழிற்சாலைகளும், சுரங்கங்களும் இந்தப் பிரதேசத்தில் இருக்கின்றன. சணல் ஆலைகள், இரும்பு உருக்கு ஆலைகள், நிலக்கரி சுரங்கங்கள் ஆகிய எல்லாம், "24 பர்காநு", ஹௌரா, ஹூக்ளி, பர்த்வான் முதலிய ஜில்லாக்களில் பரவி இருக்கின்றன. இன்னும் தெளிவாகப் பார்க்கப் போனால், இந்தியா முழுவதிலும் உள்ள தொழிற்சாலைகளில் நூற்றுக்கு 30 பங்கு இந்தப் பிரதேசத்தில் இருக்கிறது. கிழக்குப் பாக்கிஸ்தான் பிரதேசத்தில் நூற்றுக்கு 2¾ பங்குதான் இருக்கிறது!

இன்றைக்கு கல்கத்தா துறைமுகத்தை தன்னகத்தே கொண்ட வங்காளம்தான் செல்வம் மிகுந்ததாகவும், வங்காளத்தின் ஜீவநாடியாகவும் இருக்கிறது.

மேற்கு ஜில்லாக்களில் உள்ள தொழிற்சாலைகளும் கல்கத்தா துறைமுகம் இல்லாமல் கிழக்கு வங்காளத்தை மட்டும் கவனித்தால், அது "செல்லரித்த, சிதைக்கப்பட்ட உதவாக்கரை பாக்கிஸ்தானாக"வே இருக்கிறது என்று முஸ்லிம்கள் கூறலாம். அதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால் "வங்காளம் பூராவையும் அப்படியே எடுத்துக்கொண்டு பார்த்தால் முஸ்லிம்கள்தான் மெஜாரிட்டி. அதனால் மேற்கு ஜில்லாக்களையும், கல்கத்தாவையும் பாக்கிஸ்தானோடு சேர்த்துக்கொள்வோம்" என்று முஸ்லிம்கள் கூறமுடியாது. ஐக்

கிய வங்காளம், இந்திய யூனியனின் ஒரு பகுதியாக இருப்பதை வங்காள முஸ்லிம்கள் ஆக்ஷேபிக்கின்றனர். ஏனெனில், ஹிந்துக்கள் ஆதிக்கம் அதிகமாக உள்ள மத்திய அரசாங்கம், வங்க ஹிந்து மைனரிட்டியினரை தூபம்போட்டு கிளப்பிவிடுவார்கள்; அதன் மூலம் மெஜாரிட்டி முஸ்லிம்களின் ஆட்சிக்குக் குந்தகம் விளைவிப்பார்கள் என்று பயப்படுகிறார்கள். அதேபோல், வங்காளம் பூராவும் கிழக்குப் பாக்கிஸ்தானோடு போவதாயிருந்தால், மேற்கு ஜில்லாக்களிலுள்ள ஹிந்துக்கள் ஆக்ஷேபிப்பார்கள்.

சங்கடமான பிரச்னே. இதை எப்படி தீர்ப்பது? ஹிந்து முஸ்லிம்கள் ஆகிய இருவருடைய நலன்களுக்கும் உகந்த முறையில், அரசியல் துறையில் ஒன்றுபட்டதாகவும் பொருளாதாரத் துறையில் பலம் மிகுந்ததாகவும் வங்காளம் இருக்கவேண்டும். அதே சமயத்தில் முஸ்லிம்களுக்கு தங்களுடைய பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமை கிடைக்கவேண்டும். இதை எப்படி செய்வது?

ஸில்ஹெட் ஜில்லா உள்பட வங்காளம் பூராவும் சேர்ந்து, தன்னுடைய சொந்த அரசியல் நிர்ணய சபையின் மூலம், சுதந்திர சர்க்காரை அமைத்துக்கொள்வதற்கான உரிமையை அங்கீகரித்து, காங்கிரஸ்—லீக் ஒப்பந்தம் ஏற்படுமேயானால், அதை அடிப்படையாகக்கொண்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம்.

இது எவ்விதம் சாத்தியமாகும்? சுதந்திர வங்காள சர்க்காரில் மனப்பூர்வமாக ஹிந்துக்கள் சேரவேண்டும்; அதற்கு ஹிந்துக்களுடைய ஆதரவை காங்கிரஸ் பெற வேண்டும். இதற்கு அனுசரணையாக ஹிந்து மைனரிட்டியினருடைய நியாயமான உரிமைகளை பாதுகாக்க முஸ்லிம் லீக் உத்தரவாதமளிக்கவேண்டும். இவ்விதம், மற்ற இந்திய யூனியனுடனும், வடமேற்கு பாக்கிஸ்தானுடனும் எத்த

கைய உறவை சுதந்திர வங்க சர்க்கார் ஏற்படுத்திக் கொள்வது என்பதைப்பற்றி இருவரும் சேர்ந்து ஒரு முடிவிற்கு வரவேண்டும்.

இவ்விதம் செய்தால்தான், வங்காளத்தை ஹிந்து முஸ்லிம்களுடைய கூட்டுத்தாயகமாக அமைக்க முடியும். மற்ற இந்தியப் பகுதிகளோடு பரஸ்பர உதவியுடனும், பொருளாதார ஒத்துழைப்புடனும் வாழ்கிற சுதந்திர வங்காள சர்க்கார், ஹிந்து முஸ்லிம் மக்களுடைய கூட்டு விருப்பத்திற்கிணங்க சிருஷ்டிக்கப்பட்டதாக இருக்கும்.

காங்கிரஸ்-லீக் ஒப்பந்தம் இல்லாமல், வங்காளம் பூராவையும்—மாகாணம் பூராவிலும் நூற்றுக்கு 54 பேர் முஸ்லிம்கள் இருப்பதனால் மட்டும்—முஸ்லிம் லீக் கேட்குமேயானால், அதை யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. பாக்கிஸ்தான் கேட்பதோடு மாத்திரமில்லாமல், அதைக் காப்பாற்ற ஹிந்துக்களுடைய பூமியையும் அபகரிக்கிற முயற்சிக்கிறதென்ற குற்றச்சாட்டுக்குத்தான் உள்ளாகவேண்டியிருக்கும். கடந்த காலத்தில் கிழக்கு வங்காள முஸ்லிம்களை சில ஹிந்து முதலாளிகளும் நிலச்சுவான்தார்களும் சுரண்டினார்கள் என்பதற்காக, எதிர்காலத்தில் பாக்கிஸ்தான் சர்க்காரின் கீழ் மேற்கு வங்காள ஹிந்துக்களை முஸ்லிம்கள் சுரண்டுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்க முடியாது!

சுதந்திர வங்காளம், ஐக்கிய வங்காளமாகவே இருக்கவேண்டும் என்று ஹிந்துக்களும் முஸ்லிம்களும் மனப்பூர்வமாக உணர்கிறார்கள்.

ஐக்கிய ஜனநாயக சர்க்காரை எப்படி அமைப்பது?

காந்திஜியும், காயிதே ஆஜம் ஜின்னாவும் ஒரு சமரஸத்திற்கு வந்துவிட்டார்களேயானால், வங்காளம் ஒன்றும்

பெரிய பிரச்சினையைக் கொடுக்காது என்று லீக் தலைவர்கள் நம்புகின்றனர். லீக் கவுன்ஸில் கூட்டத்திற்கு வந்திருந்த போது இதைக் கூறினர். வங்கக் காங்கிரஸை அப்படியே விழுங்கிவிட **சியாமபிரஸாத் முகர்ஜி** முயற்சிப்பதையும், காந்தி-ஜின்னு சமரஸம் ஏற்பட்டுவிட்டால் (வங்க காங்கிரஸ் அசெம்பிளிக் கட்சி தலைவர்) **கிரன்சங்கர் ராயும்,** மற்ற காங்கிரஸ்காரர்களும் சியாமபிரஸாதை விட்டுவிலகி தங்களுடன் சேர்ந்துவிடுவார்கள் என்றும் வங்க லீக் தலைவர்களுக்கு தெரியும். காந்திஜியின் திட்டத்திற்கு வங்காளத்தில் நிறைய ஆதரவு கிடைத்து வருவதையும் அவர்கள் அறிவார்கள்.

"வங்காளத்தில் கையை வைக்காதீர். அப்படியே விட்டுவிடுங்கள். இங்கு பாக்கிஸ்தான் கூடாது" என்று கிரன்சங்கர்ராய் காந்திஜிக்கு வேண்டுகோள் விடுத்தபோதிலும், கடைதியாக ஒரு சமரஸம் ஏற்படத்தான் செய்யும் என்று அவர்கூட ஒப்புக்கொள்கிருர். ஒரே கட்சியின் ஆதரவைப் பெற்ற லீக் மந்திரிசபையின் பலஹீனத்தை உபயோகப்படுத்தி, லீகை கீழே இறக்கிவிடலாம் என்று எண்ணுகிருர். சியாமபிரஸாத் முகர்ஜியுடன் சேர்ந்து பாக்கிஸ்தானை எதிர்த்துக் கூச்சல் போட்டால் லீகை பணிய வைத்துவிடலாம் என்று நினைக்கிருர்.

இதிலுள்ள துக்ககரமான விஷயம் என்னவென்ருல், பிரச்னையைத் தீர்க்க ஒருவர் பலஹீனத்தை இன்னொருவர் நம்பியிருக்கின்றனர். காங்கிரஸ் தலைவர்களும் சரி, லீக் தலைவர்களும் சரி, ஒரு கட்சி பலஹீனமாக இருப்பதின் பலனாக, இருவருக்கும் சம்மதமான ஒரு வழி பிறக்கும் என்று ஒருவரைப் பார்த்தொருவர் எதிர்பார்க்கின்றனர். ஒருவர் பரிபூரணமாக பலஹீனமடைந்து கிடக்கும்போது, இருவருக்கும் பொதுவான ஒரு வழியை மற்றவர் எதிர்பார்க்

இன்ருர் என்ற ஒரு விஷயமே, வங்காளிகள் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள், வங்காளம் முழுவதற்கும் ஒரே சர்க்கார் இருக்கவேண்டும் என்பதற்கு போதிய சான்று.

கீழ்க்கண்ட மூன்று அம்சங்களைக்கொண்ட திட்டத்தை காங்கிரஸும் லீகும் ஒப்புக்கொண்டால் ஐக்கிய வங்காள சர்க்காரின் கீழ் வகுப்புப் பிரச்சினையை என்றென்றைக்கும் தீர்த்துவிடலாம் :—

(1) ஹிந்து-முஸ்லிம் ஆகிய இருவருக்கும் தொல்லையைக் கொடுக்கிற "பர்மனெண்ட் செட்ல்மெண்ட்" * நிலச்சுவான்தாரி முறையை ஒழித்துவிட்டு, பரிபூரண ஜனநாயக ஆட்சியை ஸ்தாபிக்கவேண்டும்.

* "பர்மனெண்ட் செட்ல்மெண்ட்" (Permanent Settlement) பிரத்தியேகமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் ஏற்படுத்திய ஜமீந்தாரி முறை. வங்காளத்தில் இந்த முறை அதிகமாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட தொகையை வரியாக சர்க்காருக்கு வருஷாவருஷம் ஜமீன்தார் செலுத்திவிட வேண்டும். தன்னுடைய குடிகளிடமிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் அவர் வரியாக வசூலித்துக் கொள்ளலாம். இதனால், சர்க்காருக்கு செலுத்தும் வரியைவிட பன்மடங்கு அதிகமாக குடிகளிடமிருந்து ஜமீன்தார்கள் வசூலிக்கின்றனர். விவசாயிகளைப் பிழிபிழி என்று பிழிந்து விடுகிறார்கள். பெரும்பாலும் இந்த ஜமீன்தார்கள் ஹிந்துக்களாகவும் விவசாயிகள் முஸ்லிம்களாகவும் இருக்கிறார்கள். ஜமீன்தாருக்கு எதிராக விவசாயிகளிடம் ஏற்படுகிற வெறுப்பு. ஹிந்து முஸ்லிம்கள் கலகத்திற்கு காரணமாகிறது. இதை ஒழிப்பதால் ஹிந்து-முஸ்லிம் தகராறுக்கு வழியில்லாமல் போகிறது.

(2) ரஷ்யாவில் உள்ளதுபோல் இரண்டு சட்டசபைகளை அமைப்பது. முஸ்லிம்களுடைய மெஜாரிட்டியை ஊர்ஜிதம் செய்யும் வகையில் முஸ்லிம்கள் விரும்புகிறபடி கூட்டுத்தொகுதி மூலமோ, அல்லது தனித்தொகுதிமூலமோ சர்வஜன ஓட்டு எடுத்து, கீழ்சபையை (Lower House) தேர்ந்தெடுக்கவேண்டும். மேல் சபையை சமூகங்களின் சபை என்று கூறலாம். அதாவது ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சமமாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து இந்த சபையை அமைக்கவேண்டும்.

(3) ஐக்கிய வங்காள சர்க்கார் அதற்கும் மற்ற இந்திய யூனியன், வடமேற்கு பாக்கிஸ்தான் சர்க்கார் ஆகியவற்றிற்கும் இடையே பரஸ்பரஉதவியும், பொருளாதார ஒத்துழைப்பும்கொண்ட நல்லுறவு நிலவும் என்று உத்திரவாதம்செய்ய வேண்டும்.

> ***புத்தி பூர்வமாகவும், விஞ்ஞான ரீதியாகவும் இதுவே வழி. கலை மறுமலர்ச்சியின் பிதாவான—நம் தேசீய இயக்கத்தின் முன்னணிப் படையான—ஹிந்து வங்காளம், வங்க தேசத்தின் முதுகெலும்பான விவசாய முஸ்லிம்களுடன் இவ்விதம் ஒன்றுபட்டு, 1880-ல் மகோன்னத கவி பங்கிம் பாடிய "சப்தகோடி"யின் மகத்தான ஐக்கிய வங்காளத்தைக் கட்டவேண்டும்.***

இடைக்கால தேசீய சர்க்கார்

லீகைப் புறக்கணித்துவிட்டு தனியாக பிரிட்டாஷாருடன் காங்கிரஸ் சமரசம் செய்துகொள்ளுமோ என்ற சந்தேகம் இருந்த வரையில், ஜனப் ஜின்னுவுக்கு மனக் கஷ்டம் இருந்தது. "தேசீய சர்க்கார் வந்துவிடுமானல், பாக்கிஸ்தான்

என்னவாகும்?" என்று தொல்லைப்பட்டார். ஆதலின், "பாகிஸ்தான் இல்லாமல் தேசிய சர்க்கார் இல்லை" என்பதே அவருடைய கொள்கைக்கு அடிப்படையாக இருந்தது.

இப்பொழுது தேசிய சர்க்காரை அடைவதற்காக காங்கிரஸ்-லீக் ஐக்கிய முன்னணியை நிறுவ, முதலில் பாகிஸ்தான் பிரச்னையே தீர்க்கப்படுகிறது. ஆதலின், தேசிய சர்க்கார் கோரிக்கைக்கு ஜனாப் ஜின்னாவின் ஆதரவு கிடைக்குமா, கிடைக்காதா என்பதைப்பற்றி இனி கேள்விக்கே இடமில்லை.

தேசிய சர்க்கார் என்றால் யாருக்குப் பொறுப்பு வாய்ந்த சர்க்கார் என்று ஜனாப் ஜின்னா திரும்பத் திரும்பக் கேட்டு வந்திருக்கிறார். பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட சட்ட சபைக்கு அது பொறுப்புள்ளதாக இருக்கட்டும் என்று ஸ்டுவர்ட் கெல்டருக்கு அளித்த பேட்டியில் காந்திஜீ தெளிவாக்கியிருக்கிறார். 'காங்கிரஸின் ஆதிக்கம் அதிகமாகவுள்ள சட்டசபையில் லீக் பிரதிநிதிகளை அவர்களுக்கு மீறி நடக்காமல் அடக்கிவைத்திருக்கவே இந்த முயற்சி" என்பதாக ஆரம்பத்தில் ஜனாப் ஜின்னா நினைத்தார். "சட்ட சபைக்கு தேசியசர்க்கார் பொறுப்புள்ளதாக இருக்கவேண்டும்" என்ற கோரிக்கை உண்மையில் ஏகாதிபத்திய அதிகார வர்க்க எதிர்ப்பைப் பிரதிபலிக்கிறது அந்த தேசிய சர்க்கார் காங்கிரஸ்-லீக் கூட்டு சர்க்காராக இருக்கும்; அதற்கு ஏற்றாற்போல் சட்டசபையிலும் காங்கிரஸ்-லீக் கூட்டுக்கட்சி இருக்கும்; அந்த கட்சிக்குத்தான் தேசிய சர்க்கார் பதில் சொல்லவேண்டும்.

தேசிய சர்க்காரின் பிரதிநிதித்வம் ஒன்றும் பெரிய பிரச்னையாக இருக்காது என்று நினைக்க போதிய காரணங்கள் இருக்கின்றன. முஸ்லிம் லீகிற்கு பாதி ஸ்தானங்களைக் காங்கிரஸ் கொடுக்கலாம்; அவர்கள் இருவருமாக

சேர்ந்து மற்ற ஸ்தாபனங்களிலிருந்து சில தலைவர்களை அந்த சர்க்காரில் சேர்த்துக்கொள்ளலாம்.

பாக்கிஸ்தான் பிரச்சினையில்மட்டும் ஜனாப் ஜின்னா திருப்தியடைவாரேயானால், தேசீய சர்க்கார் பிரச்னையைப் பொறுத்தவரையில் மனப்பூர்வமாக காந்திஜியை ஜனாப் ஜின்னா ஆதரிப்பார். மேலும், ராஜாஜியின் திட்டத்தை காந்திஜி அங்கீகரித்திருப்பதோடு, தேசீய சர்க்காருக்காக ஜனாப் ஜின்னாவின் ஆதரவைப்பெற அந்தத் திட்டத்தைத் திருத்தவும் தயாராக இருக்கிறார். இப்பொழுது பாக்கிஸ்தான் தடங்கலைமட்டும் தாண்டிவிட்டோமேயானால், அடுத்த படியாக தேசீய சர்க்காருக்காக ஒன்றுபட்ட தாக்குதலை ஆரம்பிக்க வேண்டியதுதான்.

சமரசம் ஏற்பட்டால் என்ன லாபம்?

1919–20 லிருந்து உண்மையான ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை என்பது கனவாகவே இருந்து வந்திருக்கிறது. தங்களுடைய கடைசி கோரிக்கையான பாக்கிஸ்தானை நோக்கி மெதுவாக முன்னேறி அக்கட்டத்தை முஸ்லிம்கள் அடைந்துவிட்டனர். லீகின் அக்கோரிக்கையை காங்கிரஸ் அங்கீகரித்துவிட்டால், நாம் இதுவரை கனவில் கண்டதைவிட பன்மடங்கு சிரேஷ்டமான ஒரு புதிய சகாப்தம்தோன்றும்.

உலகிலே உள்ள முஸ்லிம் அரசுகளையெல்லாம்விட பெரியதானதொரு அரசாங்கத்திற்கு இந்திய முஸ்லிம்கள் அதிகாரிகளாவார்கள். (அம்பாலா டிவிஷனை நீக்கி) வடமேற்கு பாக்கிஸ்தான் நாட்டில்மட்டும் மொத்தம் மூன்று கோடி ஜனங்களுக்குமேல் இருப்பார்கள்; அதே சமயத்தில் மற்ற முஸ்லிம் நாடுகளில் கீழ்கண்ட ஜனத்தொகைதான் இருக்கும். ஈரான் 1 கோடி 80 லக்ஷம்; துருக்கி 1 கோடி 78 லக்ஷம்; எகிப்து 1 கோடி 60 லக்ஷம்; ஆப்கானிஸ்தானம்

1 கோடி; ஈராக் 35 லக்ஷம். முஸ்லிம் மெஜாரிட்டியைக் கொண்ட ஐக்கிய வங்காளம் 6 கோடி பேரைக்கொண்டிருக்கும். இதனால் முஸ்லிம் உலகமனைத்திற்குமே இந்திய முஸ்லிம்கள் வழிகாட்டிகளாக விளங்குவார்கள்.

பாக்கிஸ்தானை ஒப்புக்கொள்வது என்றால், நம் எண்ணப்போக்கிலேயே பெரிய மாறுதல் ஏற்பட்டாகவேண்டும். ஒன்றுபட்ட இந்தியா என்று பரம்பரையாக நாம் மனதில் கொண்டுள்ள நோக்கை பூரணமாக மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அதன் மூலம் இந்தியா முன்பிருந்ததைவிட பலமடைகிறதேயொழிய, பலஹீனமாகவில்லை. பலமிகுந்த, மனக்குறைவற்ற, சுதந்திர முஸ்லிம் நாடுகள், நம்முடைய வடமேற்கு எல்லையிலும், வடகிழக்கு எல்லையிலும் இருப்பது, நம் நாட்டிற்கு உயர்ந்த பாதுகாப்பாக இருக்கிறது. யூனியனில் சேர்ந்து பொதுவான அங்கத்தினராக இருந்தாலும் சரி, அல்லது ஒப்பந்தங்கள் மூலம் உறவு கொண்டிருந்தாலும் சரி, அவர்களுடன் நெருங்கிய நட்போடு இருப்போம் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுடைய சொந்த நலனை யுத்தேசித்தே அவர்கள் நம்முடைய உறுதியான நண்பர்களாகவும், பாதுகாவலர்களாகவும் இருப்பார்கள். இதற்கு முன்பு சரித்திரத்தில் என்றுமே இத்தகைய பக்கத்துவீடு தேச நண்பர்கள்—நம்முடைய சொந்த சகோதரர்கள்—நமக்கு இருந்ததில்லை. அவர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிக பலத்தை அளிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்குப் பாதுகாப்பு.

பாக்கிஸ்தான் அங்கீகரிக்கப்பட்டு, காங்கிரஸ்–லீக் சமரசம் ஏற்பட்டு விட்டதென்றால், அரசியல் முட்டுக்கட்டையை பாதிஅளவுக்கு உடைத்துவிட்டோம் என்றே அர்த்தம். காந்தி–ஜின்னா ஒப்பந்தம் என்பது, நம் மக்களின் விதி நம்முடைய நம்பிக்கைக்கு உரித்தான தலைவர்களின் கைக்கு

றுவிட்டது என்பதைக் குறிக்கும். சாதாரண ஜனங்கள்—ளிவற்ற முறையில்; ஆனால் உணர்ச்சி பூர்வமாக—தை உணர்கிறார்கள்; அதனால்தான் காந்தி—ஜின்னா சந்பு வெற்றிகரமாக முடியும் தினத்தை எதிர்நோக்கிர்சைப் பிடித்துக்கொண்டு காத்துக்கொண்டிருக்கிறார்கள். தைப் பார்த்து பரிகாசம் செய்யக்கூடிய 'மகானுபாவர்'கூட அது வெற்றியடைய வேண்டும் என்று விரும்புர்கள்.

காந்தி-ஜின்னா சந்திப்பு வெற்றி பெருவிட்டால்

அவர்களுடைய சந்திப்பு வெற்றி பெறாமல் தோற்றுவிட்ல் "ஏதோ நம்பினோம்; ஆனால் ஈடேறவில்லை" என்ருக்காது. ஏற்கனவேயே ஏகப்பட்ட நாசத்தை விளைவித்ருக்கும் மனச்சோர்வு இன்னும் பன்மடங்கு அதிகமாகும்.

"ஹிந்துக்கள் கொஞ்சங்கூட தங்களுக்கு செவிசாய்க்கட்டார்கள்" என்பதில் கொஞ்சங்கூட லீகர்களுக்கு சந்கமிருக்காது; இன்னும் மேலும் மேலும் அதிகமாக, பிடிபிடித்த வகுப்பு வாதிகளாகி விடுவார்கள்.

"ஜின்னா எதற்கும் இணங்காத பேர்வழி" என்பதில் ங்கிரஸ்காரர்களுக்குக் கொஞ்சங்கூட சந்தேகமிருக்காது; வருடனும் சேராமல் மேலும் மேலும் தனியாக செல்பகளாகி விடுவார்கள்; என்ன செய்வது என்று ஒன்றும் யாமல் மேலும் மேலும் திகைத்துக்கொண்டே இருப்ர்கள். இரண்டு சமூகத்தினரும் கண்மூடிகளாக குட்டிக்ணமடித்து மலையுச்சியிலிருந்து உருண்டு விழக்கூடியவர்ாகி விடுவர்.

அவர்கள் வெற்றி பெருவிட்டால் சந்தோஷப் படக்டியவர்கள் யார்? பல காரணங்களை யுத்தேசித்து அரசி ஸ்தம்பிப்பு நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்

களே—வெள்ளை அதிகாரவர்க்கம், போலீஸ் கும்பல், ஹிந்து
மகாசபையினர்.

அவர்கள் தோற்ருல், லக்ஷக்கணக்கான மக்களின்
துன்பம் நாளுக்கு நாள் பெருகும். பொது மக்களின் உண
வும், தினசரி வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்க
ளும், கள்ள சேமிப்புக் கொள்ளை லாபக்காரர்களா
பதுக்கப்பட்டு, மக்களுக்குக் கிடைக்காமல் மறைந்துவிடும்
பட்டினியால் இன்னும் லக்ஷக்கணக்கான மக்கள் மடிவார்
கள். கொள்ளை நோயால் வாரிக் கொண்டு போகப்படுவார்
கள். கோடிக் கணக்கானவர்கள் கண்ணீர்விட்டழுவார்கள்
நாம்—தேசபக்தர்கள்—மக்களை நேசிப்பவர்கள்—ஒன்று
செய்ய முடியாமல் கையைப் பிசைந்துகொண்டு நிற்போம்
மனசாக்ஷி குத்தித் தள்ளுகிறதே என்பதற்காக ஏதாவது
முடிந்ததை செய்யலாம் என்று சிலர் முன்வரலாம்.

அவர்கள் பேச்சுவார்த்தை முறிந்தால், யுத்த முடியும்
வரை ஸ்தம்பிப்பு நீடிக்கும். உலகில் மாபெரும் மாறுதல்
கள் தினேதினே ஏற்பட்டுவரும் மகோன்னதமான கா
ளில், உருப்படியாக தன்னுடைய பங்கை நிறைவேற்ற மு
யாது இந்தியா நிற்கும். மறுபக்கத்தில் பொருளாதார
துறையிலும், அரசியல் துறையிலும், தார்மீகத் துறையி
லும் நம்முடைய நாடு சுக்கல் சுக்கலாகப் பிளக்கப்பட்
சின்ன பின்னமாவதைப் பார்ப்போம்.

அவர்கள் ஒன்று படுவதற்குத் தவறினல், யுத்தம் முடி
யும் வரையில் பாக்கிஸ்தான் என்ரே, தேசிய சர்க்கா
என்ரே பேசவேண்டி யிருக்காது. நரகம் போன்ற வாழ்க்
கையை நடத்தி, ஒன்றும் செய்ய முடியாமல் திண்டாடி
ஏதாவது "மந்திரத்தை ஜபித்துக்கொண்டு" காலத்தை
கடத்த வேண்டியிருக்கும்.

அவர்கள்—**தலைவர்கள்**—ஒன்றுபடுவதற்கு **தவறக் கூடாது!** எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த அருமை யான சந்தர்ப்பம் இழக்கப்படக்கூடாது. எதுவானாலும் ரி, மாபெரும் ஆபத்து தவிர்க்கப்பட வேண்டும்.

நம் எல்லோருடைய நன்மையையும் உத்தேசித்து— 0 கோடி ஜீவன்களின் வாழ்க்கையை உத்தேசித்து—அவர் ள் **ஒன்றுபடுவதற்கு தவறக்கூடாது!** வெற்றி காணும் வரை, திரும்பத் திரும்ப விடாமல் முயற்சிக்க வேண்டும்!



வடமேற்கு பாகிஸ்தான் நாடு

அநுபந்தம்

I

ராஜாஜி—காந்திஜி திட்டம்

காந்திஜியால் ஒப்புக்கொள்ளப்பட்டு, ராஜாஜியால் ஜனுப் ஜின்னுவுக்கு அனுப்பப்பட்ட திட்டத்தில் கண்டுள்ள ஷரத்துகள் பின்வருமாறு:—

(1) சுதந்திர இந்தியாவிற்கான சட்ட திட்டங்களில் கீழ்கண்ட ஷரத்துகளுக்கு உட்பட்டு, இந்திய சுதந்திரக் கோரிக்கையை மூஸ்லிம் லீக் ஆமோதிக்கிறது; இடைக் காலத்தில் ஏற்படுகிற தேசீய சர்க்காரில் காங்கிரஸுடன் லீக் ஒத்துழைக்கும்.

(2) முஸ்லிம் மக்கள் மிகப்பெரிய மெஜாரிட்டியினராக வசிக்கின்ற—இந்தியாவிற்கு வடமேற்கிலும், வடகிழக்கிலும் தொடர்ந்தாற்போல் இருக்கிற பிரதேசங்களை வரையறுத்து எல்லைக் கோடிட—யுத்தம் முடிந்தவுடன் ஒரு "கமிஷன்" நிறுவப்படும். அவ்விதம் எல்லை வகுக்கப்பட்ட பிரதேசங்களில்—வயது வந்தவர்கள் எல்லோருக்கும் ஓட்டுரிமையுண்டு என்பதையோ அல்லது நடை முறையில் சாத்தியமான வேறு முறையையோ அடிப்படையாகக் கொண்டு—எடுக்கப்படும் பொதுஜன வாக்கின்படி, ஹிந்துஸ்தானை விட்டுப் பிரிந்துபோகும் பிரச்சினை கடைசியாக தீர்மானிக்கப்படும். ஹிந்துஸ்தானை விட்டுப்பிரிந்து தனியாக பூரணசுதந்திரமுள்ள சர்க்காரை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பெரும்பாலான ஜனங்கள் தீர்மானித்தால்—தங்கள் இஷ்டப்படி எந்தப் பக்கத்தில் வேண்டுமானலும்

சேருவதற்கு எல்லைப்புறத்திலுள்ள ஜில்லாக்களுக்குள்ள உரிமையை பாதிக்காமல்-அந்தத் தீர்மானம் நடைமுறையில் நிறைவேற்றப்படும்

(3) பொதுஜன வாக்கு எடுப்பதற்கு முன்பு, தங்கள் தங்கள் கொள்கைகளை விளக்கி எல்லா கட்சிகளும் பிரசாரம் செய்யலாம்.

(4) பிரிந்துபோவதாக இருந்தால், பாதுகாப்பு வியாபாரம், போக்குவரத்து முதலிய அவசியமான காரியங்களுக்காக, பரஸ்பர ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படும்.

(5) ஜனங்களாக விரும்பினால்தான் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு, அவர்களை மாற்றலாம்.

(6) இந்தியாவை நிர்வகிக்கும் பொறுப்பையும், பூர்ண அதிகாரத்தையும் பிரிட்டன் நம்மிடம் கொடுத்தால்தான், இந்த ஷரத்துக்கள் இருவரையும் கட்டுப்படுத்தும்.

II

லீகின் நோக்கம்

முஸ்லிம் லீகின் ஸ்தாபன அமைப்பு விதிகளில் இரண்டாவது விதியில் அதனுடைய லக்ஷியம் கீழ்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது :—

(i) பரிபூரண சுதந்திரமுள்ள ராஜ்யங்களை ஸ்தாபிப்பதுதான் முஸ்லிம் லீகின் லட்சியம். சேர்ந்தாற்போன்று, தொடர்ச்சியான பூகோளப் பகுதிகளில் வசிக்கும் தேசிய இனங்களைக் கொண்ட பிரதேசங்களை நிர்ணயிப்பதன் மூலம் இந்த சுதந்திர ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். மேலும், இன்றைக்குள்ள மாகாண எல்லைப் பிரிவினைகளில் வேண்டிய திருத்தங்களைச்செய்து, இந்தியாவின் வட..

மேற்குப் பிரதேசங்களிலும், வட கிழக்கு பிரதேசங்களிலும் உள்ளதுபோன்று, முஸ்லிம் மக்கள் பெருவாரியாக வசிக்கும் பிரதேசங்களை ஒன்றாக அமைத்து, அவைகளை முஸ்லிம்களின் சுதந்திரதாயகங்களாக, பூரணசுதந்திர ராஜ்யங்களாக அமைக்கவேண்டும்.

(ii) மேற்கண்ட சர்க்கார்களின் சட்டதிட்டங்களில், சிறுபான்மையோரை கலந்தாலோசித்து, அவர்களுடைய மதம், கலை, அரசியல், பொருளாதார நிர்வாக உரிமைகளுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்படும்.

(iii) இந்தியாவின் மற்றப் பகுதிகளில் வசிக்கும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கும் இதே பாதுகாப்புகள் அளிக்கப்படவேண்டும்.

★

அனுபந்தம் 2.

அட்டவணை 1

பிரிட்டிஷ் இந்தியாவில் வாழும் முஸ்லிம்களின் ஜனத்தொகை.

(ஸென்ஸஸ் 1941)

(எண்ணிக்கையெல்லாம் ஆயிரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.)

	சதுரமைல் விஸ்தீரணம்	மொத்த ஜனத்தொகை	மொத்த முஸ்லிம்கள்	மொத்த ஜனத்தொகையில் முஸ்லிம்கள் சதவிகிதம்
பிரிட்டிஷ் இந்தியா ...	8,65,446	2,95,808	79,398	26·84
சென்னை ...	1,26,166	49,342	3,896	7·90
பம்பாய் ...	76,443	20,850	1,920	9·21

வங்காளம் ...	77,442	60,306	33,005	54·73
ஐக்ய மாகாணம் ...	1,06,247	55,921	8,416	15·30
பஞ்சாப் ...	99,089	55,921	8,416	15·30
பீஹார் ...	69,745	36,340	4,716	12·98
மத்ய மாகாணமும் பிராரும்	98,575	16,814	784	4·66
அஸ்ஸாம் ...	54,951	10,205	3,442	33·73
எல்லைப்புற மாகாணம் ...	14,263	3,038	2,789	91·79
சிந்து ...	48,136	4,534	3,208	70.75
ஒரிஸ்ஸா ...	32,198	8,729	146	1·68
அஜ்மீர் மீர்வாரா ...	2,400	584	90	15·40
அந்தமான், நிகொபார் ...	3,143	34	8	23·70
பலுஜிஸ்தான் ...	54,456	502	439	87·50
குடகு ...	1,593	169	14	8·73
டெல்லி ...	574	918	305	33.22

அட்டவணை 2

ஜில்லாவாரியாக முஸ்லிம் ஜனத்தொகை

50 சத விகிதத்திற்குமேல் முஸ்லிம்கள் வாழும் ஜில்லாக்கள்	முஸ்லிம்களின் உண்மை சதவிகிதம் 1931	முஸ்லிம்களின் உண்மை சதவிகிதம் 1941	50 சத விகிதத்திற்குகீழ் முஸ்லிம்கள் வாழும் ஜில்லாக்கள்	முஸ்லிம்களின் உண்மை சதவிகிதம் 1931	முஸ்லிம்களின் உண்மை சதவிகிதம் 1941
1. நாதியா	61·6	61·67	1. பர்த்வான்	18·9	18·56
2. மூர்ஷிதாபத்	55·5	55·56	2. பீர்பும்	26·6	26·69
3. ஜெஸ்ஸோர்	62·0	61·16	3. பங்கூரா	4·7	4·59
4. ராஜஷாஹி	75 7	75·79	4. மிதுனபுரி	7·5	7·59
5. ரங்கபுரி	71·0	70·79	5. ஹூக்ளி	17·0	16·17
6. போக்ரா	83·5	83·36	6. ஹௌரா	21·1	21·27
7. பாப்னா	76·9	76·90	7. ஹௌராநகரம்	21·3	...
8. மால்டா	54·2	54·28	8. 24 பர்கானா	34·6	33·65
9. டாக்கா	69·8	66·81	9. டாக்கா நகரம்	41·3	...
10. மைமன்சிங்	76·6	76·56	10. கல்கத்தா	25·9	26·00
11. பரித்பூர்	65·1	63·80	11. கல்கத்தா சுற்றுப்புறம்	19.0	...
12. பாகர்கஞ்ச்	72·4	71·63	12. குல்னா	49·3	49·50
13. திப்பேரா	76·0	75·78			

14. நவகாளி	76·5	78·46	13. ஜல்பைகுரி	23·9	23·99
15. சிட்டகாங்	76·7	73·80	14. டார்ஜீலிங்	2·5	2·63
			15. தினஜ்பூர்	50·5	50·57

வங்காளத்திலுள்ள முஸ்லிம் ஜில்லாக்களின் விஸ்தீரணம் **45,523** சதுரமைல்கள். முஸ்லிம் ஜில்லாக்களை யெல்லாம் சேர்த்து முஸ்லிம் களின் மொத்த ஜனத்தொகை **2,87,03,192.**

அட்டவணை 3

அஸ்ஸாம்

ஜில்லாவாரியாக முஸ்லிம் ஜனத்தொகையின் சதவிகிதம்

50 சதவிகிதத் திற்குமேல் முஸ்லிம் கள் வாழும் ஜில்லாக்கள்	முஸ்லிம் ஜனத்தொகை உண்மை விகிதம் 1931	1941	50 சதவிகிதத் திற்குகீழ் முஸ்லிம் கள் வாழும் ஜில்லாக்கள்	முஸ்லிம் ஜனத்தொகை உண்மை விகிதம் 1931	1941
1, சில்ஹட்	59·2	60·71	1. கச்சார்	33·1	38·51
			2 காசியும் ஜாண் டிய மலைகளும்	·8	1·31
			3. நாகாமலை	·3	0·28
			4. லூஷிமலை	·06	0·07
			5. கோவல்பாரா	42·08	46·23
			6. காமரூபம்	24·9	29·07

7.	தௌரங்	11·3	16·42
8.	ஙௌரங்	31·1	35·19
9.	சிப்சாகர்	4·6	4·82
10.	லகிம்பூர்	5·4	4·98
11.	காரோமலை	5·2	4·65
12.	சாடியா எல்லைப் பிரதேசம்		1·44
13.	பலிபாராஎல்லை	1·4	0·94

சில்ஹட்டின் விஸ்தீரணம் 5,478 சதுர மைல்
முஸ்லிம் ஜனத்தொகை 18,56,117 „

அட்டவணை 4

எல்லைப்புற மாகாணம்

ஜில்லாவாரியாக முஸ்லிம் ஜனத்தொகையின் சதவிகிதம்

	ஜில்லா	மொத்த ஜனத்தொகை	மொத்த ஜனத்தொகையில் முஸ்லிம்களின் சதவிகிதம் 1931	1941
1.	ஹஸாரா	... 7,96,230	95·0	94·94
2.	பெஷாவர்	... 8,51,833	92·2	90·84
3.	கோஹாத்	... 2,89,404	92·4	92·00
4.	பன்னு	... 2,95,930	87·9	87·06
5.	தேரா இஸ்மெய்ல்கான்	... 2,98,131	86·0	85·78
6.	மார்தான்	... 5,06,539	...	95·46
	மொத்தம்	... 30,38,067	90·7	91.79

மொத்த முஸ்லிம் ஜனத்தொகை 27,88,797

5 அட்டவணை

பஞ்சாப்

ஜில்லாவாரியாக முஸ்லிம் ஜனத்தொகையின் சதவிகிதம்

பிரதேசம்	சதுரமைல் விஸ்தீரணம்	மொத்த ஜனத்தொகை (லக்ஷத்தில்)	மொத்த ஜனத்தொகையில் சதவிகிதம்		
			ஹிந்து	முஸ்லிம்	சீக்கியர்
பஞ்சாப் (சமஸ்தானங்கள் உள்பட	1,38,150	343	29·1	53·2	14·9
பிரிட்டிஷ் பஞ்சாப்	99,089	284	28	57	13
அம்பாலாடிவிஷன்*	17,750	47	66	27·6	2·4
ஹிஸ்ஸார்		10·06	64·85	28 33	6·03
ரோடாக்		9·56	81·60	17·22	·15
குர்கான்		8·51	77·42	32.49	·7
கர்னல்		9·94	66·93	30·58	2
அம்பாலா		8·47	48·41	31·64	18·44
சிம்லா		·38	76·38	4·73	2·67

* ரோபர், கார்ரார் தாசீல்களை இரண்டும் போக பாக்கி அம்பாலாவிலுள்ள 47 லட்சத்தில் 43·75 லட்சம் ஹிந்துஸ்தானி பேசுபவர்கள்.

பிரதேசம்	சதுரமைல் விஸ்திரணம்	மொத்த ஜனத்தொகை	ஹிந்து	முஸ்லிம்	சீக்கியர்
		மொத்த ஜனத்தொகையில் சதவிகிதம்			
ஜலந்தர் டிவிஷன்	18,892	54	40·7	30·4	24·4
ஜலந்தர்		11·27	17·57	45·17	26·44
லூதியானா		8·18	20·36	36·92	41·69
பெரோஸ்பூர்		14·23	19·62	45·08	33·68
காங்ரா		8·99	93·23	5·09	·57
ஹொஷியார்பூர்		11·7	40	36·64	16·92
லாகூர் டிவிஷன்	12,203	72·81	16·7	58	19·71
லாகூர்		16·95	16·81	60·69	18·29
அமிர்தசரஸ்		14·13	15·35	46·50	36·14
குருதாஸ்பூர்		11·53	24·55	50·23	19·18
சியால்காட்		11·90	19·41	62·10	11·70
குஜரன்வாலா		9·12	11·84	70·39	10·87
ஷெய்குபுரா		8·52	9·11	63·62	18·85
ராவல்பிண்டி டிவிஷன்	21,381	47	9	85·5	5
குஜராத்		11·04	7·61	85,6	6·55
ஜீலம்		6·29	6·48	89·51	3·12
ராவல்பிண்டி		7·85	10·50	80	8·16
அட்டாக்		6·75	6·32	90·52	2·97
ஷாபூர்		9·98	10·02	83·87	4·81
மியான்வாலி		5·03	12·23	86,17	1·37

முல்தான் டிவிஷன்	31,763	63·65	14·9	77	8
மாண்ட்கோமரி		13·29	14·36	69·07	13·91
லியால்பூர்		13·96	11·61	62·82	18.81
ஜாங்		8·21	15·71	82·58	1·49
முல்தான்		14·84	16·31	77·98	4·15
முஸாபர்கார்		7·12	12.69	86·52	·83
தேரா காஸிகான்		5·81	10.86	88·9	·17
பிலோச் ட்ரான்ஸ் பிராண்டியர் டிராக்ட்		·40	·8	99·2	

முஸ்லிம் ஜில்லாக்களின் மொத்த விஸ்தீரணம்—63,775 சதுரமைல்.

முஸ்லிம் ஜில்லாக்களில் மொத்த ஜனத்தொகை 1,23,23,585 „

அட்டவணை 6

சிந்து

ஜில்லாவாரியாக முஸ்லிம் ஜனத்தொகையின் சதவிகிதம்

ஜில்லா	மொத்த ஜனத்தொகை	முஸ்லிம் ஜனத்தொகையின் சதவிகிதம் 1931	முஸ்லிம் மொத்த ஜனத்தொகையின் சதவிகிதம் 1941
ஹைதராபாத்	7,58,748	69·5	66·9
கராச்சி	7,13,900	71·3	64·0

லர்காஞ	5,11,208	83·3	81·8
நவாப்ஷா	5,84,178	76·0	74·7
சுக்கூர்	6,92,556	70	70·9
தார்பார்க்கார்	5,81,004	52·5	50·2
மேல் சிந்து எல்லை	3,04,034	89·9	90·4
மொத்தம்	45,35,008	73·2	70·7

அட்டவணை 7

பலுஜிஸ்தான் *

	முஸ்லீம் ஜனத்தொகையின் சதவிகிதம்	
	1931	1941
பிரிட்டிஷ் பலுஜிஸ்தான்	87·0	87·50
பலுஜிஸ்தான் சமஸ்தானங்கள்	97·5	97·20

* மொத்த முஸ்லிம் ஜனத்தொகை 32,08,325